www.padippakam.com


# தொழிலாளர் பாதை

விலை 1/50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 39 ★ ஜூன், 1991 ★


**தொழிலாளர் பாதை**

பின்வரும் தொழிலாளர் பாதை இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்,

எண். 405 ஏப்ரல். 1991 புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் - இலங்கை -

எண். 39 ஜூன். 1991 சோசலிசத் தொழிலாளர் கழகம். - இந்தியா -



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட

# சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தேர்தல் அறிக்கை

- ★ தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்தை கட்ட!
- ★ தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை காக்க!
- ★ காஷ்மீர், பஞ்சாப், மற்றும் வட கிழக்கு பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்கு!
- ★ பாராந்திர்ந்த வழி அமைக்கும் கூட்டரசாங்கத்தில் சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. தலைமைகள் சேரும் முயற்சியை முறியடிக்க!
- ★ சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. ஸ்டாலினிச தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவை துண்டித்து, தொழிலாளர்-விவசாயி அரசாங்கம் அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்திக்க!
- ★ இந்திய துணைக்கண்டத்தில் ஐக்கிய சோசலிசக் குடியரசுகளை நிறுவ!
- ★ சோசலிச மற்றும் புரட்சிகர ஜனநாயக வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராட!


## சோசலிசத் தொழிலாளர் கழக வேட்பாளர்களான



வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு
பி. & சி. தொழிலாளி

**பி. மோசஸ்**

**தேர்தல் நாள்**
**15 - 6 - 1991**





வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு
ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிலாளி

**எம். கைலாசம்**

ஆகியவர்களை ஆதரித்து **ரயில் என்ஜின்** சின்னத்தில் முத்திரை இடுங்கள்!

டாட்டா, பிர்லாக்களின் முதலாளித்துவ கட்சிகளான—காங்கிரஸ், தேசிய முன்னணி, பி.ஜே.பி., தி.மு.க. அ.தி.மு.க. வேட்பாளர்களை **நிராகரியுங்கள்!** மற்றைய தொகுதிகளில் சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. வேட்பாளர்களுக்கு மட்டும் உங்கள் கண்டன வாக்குகளை **அளியுங்கள்!**

படிப்பகம்

www.padippakam.com



நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவிலுள்ள ட்ராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகம் ஜூன் 15,1991ல் நடக்க இருக்கும் மக்களவை, சட்டசபைத் தேர்தல்களில் தலையீடு செய்கிறது. வடசென்னை மக்களவைத் தொகுதியில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் வேட்பாளராக மூப்பபட்டிருக்கும் பி அண்டு சி மில் தொழிலாளியும் தொழிற்சங்க போராளியுமான தோழர் பி. மோசஸ் நிறுத்தப்பட்டுள்ளார். வில்லிவாக்கம் சட்டசபைத் தொகுதிக்கு சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் வேட்பாளராக இரண்டு வருடங்களுக்கு மேலாக கதவடைப்பு செய்யப்பட்டிருக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளியும், தொழிற்சங்க போராளியுமான தோழர் எம். கைலாசம் நிறுத்தப்பட்டுள்ளார்.

இத்தேர்தலில் சோசலிசத் தொழிலாளர் கழகம் தொடுக்கும் புரட்சிகர சர்வதேசியத்துக்கான, சோசலிசக் கொள்கைகளுக்கான பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவளிக்கும்படி அனைத்து தொழிலாளர்களையும், மாணவர்களையும், இளைஞர்களையும், வேலையற்றோரையும், விவசாயத் தொழிலாளர்களையும் இலலத்துப் பெண்களையும கேட்கிறோம்.

இத்தேர்தலில் தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்படும் பரந்த மக்களுக்கும் உண்மையை கூறும் ஒரே கட்சியும், வேட்பாளர்களும சோசலிசத் தொழிலாளர் கழகமும அதன் வேட்பாளர்களுமே தவிர வேறுயாருமல்ல. அதாவது தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும், குடும்பப் பெண்களும், ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனங்களும் சிறுபான்மைமதப் பிரிவைச் சேர்ந்தவர்களும் எதிர்கொள்ளும் வாழ்வா சாவா எனும பிரச்சினைகளுக்கு, காலாவதியாகி, திவாலடைந்துள்ள முதலாளித்துவ அமைப்பை வர்க்கப் போராட்ட முறைமூலம் கவிழ்க்காமல் தீர்வு காண முடியாது.

இன்றைய சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சமூக இன்னல்கள்—வேலையின்மை, வறுமை, வீடின்மை, கல்வியறிவின்மை, சத்துணவின்மை, ஆலைமூடல்கள், விலைவாசி ஏற்றங்கள், கொத்தடிமை முறை, இன, மதக்கலவரங்கள் — அத்தனையுமே இறுதி ஆய்வில் பார்க்கையில் சீரழியும் முதலாளித்துவ அமைப்பினால் ஏற்படுத்தப்படுபவை ஆகும். கோடானுகோடி தொழிலாளர்களின் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் மிக அடிப்படைத் தேவைகள் மிகக் கோரமாக டாடா, பிர்லாக்களின் லாபத் தேவையின் பலிபீடத்தில பலியிடப்பட்டுவருகின்றன.

இன்றைய ஆழமான முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி நிலைமையின் மத்தியில் தேர்தலுக்கு பின்னர் ஆட்சி அமைக்கும் எந்த ஒரு அரசாங்கமும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் ஏஜண்டுகளாக, தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு எதிராக இதற்கு முன் கண்டிராத தாக்குதல்களை தொடுப்பார்கள். இவ்வாறு முதலாளித்துவ நெருக்கடியின் சுமையை தொழிலாள வர்க்கத்தின் மேல்சுமத்துவதற்கு எதிராக வளர்ச்சி அடையும் வர்க்கப் போராட்டங்களை கட்டுப்படுத்தவும், பாசிச ஆட்சியை ஏற்படுத்துவதற்கான சமூக நிலைமைகளை உண்டுபண்ணவும் ஆளும் வர்க்கம் தொழிலாள வர்க்கத்தினுள் உள்ள சி.பி.ஐ.(எம), சி.பி.ஐ. துரோக தலைமைகளின் சேவைகளை பயன்படுத்திக் கொள்ள அவர்களை கூட்டரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள திட்டமிட்டுள்ளது.

தொழிலாள வர்க்கத்தின் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் எதிர்காலம் நிச்சயமாக இந்தத் தேர்தல் முடிவுகளில் தங்கியிருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவத்துக்கு எதிரான புரட்சிகரமான போராட்டத்தில் தொழிலாளவர்க்கத்தின் பிரமாண்டமான சமூக சக்தியையும் அதன் பின்னால் ஏழை விவசாயிகளையும், ஒடுக்கப்படும் பரந்த மக்களையும் அணிதிரட்டுவதில்தான் தங்கி இருக்கிறது,

இந்த முக்கியமான உண்மையை தொழிலாள வர்க்கத்துக்கு எடுத்துரைக்கவே 1991 தேர்தல்களில் சோசலிசத் தொழிலாளர் கழகம் தலையீடு செய்கிறது. பரந்தளவில் ஆலைமூடல்கள், ஆட்குறைப்புகள் சம்பள வெட்டுகள், வேலையின்மை, வறுமை ஏகாதிபத்திய வங்கியாளர்களின் நிபந்தனைகளுக்கு அடிபணிவு முதலிய நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரு புரட்சிகரமான சர்வதேசிய சோசலிச வேலைத்திட்டத்தை லட்சக்கணக்கான தொழிலாளர்கள், இளைஞர்கள முன் வைக்கவே நாம் தோழர்கள் மோசஸையும், கைலாசத்தையும் இத்தேர்தல்களில் நிறுத்தியுள்ளோம்.

சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் வேலைத்திட்டம் திவாலான முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை சீர்திருத்தம் செய்வதை இலக்காக கொண்டிருக்கவில்லை. மாறாக இந்த அமைப்பை கவிழ்ப்பதையே அதன் இலக்காக கொண்டுள்ளது. முதலாளித்துவ அரசியல்வாதிகளின் ஒரு அணியை அகற்றிவிட்டு அதனிடத்தில் மற்றொரு முதலாளித்துவ அரசியல்வாதிகளின் அணியை ஆட்சியில் ஏற்றவும், அவற்றின் ஒரு அணியுடன் கூட்டரசாங்கம் வைக்கவும் ஸ்டாலினிச சி.பி.ஐ.(எம்),சி.பி.ஐ தலைமைகளைப்போல முயற்சிக்கவில்லை. ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தின், நிலப்பிரபுக்களின் உடமைகளை சுவீகாரம் செய்து, சர்வதேச தொழிலாள வர்க்கத்துடன் புரட்சிகர ஐக்கியத்தை ஏற்படுத்தி, சோசலிச சமுதாயத்தை நிர்மாணிக்கவே போராடுகின்றது.

சோசலிசத் தொழிலாளர் கழகம் நான்கு அடிப்படையான கடமைகளை தொழிலாள வர்க்கத்தின் முன்னால் வைக்கிறது.

**1. முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் அனைத்து நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் சர்வதேச ஐக்கியத்தைக் கட்டல்!**

முதலாளித்துவம் ஒரு உலகப் பொருளாதார அமைப்பாகும். இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஒரு பகுதியாவார்கள். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர்கள் பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளின் சுரண்டலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவை பூகோள ரீதியாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன, பெருமளவு லாபங்களை தேடி ஒரு நாட்டிலிருந்து மற்றைய நாட்டுக்கு உற்பத்தியை மாற்றுகின்றன. அப்படியான பன்னாட்டு கம்பெனிகள் இந்தியா போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் மலிவான கூலியைத்தேடி, இந்திய முதலாளித்துவத்துடன் கூட்டு நிறுவனங்கள் அமைக்க வருகின்றனர். இந்தக் கம்பெனிகளின் தாக்குதலுக்கு எதிரான வெற்றிகரமான போராட்டத்தை சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. மாவோவாத கட்சிகளின் தேசியவாத கொள்கையின் அடிப்படையில் செய்ய முடியாது. பூகோள ரீதியில் இயங்கும் ஏகாதிபத்திய கம்பெனிகளின், அவற்றின் கூட்டு நிறுவனங்களின் தாக்குதல்களை எதிர்கொள்ள இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் முக்கியமாக ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தொழிலாளர்களுடன் போராட்டத்தில் ஐக்கியப்பட வேண்டும் அவர்களுடைய நாடு, மொழி, நிறம், மதம் எதுவாக இருந்தாலும் தொழிலாளர்கள் பொதுவான நலன்களின் அடிப்படையில் ஒரே முதலாளித்துவ எதிரியுடன் தான் மோதுகின்றனர்.

இதற்காக சர்வதேசிய புரட்சிகர மூலோபாயத்தை வகுக்க வேண்டும்.

**2. இந்திய துணைக்கண்டத்தில் ஐக்கிய சோசலிசக் குடியரசுகளை உருவாக்கல்**

இரண்டாம் உலகப் போரின் பிற்பாடு துணைக்கண்டத்தில் ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட "சுதந்திர அரசுகளுக்கு" எதிராக தொழிலாளர்களும், விவசாயிகளும், ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனங்களும் கிளர்ச்சி இயக்கத்திலும், உள்நாட்டு யுத்தத்திலும் ஈடுபட்டுள்ளார்கள் அக்டோபர் புரட்சியின் குழிபறிப்பாளன், சலுகை நிறைந்த ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தின் தலைவனான ஸ்டாலினின் வழிகாட்டுதலின்கீழ் இந்தியா, இலங்கையைச் சேர்ந்த ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் ஆதரவுடன் 1947ல் இந்திய துணைக்கண்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், இந்திய முதலாளித்துவமும், எதிர்புரட்சி சதிசெய்து இந்தியப்பிரிவினை என்ற ரத்த வெள்ளத்தில் மதவகுப்புவாத அரசுகளை உருவாக்கினர். அதேபோல் 1948ல் இலங்கையில் இனவாத அரசு உருவாக்கப்பட்டது. இந்தியத் துணைக்கண்டம் இன்று பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இருந்து கொண்டிருக்கிறது இத்தகைய அரசுகளினால் ஒடுக்கப்படும காஷ்மீர், தமிழ் ஈழம் போன்ற சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும சிறிய மொழி, மதப்பிரிவினரின் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் அங்கீகரித்தல்; ஏகாதிபத்தியத்திற்கும அதன் அரசியல் ஏஜண்டுகளாக செயல்படும் தேசிய முதலாளித்துவ ஆட்சிகளுக்கும் எதிரான போராட்டத்தில் புரட்சிகர சர்வ தேசிய கொள்கையின், சோசலிசக் கொள்கையின் அடிப்படையில் துணைக்கண்டத் தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்தி, மதவகுப்புவாத அரசுகளைத் தகர்த்தெறிந்து உலக சோசலிச குடியரசுகளை நிறுவும போராட்டத்தின் ஒரு பகுதியாக துணைக்கண்டத்தில் ஐக்கிய சோசலிசக் குடியரசுகளை அமைக்கப் போராடல்.

### 3. காஷ்மீர், பஞ்சாப், மற்றும் வடகிழக்கு பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்கு !

இந்திய அரசு நடத்தும் தேசிய ஒடுக்குமுறை யுத்தங்களை சோசலிசத் தொழிலாளர் கழகம வன்மையாக எதிர்ப்பதுடன் காஷ்மீர்: பஞ்சாப், அஸாம் மற்றும் வடகிழக்கு பகுதிகளிலிருந்து இந்திய முதலாளித்துவ இராணுவங்களை நிபந்தனையின்றி உடனடியாக வாபஸ் வாங்கும்படி கோருகிறது. இந்த யுத்தங்கள் இந்தியாவின் தேசிய ஐக்கியம், இறையாண்மை என அழைக்கப்படுவனவற்றை பாதுகாப்பதற்காக அல்ல, நிராயுத பாணியான மக்களை ஒடுக்குவதற்கான மனிதப் படுகொலை யுத்தங்களுக்கும் தேசிய ஒடுக்குமுறை யுத்தங்களுக்கும். மத ஒடுக்குமுறை யுத்தங்களுக்குமாகும்.

தொழிலாள வர்க்கத்தின் சார்பாக சோசலிசத் தொழிலாளர் கழகம் பிரகடனம் செய்வதாவது: பஞ்சாபிகள், காஷ்மீரிகள், அஸாமியர்கள் அல்லது வேறு எந்த சிறிய தேசிய இனத்தவருடனோ, அல்லது மதப்பிரிவினருடனோ எமக்கு யுத்தம் ஏதுமில்லை. அவர்களையும், அவர்களது ஜனநாயக உரிமைகளையும பாதுகாக்க வேண்டியது தொழிலாள வர்க்கத்தின் கடமையாகும்.

இந்த மனித படுகொலை யுத்தங்கள் தொடர்பாக தொழிலாள வர்க்கத்தின் சுலோகம் இந்த யுத்தத்திற்கு ஒரு பைசாவோ, ஒரு மனிதனையோ வழங்கக்கூடாது என்பதாக இருக்க வேண்டும். உங்களது துப்பாக்கிகளை உங்களது வர்க்க சகோதரர்களுக்கு எதிராக திருப்பாது உங்கள் உண்மையான எதிரியான முதலாளித்துவ இந்திய அரசாங்கத்துக்கு எதிராக திருப்புங்கள். தேசிய ஒடுக்குமுறை யுத்தங்களின் போது தொழிலாள வர்க்கம் அதன் 'சொந்த' முதலாளித்துவ அரசின் தோல்விக்காக பாடுபட வேண்டும்.

### இந்திய—பாகிஸ்தான் யுத்தத்தை நிராகரி !

அதேபோல் இந்தியா, பாகிஸ்தான் முதலாளித்துவ அரசாங்கங்களின் யுத்த முழக்கங்கள் தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் தொழிலாளர்கள் அதே புரட்சிகர தோற்கடிப்புவாத நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் தொழிலாளர்களுக்கு இடையில எந்த பகையும் கிடையாது. அவர்கள் ஒருவரை ஒருவர் கொல்ல மறுக்க வேண்டும் டில்லியிலும்,இஸ்லாமாபாத்திலும் உள்ளவை முதலாளித்துவ அரசாங்கங்களாகும் எதிர்காலத்தில் ஒரு யுத்தம் வெடிக்குமாயின் இந்த இரு அரசாங்கங்களின் இராணுவத்தினர் அவர்களது துப்பாக்கிகளை பட்டினியில் வாடும் இரு நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கு எதிராக அல்ல மாறாக அவர்களை சுரண்டுபவர்களுக்கு எதிராக துப்பாக்கிகளை திருப்ப வேண்டும். இத்தகைய புரட்சிகர தோற்கடிப்புவாத கொள்கை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மத யுத்தங்களை நிறுத்துவதற்கும்,இந்திய பாகிஸ்தானைச் சேர்ந்த மக்களை ஒரு சோசலிச குடியரசினுள் கொண்டு வருவதற்குமான நிலைமையை உருவாக்கும். இந்தியாவிலும். பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்டுவதன் மூலமே இதனை உத்தரவாதம் செய்ய முடியும.

இந்திய அரசாங்கத்தின் யுத்தங்களுக்கு சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் எதிர்ப்பானது ஒருபொழுதும் குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின், மதக் குழுக்களின் கொள்கைகளுக்கும், வேலைத்திட்டங்களுக்கும எமது அரசியல் ஆதரவை அர்த்தப்படுத்தாது, அத்தகைய அமைப்புகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மதக்குழுக்கள் நடுவே உள்ள ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கு குருட்டு பாதையை காட்டுபவையும், பிற்போக்கானவையுமாகும்.

காலிஸ்தான் எனப்படும் மத ரீதியான அரசு அமைக்கும் பிற்போக்கு வேலைத்திட்டத்தையும், காஷ்மீரில் இஸ்லாமிய அடிப்படை வாதத்தையும் நிராகரிக்கும்படி அழைக்கின்றோம். இப்படியான குட்டி முதலாளித்துவ குழுக்கள் தமது சொந்த சலுகைகளுக்கான ஆதிக்க பிரதேசங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இப்படியான அனைத்து பிற்போக்கு தேசியவாத வேலைத்திட்டங்களுக்கும் எதிராக சோசலிசத் தொழிலாளர் கழகம் துணைக்கண்டத்தில் ஒரு சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன் வைக்கிறது.

இந்தியா முழுவதும் அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்யும்படி சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவுகின்றது.

**4. தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்துக்காக போராடல்**

தொழிலாள வர்க்கம் அதன் அரசியல் அதிகாரத்தை நிறுவ வேண்டுமாயின் முதலாளித்துவ அரசியலில் இருந்து முழுமையாக சுதந்திரமாகவும் அதற்கு எதிராகவும் சளைக்காது போராட வேண்டும், பிற்போக்கு வர்க்கக் கூட்டு மக்கள் முன்னணி கொள்கையின் வழியில் சி.பி.ஐ.(எம்),சி.பி.ஐ.

(7ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# போக்குவரத்து தொழிலாளர்கள் மேல் துப்பாக்கிச் சூடும் தொழிற்சங்கத் தலைமைகளின் காட்டிக் கொடுப்பும்!

**வேலூரில் கடந்த மாதம் 6ம் தேதி பஸ் போக்குவரத்து தொழிலாளர்கள்மீது முதலாளித்துவ அரசு எந்திரமான போலீஸ் நடத்திய காட்டுமிராண்டி தனமான துப்பாக்கி சூட்டையும், தடியடி பிரயோகத்தையும், பணம், நகை போன்ற பொருட்களை கொள்ளையடித்தல் போன்ற ஈனதனமான செயல்களையும் சோசலிசத் தொழிலாளர் கழகம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றது.**

மே 6. 1991ல் போலீசில் அடாவடித்தனமான, கீழ்த்தரமான நடவடிக்கையை போக்குவரத்து தொழிலாளர்கள் எதிர்த்ததற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக, வேலூர் போக்குவரத்து தொழிலாளர்கள் மேல் போலீசார் மிருகத்தனமான கோர தாக்குதலை நடத்தி உள்ளனர். வேலூரில் உள்ள அனைத்து போலீஸ் படையும் ஆயுதம் தாங்கிய வண்ணம் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு எதிராக நடத்திய துப்பாக்கி சூட்டில் ராஜாராம் என்ற இளம் தொழிலாளி கொல்லப்பட்டதுடன் 350க்கும் அதிகமான தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

இந்த போலீஸ் படுகொலைக்கும், பெருமளவில் பேருந்துகளை நாசமாக்கியதற்கும், வேலூர் பஸ் டெப்போவை அடித்து நொறுக்கியதற்கும், தொழிலாளர்களின் உடைமைகளை கொள்ளையடித்ததற்கும் பதிலளிக்கும் வகையில் தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்கள் ஒரு கால வரையற்ற பொது வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.


இந்த வேலை நிறுத்தப் போராட்டம், இந்திய முதலாளித்துவ கட்சிகளுடன் ஒரு கூட்டரசாங்கத்தில் சேருவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்யும் சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. தலைமைகளைக் கொண்ட துரோகத்தனமான தொழிற் சங்கத் தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டது.

ஸ்டாலினிஸ்டுகளின் இந்த கிரிமினல் காட்டிக் கொடுப்பானது ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்புகின்றது. அது இந்த துரோகத் தலைமைகளுக்கு எதிராக ஒரு புதிய புரட்சிகரமான தலைமையை காட்டுவதாகும்.

இந்தியாவில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களில் தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டம் முக்கியமான ஒன்றாகும். வேலூர் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு எதிரான மிருகத்தனமான போலீஸ் தாக்குதலானது ஒரு போலீஸ், இராணுவ சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கம் தொழிலாள வர்க்கத்துக்கும், விவசாயிகளுக்கும் எதிராக தொடுக்கப்படும் எதிர்ப் புரட்சிகர தாக்குதலின் ஒரு பகுதியாகும்.

தமிழ்நாடு தழுவிய அனைத்து போக்குவரத்து தொழிலாளர்களின் தன்னெழுச்சியான காலவரையற்ற பொதுவேலை நிறுத்தப் போராட்டமானது, இந்த புரட்சிகர தாக்குதலுக்கு ஒரு சவாலாகும். இது பொது வேலை நிறுத்தத்தை சூழ அனைத்து தொழிலாள வர்க்கத்தையும், விவசாயிகளையும் அணிதிரட்ட வேண்டியதன் அவசியத்தை முன்வைக்கிறது.

இப்படியான புரட்சிகரமான அணிதிரட்டலை கண்டு ஸ்டாலினிச சி.பி.ஐ(எம்), சி.பி.ஐ தலைமைகள் அஞ்சுகின்றன. இதனால் தான் வேலை நிறுத்தத்தை திட்டவட்டமாக காட்டிக் கொடுத்தனர், எவ்



வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தொழிலாளர்களை மறுபடி வேலைக்கு திரும்பச் செய்தனர். இல்லாமல் போனால் போலீசார் அவர்களைத் குற்றத்திலிருந்து தப்பிக்க அனுமதித்தார். இதற்கு காரணம் இந்த ஸ்டாலினிச தலைமைகள் முதலாளித்துவ அமைப்பை கட்டிக் காக்க தம்மை 'அர்ப்பணம்' செய்திருப்பதனாலாகும்.

இந்தக் காட்டிக் கொடுப்பு தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான அபாயத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களில் இந்த துரோகத் தலைமைகள் முதலாளித்துவ வர்க்கத்தின்



ஏஜண்டுகளாக செயல்பட்டு முதலாளித்துவ அரசின் ஆயுதப் படைகள் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக மேலும் கோரத் தாக்குதலை நடத்தவும், உள்நாட்டு யுத்தங்களை நடத்தவும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதையே நிரூபித்துள்ளது.

இப்படியான காரணங்களால் இந்த வேலை நிறுத்தப் போராட்ட படிப்பினைகளை தொழிலாள வர்க்கம் மிகக் கவனமாக ஆய்வு செய்து அவசியமான அரசியல் முடிவுகளுக்கு வரவேண்டும்.

## வேலை நிறுத்தம் தொடங்கியது எப்படி?

இந்தச் சம்பவம் ஒரு போக்குவரத்து போலீசின் ஆத்திர மூட்டலின் விளைவாக ஏற்பட்டது.

6-5-91 அன்று காலை 5-20 மணியளவில் பஸ் ஸ்டாண்டிலிருந்து சென்ற திருவண்ணாமலை செல்லும் பஸ்ஸில் கைக் குழந்தையுடன் வண்டியை நிறுத்தச் சொல்லி ஓடிவந்த பெண் மணிக்கு மனமிரங்கி வண்டியை நிறுத்தினார் டிரைவர் கணேசன், அப்பொழுது போக்குவரத்து போலீஸ் தகாத வார்த்தைகளால் திட்ட, கண்டக்டர் மரியாதையாகப் பேசுங்க, என்று கேட்டும் அந்த போலீஸ் தரக்குறைவாகப் பேசியதுடன், கண்டக்டரை பலவந்தமாக பஸ்ஸிலிருந்து இழுத்து, ஆட்டோவில் ஏற்றிச் சென்று வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் வைத்து அடித்திருக்கின்றனர். ஏனைய பஸ் தொழிலாளர்கள் இதற்கு கண்டனம் தெரிவித்து பஸ்ஸை நிறுத்தவும், போலீஸ் இன்னும் வெறி கொண்டு—கிருஷ்ணா நகரில் இருக்கும் டெப்போவில் சென்று உள்ளிருந்த தொழிலாளர்களை அடித்து நொறுக்கி துப்பாக்கிச் சூடும் நடத்தியது. காலை 8-30 மணிக்கு கொண்டு வந்து குவிக்கப்பட்ட ஆயுத போலீஸ்படை. (ARP பணிமனை வாசலில் தோரணம் கட்டுவதற்கு குவிக்கப்பட்டிருந்த செங்கற்களை வீசியும், சோடா பாட்டில்களை வீசியும் ஆத்திரமூட்டல் செய்திருக்கின்றனர். பகல் 1-30 மணி அளவில் டெப்போவினுள் உள்ள தொழிலாளர்களின் மண்டை, கை, கால்களை அடித்து, எலும்பை முறித்ததுடன், துப்பாக்கியாலும் ஐந்நூறு ரவுண்டுகள் சுட்டு அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். அத்துடன் மட்டுமில்லாது வேலூர் பஸ்டாண்டில் சாலைகளில் ஆங்காங்கு சென்ற பட்ட காக்கிச்சட்டை அணிந்த அனைவரையும் வகைதொகை தெரியாமல் அடித்து நொறுக்கியிருக்கின்றனர். இந்த அராஜகம் மேலும் மருத்துவமனையிலும் நடைபெற்றதாகத் தெரிகிறது.

கிருஷ்ணாநகர் டெப்போவினுள் லத்தியினாலும், இரும்பு பைப்புகளாலும் தாக்கிய போலீசார் தொழிலாளர்களின் கைக்கடிகாரங்கள், மோதிரங்களை, கண்டக்டர்களின் பணப்பைகளை, டெப்போவில் இருந்த கலெக்ஷன் பணத்தையும் சூறையாடியதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கூறியுள்ளனர். காயம்பட்டு மருத்துவமனையில் 350க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சேர்ந்துவிடவே, அவர்களில் பலரை காயம் குணமடையு முன்னரே 'டிச்சார்ஜ்' செய்து அனுப்பும்படியும் நிர்ப்பந்தித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டியது என்னவென்றால் தொழிற்சங்க தலைவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதில் போலீசாருக்கு அக்கறை இல்லை. மாறாக தொழிலாளர்களின் எதிர்ப்பை ஒரு ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினால் நசுக்குவதே ஆகும், மாவட்ட கலைக்டர் தொழிற்சங்கத் தலைவர்களுடன் வேலை நிறுத்தத்தை தீர்ப்பது பற்றி பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கையில் போலீசார் உண்மையில் திட்டமிட்ட ஒரு தாக்குதலுக்கு தயார் செய்து கொண்டிருந்தனர். பேச்சு வார்த்தையில் ஒரு உடன்பாட்டுக்கு வந்து கையெழுத்து போடுவதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கும் போதே, போலீசாரை பிரதிநிதித்துவம் செய்த போலீஸ் சூப்பிரடெண்ட் ஒரு 'அவசர செய்தியை' பெறப்போகும் சாக்கில் பேச்சு வார்த்தை மேசையிலிருந்து எழுந்து சென்றார். இந்த 'அவசர செய்தி' என்னவென்பது மிகத் தெளிவானது, அது ஒரு முழு அளவிலான தாக்குதலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்குத் தயார் செய்வதாகும். மருத்துவர்களின் தொழிலாளர்களால் கைவிடப்பட்ட பஸ்களை தொழிலாளர்களின் எதிர்ப்பின் நடுவே போலீசார் தொடர்ந்து அகற்றிக் கொண்டிருந்தனர். வேலூர் போக்குவரத்து தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் பின்னர் ஒரு தமிழ்நாடு தழுவிய வேலை நிறுத்தமாக வளர்ச்சி கண்டது.

இச்சம்பவம் தற்செயலான ஒன்றல்ல; ஆனால் இந்தியத் தொழிலாள வர்க்கத்தை நசுக்குவதற்காக முதலாளித்துவ அரசினால் தயாரிக்கப்பட்ட எதிர்ப் புரட்சிகரமான திட்டங்களின் ஒரு பகுதியாகும். இதன் பின்னணியில் இருப்பது இந்திய முதலாளித்துவ வர்க்கம் எதிர்கொண்டுள்ள மோசமான நெருக்கடியாகும். சர்வதேசிய முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பகுதியாக இந்திய முதலாளித்துவ பொருளாதாரம் உடனடி



நிதி திவாலை எதிர் கொண்டுள்ளது. தற்போது வெளிநாட்டு செலாவணி இருப்பு முழுமையாக திவாலாகி உள்ள நிலையில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கும் ஏகாதிபத்திய வங்கிகளின் நிதி உதவியிலேயே தங்கியுள்ளது. உடனடியாக பட்ஜெட் பற்றாக் குறையையும், வட்டி செலுத்துகையையும் சமாளிப்பதற்கு டெல்லி அரசாங்கத்திற்கு உடனடியாக ரூ. 10 ஆயிரம் கோடி தேவைப்படுகிறது. உலக வங்கியும், ஐ.எம்.எப் வும் புதிய கடன்களை வழங்குவதற்கு நிபந்தனைகளை விதித்துள்ளன. அதாவது அவற்றின் நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றும் ஒரு முழுமையான பட்ஜெட் தயார் செய்த பின்னரே புதிய கடன் வழங்கப்படும்.

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் நிபந்தனைகள் இதுவரையில் தொழிலாள வர்க்கம் அதன் முழு வரலாற்றிலும் போராடிப் பெற்ற

(5ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில்!

### ராஜீவ்காந்தி கொலையின் பின்னணியில்

காங்கிரஸ் (இ)யின் தலைவரும், முன்னால் இந்திய பிரதமருமான ராஜீவ் காந்தியின் குரூரமான மரணம் நேரு குடும்ப வழி ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. மேலும் இது உலக அரசியலின் வெடிக்கும் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. இறுதி ஆய்வில் பார்க்கையில் ராஜீவ்காந்தி படுகொலைசெய்யப்பட்டதானது, உலக முதலாளித்துவத்தின் இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய ஒழுங்கு, முழுமையாக உடைந்து போனதை எடுத்து காட்டுகிறது.

ராஜீவ்காந்தியும் இதர பதினென்கு பேரும் மே 21 இரவு சக்தி வாய்ந்த வெடிகுண்டினால் கொல்லப்பட்டனர். சென்னையில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீபெரும்பதூர் பகுதியில் தேர்தல் கூட்டம் ஒன்றில் ராஜிவ் காந்தி பேச சென்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. குண்டு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்ததால் ராஜீவ் காந்தியை அவருடைய உடைகளை வைததே அடையாளம் காணமுடிந்தது.

இந்திய முதலாளித்துவ ஜனநாயகத்தின 43 வருட கால வரலாற்றில் மிகவும் பலாத்காரம் நிறைந்த தேர்தலின் இறுதி நாட்களின் போது, ஜாதி, மத, தேசிய பகைமைகளின் வெடிப்புகளின் மத்தியிலுமே இந்த கொலை நடைபெற்றது. தேர்தலில் காங்கிரஸ கட்சி ராஜீவ் காந்தியின் தலைமையில் அதிகமான தொகுதிகளை வெல்லுவதற்கு சாதகமான நிலமை இருந்த பொழுதிலும் அது அறுதி பெரும்பான்மையை பெற முடியாது என்று எதிர்பார்க்கப்பட்டது. அது ஒரு ஊசலாடும் பாராளுமன றத்தை உருவாக்கும் ஒரு ஆழமான அரசியல் நெருக்கடியையே தோற்றுவிக்கும். கடந்த 18 மாதங்களில் 3 அரசாங்கங்களின் வீழ்ச்சியில் இந்நெருக்கடி பிரதிபலித்தது.

ராஜீவ் காந்தியின் மரணம் காங்கிரஸ் கட்சி உடைவதையும், மேலும் இந்தியா உடைவதையும் மூடுக்கி விடும். ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு பிறகு இந்தியாவில் தேசிய, மத, ஜாதி கோடுகளை கடந்து ஒரு தேசிய. தொகுதியில் நிற்கக் கூடிய எந்தவொரு முதலாளித்துவ அரசியல்வாதியும் கிடையாது.

சுதந்திரம் என்றழைக்கப்பட்டு 43 வருடங்கள் கடந்து விட்டது. ஆனல் இந்திய மக்களின் நலன்களை முன்னெடுக்க எந்தவொரு வேலைத் திட்டமும் இல்லாமல் காங்கிரஸ் கட்சியானது நேரு—காந்தி குடும்பத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது.

பழைய ஒழுங்கை ஒன்றாக கூட்டி வைத்திருக்கும் ஆற்றௌ முயற்சியை புதுடில்லியில் கூடிய ஊழல் நிறைந்த முதலாளித்துவ காங்கிரஸ்தலைவர்கள் ராஜீவ் காந்தியின்மனைவியான சோனியாவின் விருப்பத்தை அறிந்து கொள்ளாமலே அவளை காங்கிரஸ் கட்சியின் த்லைவர் பதவிக்கு நியமித்தனர். ஆனால் அவர் தனது தலையை அந்த பலிபீடத்தில் வைக்க மறுத்தார்.

நாட்டை குடைந்து கொண்டிருக்கும் ஆழமான பொருளாதார சமூக நெருக்கடியின் நேரடி விளைவாகவும்,1947ல் ''சுதந்திரம்'' என்ற போர்வையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய முதலாளித்துவத்தின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட ஆட்சி செயல் நுட்பங்கள் உடைந்து போனதன் விளைவாகவும் இந்த கொலை நடைபெற்றுள்ளது. இரண்டாம் உலக போருக்கு பிந்தைய உடன்பாடுகளின் மூலம் இந்திய துணை கண்டத்தில் உருவாக்கப்பட்ட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை முதலிய அணைத்து நாடுகளுமே ஆழமான சமூக நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

### இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய ஒழுங்கின் உடைவு

கொலை சம்பந்தமாக அமெரிக்க ஜனதிபதி புஷ் முதன் முறையாக கருத்து தெரிவிக்கையில் ''உலகம் எங்கே செல்கின்றது என்பது பற்றி எனக்கு தெரியவில்லை' என்றார். புஷ், சி.ஐ.ஏ ஆன் முன்னைய தலைவராக இருந்தவர் ராஜீவ்காந்தியின் பயங்கரமான தலைவிதி பற்றி அதிர்ச்சி அடைந்தார் என்பதை ஏற்றுக் கொள்வது கடினமே

உண்மையில், நன்கறிந்த வட்டாரங்கள் இந்தக் கொலையில் அமெரிக்கத் தலையீடு பற்றி சந்தேகிக்கின்றன, ஆனல் சந்தேகத்திற்கு இடமின்றி அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் வழக்கம் போல், அரசியல் ஸ்திரமற்ற தன்மையை பயன்படுத்தி இப்பிராந்தியத்தில் தனது நலன்களை முன்னெடுக்க முயலும். கடந்த மாதம் தான், அண்மை நாடான பங்களாதேஷில் வெள்ள அழிவு நிலைமைகளை புஷ் நிர்வாகம் சாதகமாக பயன்படுத்தியது. வங்காள விரிகுடாவில் ''மனிதாபிமான அக்கறைகள்'' என்ற போர்வையில் அமெரிக்க இராணுவ படைகளை அங்கேநிறுத்தியது.

எவ்வாறாயினும் புஷ்ஷின் உடனடியான எதிர்த்தாககம் நேர்மை இல்லாமல் இல்லை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய நலன்களை பாது காக்கும் முக்கிய பொறுப்பிலுள்ள புஷ் உணர்வு பூர்வமாக ஒன்றை அறிந்து கொண்டார். அதாவது ராஜீவ்காந்தியின் மரணம் இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய ஏகாதிபத்திய ஒழுங்கின் மற்றொரு அஸ்திவாரத்தையும் அழித்து விட்டது என்பதாகும் (முக்கியமான முதலாவது அஸ்திவாரமான ஸ்டாலினிசமும் அழிந்து போயிற்று).

இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய ஒழுங்கின் மையத்தில், மத அடிப்படையில் இந்திய துணைக்கண்டம் கொடூரமான பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டது, பாகிஸ்தான் என்ற இஸ்லாமிய அரசும், இந்து மேலாதிக்கம் நிறைந்த இந்திய அரசும் உருவாக்கப்பட்டது. இந்தப் பிரிவினையானது உண்மையான சுதந்திரத்தை அடையவும் மக்களின் அடிப்படையான எந்தவொரு ஜனநாயக கோரிக்கைகளை நிறைவேற்றவும் தேசிய முதலாளித்துவம் முழுமையாக திறனற்றது என்பதையே எடுத்துக் காட்டுகிறது, ஏனென்ருல் இப்படியான கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் தங்கியிருக்கும் முதலாளித்துவ சொத்து உறவுகளை தூக்கி வீச வேண்டும்.

அதனல்தான், நேரு காந்தியின் தலைமையின்கீழ் காங்கிரஸ் கட்சியில் அணிதிரட்டப்பட்ட இந்திய தேசிய முதலாளித்துவம், நூற்றுண்டுகளாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கையாண்ட பிரித்தாளும் தந்திரோபாயங்களை பயன்படுத்தியது. அவர்களுக்கு இடையில் என்னதான் வேறுபாடுகள் இருந்தாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளித்துவ காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையில் ஒரு அடிப்படையான ஐக்கியம் உண்டு, அது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் ஒரு வெற்றிகரமான சோசலிசப் புரட்சியில் முடிவடைந்து விடும் என்ற அவர்களது பீதியாகும். காந்தியின் தலைமையில் ஒரு பரந்த மக்கள் இயக்கத்தையும், நேருவின் தேசியவாத வேலைத் திட்டத்தையும் ஒன்று சேர்த்து சோசலிச வெற்று முழக்கங்களுடன் சுதந்திரமான வளர்ச்சிப் பாதையை மேற்கொள்வதாக கூறினார்கள், இவ்வாறாக..கோரமான வறுமையும், ஒடுக்குமுறையும் இருந்த போதிலும் பலகோடி இந்திய மக்களின் போராட்டமானது முதலாளித்துவ ஆட்சியின் கட்டமைப்புக்குள்ளேயே இருக்கும்படியாக ஒரு அரசியல் நுட்பத்தை காங்கிரஸ் கட்சி வகுத்தது,

இந்த நுட்பமான உடன்பாட்டை திணிப்பதில் அவை பிளவுபடாதிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிசத் தலைமைகள் முக்கிய பங்கு வகித்தனர். 1942ல் ஹிட்லருக்கு எதிரான ''ஜனநாயக'' பிரிட்டனில போராட்டத்தை பலவீனப்படுத்தும் என்ற அடிப்படையில் 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்றழைக்கப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை இந்த ஸ்டாலினிசத் தலைமைகள் எதிர்த்தனர், ஆனல் அதன் பின்னர் (பாகிஸ்தானுடன் ஏற்பட்ட) யுத்தத்தின்போது நேரு தலைமையிலான ''முற்போக்கு'; தேசிய முதலாளித்துவத்தைக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கும் அது சோவியத் அதிகாரத்துவத்துடன் வைத்திருந்த கூட்டுக்கும் அவர்களது ஆதரவை தெரிவித்தனர்.

1971ல் பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் (இப்போது பங்களாதேஷ்) பிரிந்ததிலிருந்து உலகப் போருக்கு பிந்திய உடன்பாடுகள் உடையத் தொடங்கின. பிளவுபடுத்தப்பட்ட வங்காளி தேசிய இனத்தின் ஒரு பகுதியினரின் புரட்சிகரமான எழுச்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், காங்கிரசும் இந்தியத் துணைக்கண்டத்தில் உருவாக்கிய பிரிவினையின் அடிப்படையையே அச்சுறுத்துகின்றது என்பதனல் இந்திராகாந்தி பங்களாதேஷின் ''விடுதலைக்காக'' போராடுவதாக கூறி இந்திய இராணுவத்தை அங்கே அனுப்பினார்

இந்த தலையீட்டுக்கு நான்கு வருடங்களுக்கு பின்னர்1975ல் ஆழமான சமூக நெருக்கடி வளர்ச்சியடைந்து இந்திரா காந்தி அவசர நிலை ஆட்சியை பிரகடனம் செய்தார். இரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின்போது பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்களை சிறையில் அடைத்தார் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் வளர்ச்சியடைந்து இந்திராகாந்தி அவரது சொந்த (இந்திரா) காங்கிரஸ் கட்சியை தொடங்கினர். அவசர நிலை ஆட்சி நீக்கப்பட்ட பின்னர் 1977 தேர்தலில் காங்கிரஸ் கட்சி முழுமையாக துடைத்து கட்டப்பட்டது காங்கிரஸின் அதிருப்தியாளர்களையும் இதர முதலாளித்துவ தலைவர்களையும் மொரார்ஜி தேசாயின் தலைமையின்கீழ் ஜனதா கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்தது.

ஆனால் ஜனதா பல்வேறு மோதல் குழுக்களாக பிளவுண்டு வீழ்ச்சியடைந்தது. 1980ல் மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. எவ்வளவு அதிகமாக உள்நாட்டு நெருக்கடி ஆழமடைந்ததோ அந்த அளவிற்கு இந்திராகாந்தி மதசார்பின்மை முகமூடியை தூக்கி வீசி விட்டு வகுப்புவாதத்தை விளையாடும் சீட்டுகளாகக் கருதினார். சீக்கிய பிரிவினை வாதத்துக்கு எதிராக இந்து பேரினவாதத்தை வளர்த்தார், ஆனால் இந்திராகாந்தியே பேரினவாதத்தின் சூருவளியை அறுவடை செய்தார். ஜூன் 1984ல் அமிர்தரஸில் உள்ள சீக்கிய பொற்கோயில் மீது தாக்குதல் தொடுக்க படைகளை அனுப்பிய பின்னர் அவரதுசொந்த சீக்கிய மெய்பாது காவலர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முதலாளித்துவம் அதன் ஆட்சியின் பிரதான கருவி உடைவதைக் கண்டு அஞ்சி இந்திராகாந்தியின் மகனான ராஜீவை கட்சியின் தலைவர் பதவிக்கு நியமித்தது. 1984ல் இந்திராகாந்தியின் கொலைக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில காங்கிரஸ் கட்சி அறுதி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்ததும் ராஜீவ் பிரதமராக பொறுப்பு ஏற்றார்,

### காந்தியின் IMF வேலைதிட்டம்

ஆனால் நேருவினாலும் காந்தியினாலும் ஒன்றாகக் கொண்டு வரப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் வேலைதிட்டம் ஆழமாக செல்லும் வர்க்க வகுப்புவாத மோதல்களினால் உடைந்து நொறுங்கியது. 1980களில் ஸ்டாலினிச ஆட்சி நடந்த நாடுகளில் ''தனியொரு நாட்டில் சோசலிசம்'' என்ற தேசியவாத, வேலை திட்டம் விழ்ச்சியடைந்ததை போலவே காங்கிரஸின் தேசிய சுயபூர்த்தி பொருளாதார வேலை திட்டமும் உடைந்தது.

இந்திராகாந்தி அரசுடைமை (தேசிய மயமாக்கப்பட்ட) தொழில்துறைகளை தகர்க்க தொடங்கினர், பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் இந்தியாவில் இயங்குவதற்கு இருக்கும் அனைத்து தடைகளையும் அகற்றுவதற்கு நாசுக்காக கூறப்படும் வார்த்தைதான் 'ஏற்றுமதி மூலோபாயம் இது ஐ.எம்,எப். பினல நிருபிக்கப்பட்ட கொள்கையாகும் காந்தி சிறு முதலாளித்துவ பிரிவினரும் குட்டி முதலாளித்துவ பிரிவினரும் முன்னேற அவர் ஊக்குவித்தார். அதே சமயம் வறிய மக்களின் நிலமைகள் அதிகரித்து செல்லும் விலைஉயர்வுகளினலும் ஆலை மூடல்களினலும். வேலை அழிப்புகளினலும் சம்பள வெட்டுகளினலும், தொழிற்சங்கங்களின் மீதான தாக்குதல்களினலும் மோசமடைந்தது.

1989 தேர்தல்கள் இந்திய முதலாளித்துவத்தின் பழைய வேலைத்திட்டத்தின் வீழ்ச்சியினல் தூண்டிவிடப்பட்ட சமூக மற்றும் வர்க்க எழுச்சிகளை கட்டுக்குள் வைத்திருகக காங்கிரஸ — ஸ்டாலினிச கூட்டினல் முடியாதிருந்தது. என்பதையும் உலக முதலாளித்துவத்தின் வரம்பற்ற சுரண்டலுக்கு இந்தியா திறந்துவிடப்படுகின்றது என்பதையும் வெளிப்படுத்தியது. காங்கிரஸ் கட்சி தேர்தலில் அதன் 415 தொகுதிகளின் பாதியை இழந்தது ஸ்டாலினிஸ்டுகள் ராஜீவ்காந்திக்கு ஆதரவு அளிக்க மறுத்ததினல்காங்கிரசால் ஆட்சி அமைக்கமுயலவில்லை.

பதிலாக வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஸ்டாலினிஸ்டுக்ள் பிர்தான தூணாக இருந்தவர் ''இடது'' பக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்)யினலும் தூக்கி நிறுத்தப்பட்ட வி. பி, சிங் அரசாங்கம் வலது பக்கத்தில் தீவிர வலதுசாரி மற்றும்பாசிச நோக்குடைய இந்து பேரினவாத பாரதிய் ஜனதா கட்சியினல் முட்டு கொடுக்கப்பட்டது,

பாரதிய ஜனதா கட்சியின் பாராளுமன்றபிரதிநிதித்துவம் இரண்டில் இருந்து 89 ஆக அதிகரித்தது எடுத்துக்காட்டுவதாவது, இந்திய முதலாளித்துவத்தின் பாரம்பரிய கட்சியான காங்கிரஸ் கட்சி உடைந்து விழும் போது தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக பாசிச பாணியிலான தாக்குதலையும் வகுப்பு வாதத்தையும் கட்டவிழ்த்துவிட இந்திய ஆளும் வர்க்கத்தின் முக்கிய பிரிவினர் சிந்திக்கின்றனர்.

524 தொகுதிகளைக்கொண்ட பாராளுமன்றத்தில் 144 தொகுதிகளுடன் ஆட்சி நடத்தும் வி.பி. சிங் அரசாங்கம் இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி அரசாங்கங்களினல் தொடங்கப்பட்ட உலக வங்கியின் கட்டளைக்கு இணங்கிய வேலைத் திட்டத்தை தொடர்ந்து பின்பற்றிய வண்ணம் தாழ்த்தப்பட்ட ஜாதி மக்களை உயர்த்த போவதாக வெற்றுக் கூவல் எழுப்பியது. அதன் மூலம் ஜாதி கலவரங்களுக்கே தூபம் இட்டது வி.பி சிங் குக்கும் ராஜீவ் காந்திககும் இடையில் உண்மையான வேறுபாடுகள் ஏதுமில்லை அவர் ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் 1984ல் இருந்து 86 வரை நிதி அமைச்சராக பணியாற்றியவர் பெரும முதலாளிகளுக்கு மறு உத்தரவாதம் அளிப்பதற்காக ஒரு செல்வாக்கு நிறைந்த, பணக்கார ஜாட்

www.padippakam.com



# ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில்!

நிலப்பிரபு ஜாதியைச் சேர்ந்தவரும். தொழில் அதிபர்களின் கூட்டாளியுமான தேவிலாலே அவர் துணைப் பிரதமராக்கினர்.

ஒரு ''இந்து ராஜ்யத்தை'' உருவாக்கப் போவதாக கூறியபடி இந்து வகுப்புவாதத்தை பாரதீய ஜனதாக் கட்சி தூண்டிவிட்டு வகுப்புவாத கலவரங்களை உண்டு பண்ணியது. அயோத்தி நகரிலுள்ள 16ம் நூற்ருண்டு பள்ளிவாசலை உடைத்து அந்த இடத்தில் ஒரு ராமர் கோயிலை கட்டும் முயற்சியில் ஈடுபட்டது. இப்பிரச்சார இயக்கத்தின் போது பா.ஜ. கட்சித் தலைவர் எல்,கே. அத்வாணி கைது செய்யப்பட்டபோது பா.ஜ. கட்சி வி.பி.சிங் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் வாங்கியது, பாராளுமன்ற தெருக்கடியை உருவாக்கியது.

இறுதி வரையில் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் வி.பி.சிங் அரசாங்கத்தை தக்கவைக்க முயற்சித்தனர். அத்தருணத்தில் சி.பி. எம். இன் மூத்ததலைவர் ஜோதிபாசு பா.ஜ. கட்சியை ''மக்களின், சமுதாயத்தின் எதிரி'' என்று கண்டனம் செய்தார், ஆனுல் ஏன் இந்த ஸ்டாலினிசத் தலைமைகள் இந்து பாசிஸ்டுகளுடன் கோட்பாடற்ற முறையில் கூட்டு சேர்ந்து வி.பி.சிங் அரசாங்கத்தை தக்க வைததனர் என்பதையோ, அல்லது வி.பி.சிங் ஆட்சிக் காலத்தின் போது பா.ஜ. கட்சித் தலைவர்களும், சி.பி.ஐ (எம்),சி.பி.ஐ. தலைவர்களும் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை இரவு போசன விருந்தின் போது நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படை என்ன என்பதையோ விளக்கவில்லை.

நவம்பர் 1990ல், இந்தியாவில் போலி பாராளுமன்ற ஜனநாயகம் வி. பி, சிங் ஆட்சி வீழ்ச்சியடைந்ததும் பெரும் செப்படி வித்தையாக மாறியது. வி.பி.சிங்கின் ஜனதா தளத்திலிருந்து பிரிந்து சென்ற 61 உறுப்பினர்களைக் கொண்ட சந்திரசேகரின் சிறிய குழுவினர் காங்கிரசுடன் சேர்ந்து நம்பிக்கை இல்லா தீர்மானத்தை கொண்டு வந்தனர். காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க மறுத்தது. இதனுல் பாராளுமன்றத்தில் 8ல் 1பங்கு உறுப்பினர்களை கொண்ட சந்திரசேகரின் குழுவை ஆட்சி அமைக்கும்படி ஜனுதபதி கேட்டார்.

ஒரு புதிய தேர்தல் பலாத்காரமான எழுச்சிகளை தோற்றுவிக்கும் என்று அஞ்சிய இந்திய முதலாளித்துவம் சாத்தியமான அளவிற்கு சந்திரசேகர் அரசாங்கத்தை வைத்திருக்க தீர்மானித்தது. இப்போது ராஜீவ்காந்தியின் கொலை பாராளுமன்ற அமைப்பின் முதலாளித்துவ ஆட்சி நுட்பங்களின் முழுமையான நெருக்கடியையும் கோடிட்டுக் காட்டுகிறது. இது இந்தியாவை உள்நாட்டு யுத்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ளது.

## பொருளாதார நெருக்கடி

அரசியல் வெடிப்பின் பின்னணியில் இருப்பது இந்திய முதலாளித்துவத்தின் ஆழமான நெருக்கடியாகும். ராஜீவ் காந்தியினுலும், வி.பி சிங்கினுலும் ''ஏற்றுமதி மூல உபாயம்?' என்றழைக்கப்பட்ட கொள்கை தொடரப்பட்ட போதிலும் உலக சந்தையில் இத்தியாவின்பங்கு,1 சதவீதத்திலிருந்து 0,5 சதவீதமாக கடந்த சில வருடங்களில் குறைந்துள்ளது. ஏழு வருடங்களுக்கு முன்பு தேசிய வருமானத்தில் 10 சதவீதமாக இருந்து வெளிநாட்டு கடனுக்கான வட்டி இப்போது 30 சதவீதமாக உயர்ந்துள்ளது. வெளிநாட்டு செலாவணி இருப்பில் மிக மோசமான நிலைமையை எட்டியுள்ள நிலையில் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சியடைப்து கொண்டிருக்கிறது. எண்ணெய் இறக்குமதி செய்வதற்கே வெளிநாட்டு செலாவணி இருப்பு போதாத நிலையில்ஜப்பானிடம் கடன் வாங்கி இறக்குமதி செய்யும் நிலையிலுள்ளது. வெளிநாட்டுக் கடன் $1\frac{1}{4}$ லட்சம் கோடி ரூபாயை எட்டிவிட்டது. விலைவாசி 16 சதவீதம் உயர்ந்துள்ளது.

வளைகுடா யுத்தம் குறிப்பாக இந்தியாவை பெருமளவில் பாதித்துள்ளது அதன் இறக்குமதி செலவு 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனுல் அரசாங்கம் எண்ணெய் விலைகளை 25 சதவீதம் உயர்த்தியது.

வேலையின்மை நகர்ப்புறங்களில் 3 கோடிக்கு அதிகமாகவும் நாட்டுப் புறங்களில் 10 கோடிக்கு அதிகமாகவும் உயர்ந்துள்ளது. 250,000 ஆலைகள் நலிவுற்று மூடப்பட்டுள்ளன. உத்தியோக பூர்வ வறுமைக் கோட்டின் கீழ் நாட்டு மக்கள் தொகையில் (80 கோடி) பாதிப்பேர் இருக்கின்றனர்.

நேரு. இந்திராகாந்தி காலத்தில் பின்பற்றிய சுயபூர்த்திக் கொள்கையை இப்போது காங்கிரஸ் கட்சி கை விட்டு விடடது, அது ஒரு முதலீட்டு சந்தைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. இது அமெரிக்காவிலுள்ள ஹவார்ட் வியாபாரக் கல்லூரியில் ''வளைந்து கொடுக்கும், மிகவும் சக்தி வாய்நத லாப நோக்குக் கொண்ட பொதுத்துறை'? என்றழைக்கப்படும வெற்று முழக்கத்தை செய்கிறது.

சுதந்திரம் என்றழைக்கப்பட்டு பல பத்தாண்டுகளுக்கு பின்னர் மத சார்பற்ற, ஜனநாயக இந்திய அரசு என்ற முகமூடி நொறுக்கப்பட்டு விட்டது. இந்தியாவில் ''சுதந்திரமான'' பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சி மத, ஜாதி, தேசிய பிளவுகளை வெடித்தெழச் செய்துள்ளது. இது காலாவதியாய் போன தேசிய அரசு அமைப்பு முறையின் மீது உலகப் பொருளாதாரத்தின் அழுத்தத்தை பிரதிபலிக்கிறது. அதே போல் பூகோளத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தேசியவாத பொருளாதார வேலைத் திட்டங்களின் வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

திவாவான முதலாளித்துவத்திஞல் உருவாக்கப்பட்ட குருட்டுப் பாதையிலிருந்து முன்னேறிச் செல்வதற்கான பாதையை ஒரே ஒரு சக்தியே வழங்க முடியும். அது இந்திய தொழிலாளி வர்கமாகும், இந்திய தொழிலாளவர்க்கம்,இந்தியதுணைக் கண்டத்திலுள்ள அனைத்து ஒடுக்கபபடும் மக்களையும் தன் பின்னே அணிதிரட்டி சர்வதேச தொழிலாள வர்க்கத்துடன் சேர்ந்தே காடடுமிராண்டி நிலைமைக்கு நாட்டை மூழ்கடிப்பதிலிருந்து உண்மையான சுதந்திரத்தை பெற முடியும சோசலிசப் புரட்சியை முன்னெடுத்து உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும. துணைக்கண்டத்தில் ஐக்கிய சோசலிச குடியரசுகளை உருவாகக முடியும் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தியாவில் டிராட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம் செயற்படுகின்றது. அது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் சேர்ந்து துணைக்கண்டத்தில் இந்த வேலைத்திட்டங்களுக்காக போராடுகிறது.

## போக்குவரத்து தொழிலாளர்கள் மேல்....

(3ம் பக்கத்திலிருந்து)

அனைத்து சமூக வெற்றிகளையும் அழிப்பதாகும்.

போக்குவரத்து உள்பட அனைத்து அரசு நிறுவனங்களும் தனியார் துறையிடம் தர்ரை வார்க்க இருக்கின்றன, பெருமளவில் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படவிருக்கின்றனர்; அரசாங்க உதவிகள் நிறுத்தப்பட இருக்கின்றன அதிக அளவு லாபங்களை எடுப்பதற்காக சுரண்டல் உக்கிரப்படுத்தப்படவிருக்கிறது. இதுவே பல லட்சம்தொழிலாளர்களை வேலையற்றோர் பட்டியலில் சேர்க்கும். அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் அகற்றப்படவிருக்கின்றன. ஏகாதிபத்திய மூலதனம் தடையின்றி உள்ளே நுழைய அனுமதி வழங்கப்படவிருக்கிறது. ஏற்கனவே ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் தமது மூலதனம் சுதந்திரமாக உள்ளே வருவதற்கு தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

நாட்டுக்குள் ஏகாதிபத்திய கம்பெனிகளின் உற்பத்திப் பொருட்கள் வரையறையின்றி நுழைய அனுமதிக்கும்படி கோருகின்றன. இது இந்தியாவில் பல தொழிற்துறைகளை திவால் நிலைக்கு தள்ளும். இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான ஆலைகள் மூடப்படவும், கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் தூக்கி வீசப்படவும் நிலைமைகளை உண்டு பண்ணும். எந்த முதலாளி தனது ஆலையுள் மிகக் குரூரமான நிலைமைகளையும் சுரண்டலையும் செயற்படுத்துகின்றனரோ, அவர்கள் வியாபாரத்தை தொடர்ந்து செய்ய முடியும் சமூக சேவைகளுக்கான செலவுகளும், விவசாயிகளுக்குமான மானியங்களும் நிறுத்தப்பட வேண்டுமென்றும் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் கோருகின்றனர், எந்த ஒரு அரசாங்கம் ஆட்சிக்கு வருமாயினும் அது அனைத்து உணவுப் பொருட்களின் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலைகளை உயர்த்தும், முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை பாதுகாக்க நகர்ப்புறங்களில் பரந்தளவில் வறுமையையும், நாட்டுப்புறத்தல் பஞ்ச நிலைமையையும் ஏற்பத்டுதத திட்டமிடும்,

இந்த தேர்தலில் எந்த அரசாங்கம் வந்தாலும் இந்தத் திட்டத்தைய அமல்படுத்த ஆளும் வர்ககம் திட்டமிட்டுள்ளது.இவ்வாறாக காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை அமல்படுத்தும்போது எதிர்கொள்ளும் பிரதானமான தடையாக இருப்பது அவற்றுக்கு தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பாகும். இந்தத் தாக்குதல்களை முனர் அமல்படுத்திய ஒவ்வொரு தடவையும் தொழிலாள வர்க்கத்தின் தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டங்கள் தோன்றின. சென்னையில் ஸ்டாண்டர்ட் மோட்டார்சின் போராட்டம் இதில் முக்கியமானதாகும், அதேபோல் இந்தியா முழுவதும் பரந்தளவில் வளர்ச்சி அடையும் இதர தொழிலாள வர்க்க போராட்டங்களும இத்தகையதானதாகும்,

சென்னையில் கதவடைப்பு செய்யப்பட்ட பி&சி தொழிலாளர்களுக்கு ஆதரவான பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஸ்டாலினிச சி.ஐ.டி.யு. தலைமை காட்டிக் கொடுத்தது. பி&சி ஆலையல் சி.ஐ.டி.யு.வின் W,R. வரதராஜன் தலைமை வகித்த போதிலும, அவர் சார்ந்த சி.ஐ டி.யு வே பஸ் தொழிலாளர்களது வேலைநிறுத்த ஆதரவைக் காட்டிக்கொடுத்தது! மிகவும் கவனிக்கபபட வேண்டிய தொன்றுகும். உண்மையில் பெரம்பூர், அயனுவரம், மாதவரம் டெபபோவில் உள்ள தொழிலாளர்கள் மட்டுமே கலந்து கொள்மாறு செய்யப்பட்டது. இவ்வாறு சி,ஐ டி.யு. தலைமையே காட்டிக் கொடுத்து விட்டு, 'ரம்ஜான் பண்டிகையையும்' மாணவர்களுக்கான தேர்வையும் காரணம்காட்டி தமது காட்டிக் கொடுப்பிற்கு சப்பைக்கட்டு கட்டினர். இவை பற்றியெல்லாம முன்கூட்டியே தெரியாதவர்கள போல் தமது காட்டிக் கொடுப்பை நியாயப்படுத்தினர்.

இந்திய முதலாளித்துவ வர்க்கமும அதன் பின்னணியிலுள்ள ஏகாதிபத்தியவாதிகளும, இந்தியாவில் தொழிலாள வர்க்கத்தின் போராட்ட இயக்கங்களை நசுக்குவது சமபந்தமாக சமமான அக்கறை காட்டுகின்றனர்: முழு ஏகாதிபத்திய அமைப்புமே, அதன் வரலாற்றில் ஆழமான நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ளது. பிரதான ஏகாதிபத்துவ வாதிகள் பெரும பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளனர், ஒருவருக்கு எதிராக ஒருவர் வர்த்தக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர், அவர்களுககு வேறு வழியில்லை! இந்தியா போன்ற நாடுகளை மறுபடி காலனி நாடுகளாக முழுமையாக அவர்களது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர சதி செய்கின்றன, தொழிலாள வர்க்கத்திற்கு ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ஏகாதிபத்திய வாதிகளும், இந்திய முதலாளித்துவ வர்ககமும் கூட்டாக சூழ்ச்சி செய்கின்றன.

இப்படியான சூழ்ச்சித் திட்டங்களை அமல்படுத்தவே முதலாளித்துவ வர்க்கம் உள்நாட்டு யுத்தத் தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளது. இதையே பஞ்சாபிலும், காஷ்மீரிலும். வடகிழக்கு பகுதிகளிலும் முக்கிய குறிக்கோளாக செய்துவருகின்றது தமிழ். நாட்டில் ஈழப் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் இதே குறிக்கோளையே கொண்டுள்ளன, பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற போர்வையில்.

ஆளும் வர்க்கம் இரண்டு முக்கிய திட்டங்களில் செயற்படுகின்றது, என்று சிறுபான்மை தேசிய இனங்களான பஞ்சாபி, காஷ்மீரி அஸாம். தமிழ் ஈழ தேசிய இனங்களுக்கு எதிரான உள்நாட்டு யுத்தங்களை உக்கிரப்படுத்தி, பின்னர் இந்த யுத்தங்களையே சாக்காக பயன்படுத்தி தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான யுத்தத்தை கட்டவிழ்த்து விடுவதாகும்.

இரண்டாவதாக பாரதீய ஜனதாக் கட்சி போன்ற இந்துமத வெறி அமைப்புகளின் உதவியுடன் பாசிச ஆயுத குண்டர் பட்டாளங்களை பெரும் முதலாளிகளின் உதவியுடன் உருவாக்கி, தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான ஆத்திர மூட்டல்களை ஏற்படுத்துவதாகும். இதன் மூலமாக போலீஸ் அரசு சட்டங்களை திணிப்பதற்குமாகும்.

இப்படியான கொள்கைகளை அமுல்படுத்த முதலாளித்துவ அரசு தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளில் சி.பி.ஐ.(எம்). சி.பி ஐ, தலைமைகளில் நேரடியாக தங்கியுள்ளது; தொழிலாள வர்க்க எதிர்ப்பை காட்டிக் கொடுக்கவும், தொழிலாள வர்க்கத்தை மத்திய தரவர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் அவர்களை சோர்வடையச் செய்து, தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கான நிலைமையை உண்டு பண்ணவுமே ஆகும்.

இப்படியான தயாரிப்புகளே போலீஸ் தாக்குதலுக்கு வழி வகுத்தது டன் கவர்னர், அரசாங்க சட்ட அதிகாரிகளும் மற்றவர்களும் உள்ளடங்கலாக முதலாளித்துவ அரசு போலீஸ் கிரிமினல்களை பாதுகாக்க வைத்தது. போலீசும், இராணுவமும் வேறு யாருமலல ஆயுதம் தரித்த மனிதர்கள், இவர்கள் முதலாளித்துவ அரசை பாதுகாக்க சுரண்டப்படும் வர்க்கங்களுக்கு எதிராக பலாத்காரத்தை பிரயோகிப்பவர்கள் தொழிலாளர்களுக்கு எதிரான இந்த தாக்குதல்கள் மிக நவீன செய்தி தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி உயர் அதிகாரிகளினால் வரிசை கிரமமாக திட்டமிட்டு நடத்தப்பட்டன: நிராயுதபாணிகளான தொழிலாளர்கள்மேல் துப்பாக்கிச் சூடுகள் இராணுவ

(6ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர் மேலான போலீசாரின் பொய் வழக்கையும், தொந்தரவுகளையும் உடனே நிறுத்து!

சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் உறுப்பினர்கள், தேர்தல் வேட்பாளர்களை போலீஸ் இலாகாவை சேர்ந்தவர்கள் தொந்தரவு செய்வதை உடனடியாக நிறுத்தும்படி கோர நாம் இக்கடிதத்தை எழுதுகின்றோம்.

சோசலிசத் தொழிலாளர் கழகம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் இயக்கமும், இந்தியாவிலுள்ள டிராட்ஸ்கிச அமைப்புமாகும். இலங்கையில் அரசுஒடுக்கு முறைக்கு எதிராக நடைபெற்ற ஒரு கூட்டத்தில், சோ. தொ. க. வின் உறுப்பினர் ஒருவர் பேசியபின்னரே இதுதொடங்கியது.

1. ஏப்ரல் 25, பிற்பகல் 4 மணிக்கு சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அலுவலகத்திற்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்திலிருந்துகுருசாமி என்று தன்னை அடையாளம்காட்டியஅதிகாரி ஒருவர் விஜயம் செய்தார், அவா சோ, தொ. க. வின் முன்னணி உறுப்பினரும், அதன் மாத இதழான 'தொழிலாளர் பாதை' ஆசிரியர் குழுவின் உறுப்பினருமான S. ராம் பற்றி கேள்விகள் கேட்டார். அவர் S. ராமை விசாரிக்க விரும்புவதாக கூறினார்.

போலீஸ் இலாகாவினால் S. ராமை விசாரணைசெய்யவும், கேள்விகள் கேட்கவும் எடுக்கும் முயற்சிகள் S. ராம் ஏதோ குற்றம் செய்து விட்டார் என்பதனால் அல்ல, இது ''இலங்கையில் நாட்டுப்புற படுகொலையும். இனவாத யுத்தமும்—பின்னணியும் தீர்வும்'' என்ற தலைப்பில் S. ராம் ஒரு சொற்பொழிவை நிகழ்த்திய பின்னர் தொடங்கப்பட்டது. இந்த சொற்பொழிவு ஏப்ரல் 23ல், அண்ணாசாலையிலுள்ள தேவநேய பாவாணர் நூலகக் கட்டிடத்தில் சமூக அறிவியல் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சட்ட ரீதியாகவும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல கட்சியாகவும செயற்படும் எமது அமைப்பின் உறுப்பினர்களின் அரசியல் மற்றும் ஜீவாதார உரிமைகள் மீது நியாயமற்ற முறையிலும் சட்டவிரோதமாகவும் மேற்குறிப்பிட்ட விசாரணைகளும் கேள்விகள் கேட்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது இது சோ.தொ.க.வின் உரிமையுள்ள, சட்ட ரீதியான வேலைகளில், அதன் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் விளக்கி பிரச்சாரம் செய்வதையும், அதே போல் வடசென்னை பாராளுமன்ற தொகுதிக்கும், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்கும் நிறுத்தப்பட்டுள்ள அதன் வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்வதிலும் தலையீடு செய்வதாக உள்ளது.

2. மே, 1ல் மேலே குறிப்பிட்ட குருசாமி என்ற போலீஸ் அதிகாரி, வடசென்னை பாராளுமன்ற தொகுதிக்கு சோ.தொ.கவின் வேட்பாளரும் பி, அண்டு சி, மில் தொழிலாளியுமான பி. மோசஸின் வீட்டுக்கு விஜயம் செய்தார். திரு குருசாமி பி, மோசஸின் உறவினர்கள் வீடுகளுக்கும் விஜயம் செய்து மோசஸின் கடந்த காலம் பற்றியும், அவரது தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும், அவரது குடும்பத்தைப் பற்றியும், அவரது அரசியல் வேலை பற்றியும் விசாரணைகள் நடத்தியுள்ளார்.

அதே நாள் 5 மணிக்கு, பி. அண்டு சி. மில் தொழிலாளர்களின் பெரம்பூர் பேரக்ஸ் குடியிருப்பு வாசலில் அதே போலீஸ் அதிகாரி குருசாமி மோசசை சந்தித்து சோ. தொ.க.வின் இதர உறுப்பினர்கள் பற்றியும், சோ,தொ க பஸ் வேலை நிறுத்தத்தில் தலையீடு செய்கின்றதா என்பது பற்றியும் கேள்விகள் கேட்டார்.

3. மே 16ல் திருமங்கலம் போலீஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட அண்ணாநகர் மேற்கு விஷேச போலீஸ் பிரிவைச் சேர்ந்த போலீஸ் கான்ஸ்டபிள்சிவலிங்கம் (பி. சி. 2179), வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு சோ. தொ.க,வின் வேட்பாளரும் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சங்கத்தின் முன்னாள் கமிட்டி உறுப்பினருமான எம். கைலாசத்தின் வீட்டுக்கு காலையும், மாலையும் இரு தடவைகள் விஜயம் செய்திருந்தார். பின்னர் திருமங்கலம் போலீஸ் நிலையத்தில் வந்து தன்னை தொடர்பு கொள்ளும்படி கைலாசத்திற்கு ஒருசெய்தியை அவரது வீட்டில் விட்டுச்சென்றார்.

4. S, ராமுக்கு எதிராக புளியந்தோப்பு போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த போலீஸ் ஒரு பொய் வழக்கை தொடர்ந்துள்ளனர். டிசம்பர் 13, 1990ல பி & சி. மில் தொழிலாளர்களின் வாயில் கூட்டம் சென்னை தொழிலாளர் சங்கத்தினால் நடத்தப்பட்டது. அதற்கு தற்போது தலைவராக இருப்பவர், சி.பி.ஐ.(எம்) தொழிற்சங்கத் தலைவரே, 1989 சங்கத்தேர்தலில் வரதராஜனுக்கு எதிராக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட S. ராம் சோ. தொ,க.வின் பத்திரிகையான 'தொழிலாளர் பாதை'க்கு செய்தி திரட்டுவதற்காக அக்கூட்டத்தில் பங்கு கொண்டார். அப்போது வரதராஜனால் வெளியேயிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 30 குண்டர்கள் சி பி ஐ. (எம்) உறுப்பினரும் எம் எல்.யு. வின் கமிட்டி உறுப்பினருமான குமரேசனின் தலைமையில் S ராம் மேல் ஒரு கொலைவெறி தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதல் நடந்த போது பக்கத்திலுள்ள புளியந்தோப்பு போலீஸ் நிலையத்தை சேர்ந்த போலீஸ் அங்கே நின்றது. அவர்கள் கொலைவெறிதாக்குதல் நடத்திய குண்டர்களையோ, அல்லது அவர்களுக்கு தலைமை தாங்கிய குமரேசனையோ கைது செய்யவில்லை அனால் கூட்டத்தின் ஓரமாக நின்று கவனித்துக்கொண்டு நின்றவரும் குண்டர்களால் தாக்கப்பட்டவருமான S. ராமை கைது செய்தனர் அவர்கள் S. ராமை கைது செய்ததுடன் நிறுத்தவில்லை, ஒருபடி மேலே சென்று அவருக்கு எதிராக இ.பி கோ. வின் 75 வது பிரிவின்கீழ் எழும்பூர் பெருநகர் நீதிமன்றத்தல் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த சம்பவம் சம்பந்தமாக, நாம் கோருவது உடனடியாக இந்த பொய் வழக்கு வாபஸ் பெறப்பட வேணடும் போலீசார் தகுந்தவிசாரணை நடத்தி S. ராமை தாக்கியவர்களை கைது செய்து அவர்கள் செய்த குற்றத்துக்கு அவர்கள் மேல் வழக்குத் தொடரவேண்டும்.

இங்ஙனம்

P. மோசஸ்

(சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சார்பில்)

சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர்கள் மேல் பொய் வழக்குகள் தொடுப்பதையும், அதன அரசியல உரிமைகள் மீது தாக்குதல் செய்வதையும் கண்டனம் செய்து தொழிற்சங்கங்களிலும், தொழிலாளர்வர்க்க அமைப்புகளிலும் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றிஇன்ஸ்பெக்டர் ஜெனரல் சப் போலீஸ் அலுவலகத்திற்கும் அதன் பிரதி ஒன்றை சோசலிசத தொழிலாளர் கழகம, தபால் பெட்டி எண் 968, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-12 என்ற முகவரிக்கு அனுப்புமபடியும கேட்டுக்கொள்கிறோம.

---

(5ம் பக்கத்திலிருந்து)

பயிற்சிகள் போன்று செய்யப்பட்டன. போலீஸ அதிகாரிகளைப் பொருத்தவரையில் அவர்கள் கையாண்ட முறைகள் இப்போது வளர்ச்சியடையும் தொழிலாளர் வர்க்க போராட்டங்களை நசுக்குவதற்கான அவர்களது தந்திரோபாயங்களை கச்சிதமாக செய்வதற்கான ஒத்திகைகளே. தொழிலாளர் வர்க்கத்தின் துரோகத் தலைமைகளுடன் அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகள்: வெறும் கண் துடைப்பே. அவை நேரத்தை எடுப்பதற்கான அவர்களின் யுத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும்.

## தலைவர்களின் காட்டிக் கொடுப்பு

தொழிற்சங்கத்தலைமைகள் தொழிலாளர்களுக்கு எதிராக துரோக உடன்பாட்டை செய்து போலிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராக தொழிலாளர்கள் தம்மை தற்காத்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்க விடாது காட்டிக் கொடுத்துள்ளனர் சி.பி ஐ.(எம்),சி பி,ஐ. தலைமைகளின முயற்சிகள் தாக்குதலுக்குள்ளான தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக அல்ல, மாறாக தாக்குதல் தொடுத்த போலீசாரை எவ்வாறாயினும அதற்கான தண்டனையிலிருந்து தப்ப வைத்து காப்பற்றுவதே) ஆகும.

அரசாங்கம் நியமித்த 'விசாரணைக் கமிஷனை' சி.பி.ஐ,(எம்),சி.பி.ஐ. தலைமைகள் ஏற்றுக் கொண்டதன் மூலம் இத்தலைமைகள் போலிசாரை பாதுகாக்க முன் வந்துள்ளனர். முதலாளித்துவ பிரதிநிதிக்ளைக் கொண்ட இந்த கமிஷனில் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று தொழிலாளர்களை கேட்கிறோம், இது குற்றம் சாட்டப்பட்டவர் நீதிபதியாவதை போன்றதாகும். இதே அரசாங்கத்துக்கு போலீசும், இராணுவமும் தேவைப்படுகிறது தொழிலாளர்களை தாக்குவதற்காக. எனவே இங்கு அவசியமானது போலிசின் தாக்குதலுக்கும் படுகொலைக்கும் எதிராக விசாரணை செய்ய தொழிற் சங்கங்களின் சுதந்திரமான விசாரணைக் கமிஷன் ஏற்படுத்துவதாகும். இந்த படுகொலை தாக்குதல்கள் சம்பந்தமாக தொழிற்சங்கங்கள் தமது சொந்த விசாரணையை நடத்த வேண்டும்,

இவ்வாறான விசாரணை தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான ஆளும் வர்க்கத்தின் அனைத் சூழ்ச்சிகளையும் அம்பலப்படுத்தும் அத்துடன் மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும், அது அரசின் ஆயுதப் படைகளின் எதிர்புரட்சிகர திட்டங்களை வெளிப்படுத்தும். அது இந்த முதலாளித்துவ அரசின் ஆயுதப் படைகள் உடனடியாக கலைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டும். மேலும் தொழிலாளர்கள் தமது சொந்த பாதுகாப்பு அணிகளை அமைக்க வேண்டிய தேவையையும் உணர்த்தும்,

அரசு பற்றிய மார்க்சிய தத்துவத்தை சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. தலைமைகள் நிராகரிக்கின்றனர், முதலாளித்துவ அரசை நிர்மூலமாக்கி ஒரு தொழிலாளர் அரசை உருவாக்கும் வேலைத்திட்டம் அவர்களிடம் இல்லை, அதனால் தான் அவர்கள் முதலாளித்துவ அரசு பஞ்சாபிலும், காஷ்மீரிலும், அஸாமிலும் நடத்தும் உள்நாட்டு யுத்தங்களுக்கு ஆதரவளிக்கின்றனர். இவ்வாறாக உள்நாட்டு யுத்தங்களுக்கு சி.பி.ஐ.(எம்.)



சி.பி.ஐ. தலைமைகள் வழங்கும ஆதரவு தான தொழிலாளர்கள் மேல் பயங்கரமான தாக்குதல் தொடுப்பதற்கு வேலூர் போலீசாருக்கும உற்சாகம் அளித்தது. வேலூர் போக்குவரத்து தொழிலாளர்களை இந்த துரோகத் தலைமைகள் காட்டிக் கொடுத்தது. இப்படி தாக்குதல்களை போலீசார் தொடர அவர்களுக்கு உற்சாகம் அளித்துள்ளது, வேலை நிறுத்தம் காட்டிக் கொடுக்கப்பட்ட மறுநாள் திருச்சியில் போக்குவரத்து தொழிலாளர்கள் தாக்கப்பட்டதன் மூலம் இது மேலும் நிரூபணமாகி உள்ளது.

தொழிலாளர்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் பஞ்சாபிலும், காஷ்மீரிலும், அஸாமிலும், தமிழ் ஈழத்திலும் உள்நாட்டு யுத்தங்களை நடத்தும் இதே ஆயுதப் படைகள் தான் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலை தொடுத்துள்ளனர். தொழிலாள வர்க்கத்தின் நலன்களை பாதுகாககும் அடிப்படையில் சி பி ஐ (எம்) சி:பி.ஐ தலைமைகளின் தேசியவாத, பேர்னவாத நிலைப்பாடுகளை தொழிலாள வர்க்கம் அடியோடு நிராகரிக்க வேண்டும். முதலாளித்துவ அரசினால் நடத்தப்படும் யுத்தங்கள், நமது யுத்தங்கள் அல்ல என்று தொழிலாளர்கள் கூற வேண்டும, ஒரு பைசாவோ, ஒரு ஆளையோ இந்த யுத்தங்களுக்கு வழங்கக் கூடாது. பஞ்சாப், காஷ்மீர், அஸாமிலிருந்து இராணுவங்கள் வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் கோர வேண்டும்.

போக்குவரத்து தொழிலாளர்களை பாதுகாக்க இதர தொழிலாளர்களையும் ஐக்கியப் படுத்துவதற்கு பதிலாக இத்துரோகத் தலைமைகள் போலீசாருடனும், அரசாங்கத்துடனும் ஐக்கியப்பட்டு நின்று ''பொது மக்களின் வசதி''யை கருத்திலகொண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நீடிக்காது இடை நிறுத்த வேண்டும என்று அழைப்பு விடுத்தனர். ஆனால் போக்குவரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு பொதுமக்கள் பெரும் ஆதரவையும, அனுதாபத்தையும் காட்டினார்கள். போக்குவரத்து தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தப் போராட்டம் நீடிக்கப்பட்டிருக்குமாயின் அதற்கு பொதுமக்களும அவர்களது முழுமையான ஆதரவை தெரிவித்திருப்பார்கள், ஏனெனில் போக்குவரத்து தொழிலாளர்களைப் போலவே இதர தொழிலாள வர்க்கப் பிரிவினரும், ஒடுக்கப்படும மக்களும இளைஞர்களும் இதே போன்ற தாக்குதல்களை எதிர் கொள்ளுகின்றனர் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும.

இதற்கு தொழிலாளர்கள் கொடுக்கக்கூடிய ஒரே பதில் முதலாளித்துவ அரசை தூக்கிவீசி சோசலிசக் கொள்கைகளை அமல்படுத்தும் ஒரு தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கம அமைக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் பலத்தை அணிதிரட்டுவதே, இந்த வர்க்கப் போராட்டததல் முதலாளித்துவ அரசு தூக்கி வீசப்பட வேண்டும. அழிதொழிக்கப்பட வேண்டும, அந்த ஒடுக்குமுறை அரசை தொழிலாளவர்க்கம் எந்த வழியிலும தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியாது. எதிர்ப்புரட்சிகர தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள, தமது உயிர்களையும அமைப்புகளையும் பாதுகாக்க பாதுகாப்பு அணிகளை உருவாக்க வேண்டும். தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான தாககுதல்கள் தொடர விடாது தடுகக ஒரு கால வரையற்ற பொது வேலை நிறுத்தத்திற்கு தயார் செய்ய செயய வேண்டும, சரியான புரட்சிகர தலைமையும், வேலைத்திட்டமும வழங்கப்படுமாயின் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதற்கான நிலைமைகளை உண்டுபண்ணும்.

(12 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



(2ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைகள் தொழிலாள வர்க்கத்தை, முதலாளித்துவ கட்சிகளின் (அரசியல் ஆளுமையின்) கீழ் கொண்டு வரும் முயற்சிகளை தொழிலாளர்கள் நிராகரிக்க வேண்டும், மேலும் இந்த துரோக தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் வைத்திருக்கும் அரசியல் கூட்டை முழுமையாக துண்டிக்கும்படி தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்க வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்கான, முன்னேற்றத்திற்கான வழிகாட்டியாக புரட்சிகர மார்க்சிச கட்சியை—அதாவது டிராட்ஸ்கிசக் கட்சியை கட்டப் போராட வேண்டும்

### 5. தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கம் அமைத்தல்

இன்றைய சமூக நெருக்கடிக்கு காரணம் உலகம் பகைமை நிறைந்த தேசிய அரசுகளாக பிளவுப்படுத்தப்பட்டிருப்பதும் தனியுடைமையின் அராஜக உற்பத்தி முறையுமே ஆகும். வளர்ச்சியடைந்த தொழில் நுட்பத்தின் உதவியுடன் இறுக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட உலகப் பொருளாதாரத்திற்கும் தேசிய அரசு அமைப்புகளுக்கும், உள்ள முரண்பாடும், தனியுடைமைக்கும் சமூக உற்பத்திக்கும் இடையே உள்ள முரண்பாடும் கூர்மையடைந்துள்ளது. தொழிலாளர் அனைவருக்கும் வேலையை உத்தரவாதம் செய்யவும், மூடிய ஆலைகளை திறக்கவும், ஆட்குறைப்புகளை தடுக்கவும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ற சிறந்த சம்பள உயர்வுக்கும், வறுமையை ஒழிக்கவும், அனைத்து சமூக சீரழிவுகளை இல்லாதொழிக்கவும், அனைத்து அடிப்படை தொழிற்துறைகளையும் வங்கிகளையும் முதலாளிகளுக்கு நஷ்டஈடின்றி தொழிலாளவர்க்க ஆதிக்கத்தின்கீழ் சுவீகாரம் செய்தல், ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கடன்களை தள்ளுபடி செய்தல் ஆகிய சோசலிச வேலைத் திட்டங்களை நிறைவேற்றவும் இந்து வகுப்புவாத, இந்தி பேரினவாத, மற்றும் தொழிலாளர் விரோத கறுப்புச் சட்டங்களையும்கொண்ட இந்திய அரசியலமைப்பை அகற்றி எந்த தனி மொழிக்கோ அல்லது மொழிகளுக்கோ சிறப்பு ஸ்தானம் இல்லாமலும், மதத்தை தனிநபரின் விவகாரமாக்கி, அரசிலிருந்து மதத்தை முழுமையாக பிரிக்கும், சிறிய மொழி, மதப்பிரிவுகளின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும்,

ஏழை விவசாயிகளின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க, உழுபவர்களுக்கு நிலங்களை வழங்க புதிய புரட்சிகர விவசாய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்,ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யும் தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடல் வேண்டும்.

## உலக முதலாளித்துவ நெருக்கடி

பாரசீக வளைகுடா யுத்தம், ஏகாதிபத்தியவாதிகள் மறுபடி உலகத்தை புதிய கூறுபோடுவதற்கான தொடக்கத்தை குறித்தது. முன்னர் ஒரு சமயம் அவர்களுடைய காலனிகளாக இருந்த பல பிரதேசங்களை மறுபடி அடிமைப்படுத்தி, காலனிகளாக்கி சூறையாட வேண்டும் என்பது பற்றி அவர்கள் அனைவரும் உடன்பட்டிருந்தாலும், இந்த வளர்ச்சிப் போக்கு தவிர்க்க முடியாதபடி அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் மோதல்களை அதிகரிக்கச் செய்துள்ளது,

வளைகுடா யுத்தச் செலவுகளுக்கு பங்களிப்பதாக ஜெர்மனி, ஜப்பானிய ஏகாதிபத்தியங்கள் வாக்குறுதி அளித்திருந்த போதிலும் அமெரிக்கா கூறும் யுத்தச் செலவு பற்றி அதிருப்தி கொண்ட ஜெர்மனி யுத்தச்செலவு விபரங்கள் பற்றி அறிய விரும்புவதாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம்தெரிவித்துள்ளது. அதேபோல் வளைகுடா யுத்தத்திற்கு பின்னர் ஐரோப்பிய ஏகாதியத்தியங்களை ஒரு அனைத்து ஐரோப்பிய இராணுவ படை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதித்தனர். இது ஏகாதிபந்தியங்களுக்கு இடையில் அதிகரித்துவரும் நம்பிக்கையின்மை பகைமை உணர்வுகளையும் பிரதிபலிப்பதாக உள்ளது.

எண்ணெய் வளம் நிறைந்த வளைகுடா பகுதியின் மீது அதன் சொந்த ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக புஷ் நிர்வாகம் ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திற்கு பொறுப்பெடுத்தது, ஐரோப்பிய ஜப்பானிய போட்டியாளர்களுக்கு மேலாக அதன் கைகளை பலப்படுத்திக் கொள்வதற்காக அமெரிக்கா இராணுவ வலிமையை காட்டி மிரட்ட எண்ணியது. ஆனால் ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க இராணுவ வெற்றியை தொடர்ந்து அமெரிக்காவின் நோக்கங்கள் அதன் சொந்த கூட்டாளிகளினுலேயே ஆபத்துக்கு உள்ளாகியது. எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் எந்த ஒரு மத்திய கிழக்கு சமாதான மாநாட்டிலும் ஒரு பெரும் பங்கு தமக்குத் தேவையென்று ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் கூறுகின்றனர். இதனை அமெரிக்கா இதுவரையில் எதிர்த்து வந்தது.

ஈராக்கின் வடபகுதியில் குர்தீஷ் மக்களை கட்டுப்படுத்தவும். ஈராக்கினுள் ஏகாதிபத்திய சக்திகள் காலை ஊன்றுவதற்கு வசதியாகவும் பிரிட்டிஷ், பிரான்ஸ், ஜெர்மனி தலைமையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தமது படைகளை வட ஈராக்கிற்கு நகர்த்தினர். வடக்கு பகுதியை பெரும்கூறு போடும் திட்டத்தில் ஐரோப்பாவினுல் அமெரிக்கா புறக்கணிக்கப்படலாம் என்பதை உணர்த்ததும், தயக்கத்துடன் இறுதி நிமிடத்தில் புஷ் நிர்வாகமும் அமெரிக்கப் படைகளை வடபகுதிக்கு அனுப்பியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவத்தின் ஸ்திர நிலை உத்தரவாதம் செய்யப்படுவதற்கு அததிவாரமாக இருந்த அமெரிக்காவின் பிரமாண்டமான பொருளாதார சக்தி இன்று வீழ்ச்சிகண்ட நிலைமையில் அதனை மீட்டெடுக்க இராணுவ சாகஸத்தில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது, அத்த சமயம் இன்று பெரும் பொருளாதார சக்திகளாக வளர்ச்சி கண்டுள்ள ஜெர்மனியும், ஜப்பானும் உலக விவகாரங்களில் அவர்களது அரசியல் பங்கை இரண்டாம் உலக யுத்தத்தில் அவர்களின் தோல்வி நிர்ணயிப்பதை சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

## பூகோள உற்பத்தி

பூகோள ரீதியாக உற்பத்தி ஒருங்கிணைக்கப்பட்டதானது, அனைத்து வடிவமான பொருளாதார தேசிய வாதத்தையும் சாத்தியமற்றதாக்கி உள்ளது. முழு பூகோளமுமே முதலாளித்துவ உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் சேவை செய்யும் தொழிற் கூடமாக இருக்கிறது. சர்வதேச போட்டி அழுத்தத்திற்கு அரசு எல்லைக்கோடுகள் நீடித்த உத்தரவாதம் எதனையும் அளிக்கவில்லை. பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் அவர்களது உள்நாட்டு சந்தைகளில் மட்டுமல்ல, உலக சந்தையிலும் கூட ஒரு ஆதிக்க நிலையை நிலைநாட்ட முடிந்தால்தான் பிழைத்திருக்க முடியும். பொருளாதார ரீதியாக அல்லது அரசியல் ரீதியாக அல்லது இராணுவ நடவடிக்கைகள் மூலமாக ஒவ்வொரு தேசிய அரசையும் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகள் மேலாதிக்கத்திற்காக போராடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

## இந்திய முதலாளித்துவ நெருக்கடி

40 ஆண்டுகளாக உள்நாட்டு சந்தையை பாதுகாக்க இந்திய ஆளும் வர்க்கம் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் சர்வதேச போட்டியின் அழுத்தத்தினுல் தகர்த்து வீழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மறுபடி இந்தியாவை காலனி நாடாக மாற்றவும் வரம்பற்ற சுரண்டலை நடத்தவும் ஏகாதிபத்தியங்கள் முயற்சித்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் பிரமாண்டமான அழுத்தத்தைக் கொடுக்கின்றன, ஏற்கனவே இந்திய அரசாங்கம் இந்த நிதி நிறுவனங்களிடம் வாங்கிய 2¼ லட்சம் கோடி ருபாவிற்கான கடனுக்கான வட்டியை செலுத்த முடியாத நிலைமையிலும், இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு அந்நியச் செலாவணி இருப்பு நெருக்கடியிலும் உள்ளது.

இந்திய பொருளாதார நெருக்கடி பற்றி உலக வங்கியின் ஆசியப் பிரிவுக்கான துணைத்தலைவர் அட்டியா கராசா மானோச்லு வான்கூவரில் நடந்த ஒரு கருத்தரங்கில பின்வருமாறு கூறினர்: 'இந்திய பொதுத் தேர்தலுக்கும் பிறகு மத்தியில் பதவி ஏற்கும் புதிய அரசு, பல்வேறு பொருளாதார சீர்கேடுகளை சரிசெய்ய வேண்டியதிருக்கும். இந்தியாவைப் பொருத்தவரை இப்போது அந்த நாடு நெருக்கடியான காலக்கட்டத்தில் இருப்பது உண்மை நிலவரமாகும். ஒட்டுமொத்தமான பொருளாதார பிரச்சினைகளினால் முக்கியப் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. இப்போது இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடிக்கு வளைகுடா போர் மட்டும் காரணம் என்று கூறிவிட முடியாது. ஏற்களவே தீவிரமாகியிருந்த அன்னியச் செலாவணி இருப்புப்பற்றுகுறையும் அதற்கு ஒரு காரணமாகும். இத்துடன் உள்நாட்டு நிதி பற்றுக்குறையும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.''

இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள அன்னியச் செலாவணி பற்றுக்குறை நெருக்கடியானது, பின்தங்கிய தொழில் நுட்பத்தில் இயங்கும் இந்தியத் தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் உலக சந்தையில் போட்டியிட முடியாத நிலைமையின் நிதி வெளிப்பாடாகும். இப்படியான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதி ஏகாதிபத்தியங்களுடன் மேலும் நெருங்கிய உறவைஏற்படுத்தி அவற்றிற்கு கீழ்படிந்து செயல்படுவதன் மூலமாக தமது நலன்களை காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கின்றன, பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச்சந்தையில் மட்டும் தங்கியிருக்கும் சிறிய தொழிற்துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு பகுதி ஏகாதிபத்திய கம்பனிகளின் ஆதிக்கத்தினுல் துடைத்துக்கட்டப்படும் அபாயத்தை எதிர்கொண்டதன் காரணமாக ஏகாதிபத்தியத்தின் திட்டங்களுக்கு எதிராக வாயளவிலானஎதிர்ப்பை மட்டுமே தெரிவிக்கும் வல்லமையுடையவர்களாக இருக்கின்றனர், ஆனல் இரு பகுதியினருக்கும் தொழிாள வர்க்கம் சம்பந்தமாக இருக்கும் பொதுவான பீதியின் காரணமாகும்.

அந்நிய செலாவணி பற்றுக் குறையை மட்டுமல்ல வரவு செலவு பற்றுக்குறை நெருக்கடியை தீர்ப்பதற்கும் இந்திய அரசாங்கம் ஏகாதிபத்திய வங்கிகளிடம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்த அரசியல் நிலைப்பாட்டையும் நிர்ணயிப்பதாக உள்ளது. இதற்கு சிறந்த அண்மைக்கால எடுத்துக்காட்டு ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் உலக ஏகாதிபத்தியங்கள் நடத்திய காலனியாதிக்கத்திற்கான யுத்தத்தின போது அமெரிக்க போர் விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள் நிரப்ப காங்கிரஸ் ஆதரவில ஆட்சி செய்த சந்திரசேகர் அரசாங்கம் அனுமதி அளித்தது. இதற்கு ஸ்டாலினிச சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. தலைமைகளின் நிபந்தனையற்ற ஆதரவுடன் ஆட்சி செய்த வி. பி. சிங் அரசாங்கம் அமெரிகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் அனுசரணையாக இருந்தது. இந்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கம் அதன் வர்க்க நலன்களை பாதுகாக்க ஏகாதிபத்தியவங்கியாளர்களின் கட்டளைப்படி செயற்படும் சேவகனுக இருந்து இந்திய தொழிலாளர்கள், வ்வசாயிகள் மேல் முன்கண்டிராத காட்டுமிராண்டிதனமான தாக்குதல்களை தொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் வளர்ச்சி அடையும் புரட்சிகரமான போராட்டங்களை எதிர்கொள்ள ஏகாதிபத்தியம் இரண்டு வழிகளை கையாளுகிறது. அதனை நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரான டிராட்ஸ்கி பின்வருமாறு விளக்கினர்: ''ஒரு புறம் 'மக்கள் முன்னணிகள்' (வர்க்கக் கூட்டு அணிகள்)—மறுபுறம் பாசிசம் இவை இரண்டுமே பாட்டாளி வர்க்க புரட்சிக்கு எதிராக ஏகாதிபத்தியத்தின் கடைசி அரசியல் ஆயுதங்களாகும்.''

ஸ்டாலினிச மக்கள் முன்னணிகளின்—வர்க்க கூட்டு அணிகளின்—முழுமையான பிற்போக்கு குணம்சத்தை டிராட்ஸ்கி பின்வருமாறு அம்பலப்படுத்தினர்: ''பாராளுமன்ற பிரமைகள் மூலம் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தூங்கவைப்பதன் மூலமும் போராடுவதற்கான அவர்களின் விருப்பத்தை செயலிழக்கச் செய்வதன் மூலமும் மக்கள் முன்னணிகள் பாசிச வெற்றிக்கான சாதகமான நிலைமைகளை தோற்றுவிக்கின்றன. முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டரசாங்கம் அமைக்கும் கொள்கைக்கு பாட்டாளி வர்க்கம் பல வருடங்கள் புதிய வேதனைகளையும் தியாகங்களையும் மட்டுமல்ல பல பத்தாண்டுகள் பாசிச பயங்கரத்தையும் அனுபவிக்க வேண்டியிருக்கும் ''

சி.பி.ஐ.(எம்) சி பி. ஐ. தலைமைகளை கூட்டரசாங்கத்திற்குள் கொண்டு வருவதற்கு இந்திய ஆளும் வர்க்கத்தின் முக்கிய பகுதி எடுக்கும் நடவடிக்கை தொழிலாள வர்க்க எதிர்ப்பை கட்டுப்படுத்தவும், தொழிலாள வர்க்கத்தை கையாலாகாத நிலைமைக்கு உள்ளாக்கி, தொழிலாளர் விரோத சமூக சக்திகளை பாசிச ஆட்சிக்கான சமூக தளங்களாக மாற்றக்கூடிய அபாயத்தையும் கொண்டுள்ளது பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து வகுப்புவாத பிரச்சாரம் தொழிலாளர் விரோத சமூக சக்திகளை அணிதிரட்டுவதற்கான சித்தாந்தமாக பயன்படுத்தப்படுகிறது ஆனல் டிராட்ஸ்கி கூறியது போல் ''எவ்வாறாயினும் வரலாற்று கண்ணோட்டத்தில் பார்க்கையில் அந்த இரண்டு வளங்களுமே தற்காலிகமானவை. முதலாளித்துவத்தின் சீரழிவு பிரான்சில் பிரிஜியன் தொப்பியின் கீழும் ஜெர்மனியில் சுவாஸ்டிகா சின்னத்தின் கீழும் தொடருகின்றது, முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதைவிட வேறு எவ்வழியிலும் புதிய பாதையை காண முடியாது,''

சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சர்வதேசிய சோசலிச வேலைத் திட்டத்தின் முக்கியத்துவம் இதில் தான் இருக்கிறது. இன்றைய அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிக்கான தீர்வு இந்திய முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி தொழிலாள வர்க்க ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்துவதன் மூலமும் சர்வதேச சோசலிசப் புரட்சியின் வெற்றிக்காக போராடுவதன் மூலமுமே தீர்க்க முடியும் என்ற உண்மையை இத்தேர்தல் பிரச்சாரத்தில் கூறும் ஒரே கட்சி டிராட்ஸ்கிசக் கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகம் தான்,

''தேசிய ஐக்கியத்தைக் காக்க'' ''மதசார்பின்மையை காக்க' தேசிய இறையாண்மையை காக்க போன்ற வர்க்க சமரச ஏமாற்றுக் கோஷங்களை பயன்படுத்தி முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிக்கு தொழிலாள வர்க்கத்தை பலியிடும் ஆளும் வர்க்கத்தின் மற்றும் அதன் அரசியல் ஏஜண்டுகளாக சி.பி.ஐ (எம்) சி.பி.ஐ. ஸ்டாலினிசத் தலைமைகளின் முயற்சிகளை தொழிலாள வர்க்கம் எதிர்க்க வேண்டும். முதலாளித்துவ நெருக்கடிக்கு தொழிலாள வர்க்கம் ஒரு போதும் பொறுப்பு எடுக்க முடியாது. எடுக்கவும் கூடாது

## தொழிலாள வர்க்க துரோகத் தலைமைகள்

தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளான ஸ்டாலினிச சி.பி.ஐ,(எம்)சி.பி.ஐ. தலைமைகள் அவர்களின் காட்டிக் கொடுப்பின் உச்சக் கட்டமாக ஆளும் வர்க்க கட்சிகளுடன் கூட்டரசாங்கத்தில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். இலங்கையிலும், சிலியிலும், இந்தோனேசியாவிலும் தொழிலாளவர்க்க துரோகத் தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன்

(8ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



(7ம் பக்கத் தொடர்ச்சி)

**கூட்டரசாங்கத்தில் சேர்த்ததன் அரசியல், சமூக பிரதிவிளைவுகளையும் அதன் படிப்பினைகளையும் இந்திய தொழிலாளர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் பாசிச ஆட்சிக்கான சமூக தளத்தை உண்டுபண்ணும் கூட்டரசாங்கத்தில், ஸ்டாலினிசத் தலைமைகள் சேரும் முயற்சியை சி.பி.ஐ.(எம்).சி.பி.ஐ.ச் சேர்ந்த கீழ்மட்ட உறுப்பினர்கள் முழு சக்தியையும் பயன்படுத்தி எதிர்க்க வேண்டும்.**

கடந்த காலங்களில் முதலாளித்துவ ஆட்சியின் ஒவ்வொரு நெருக்கடி கால கட்டத்திலும் இந்த ஸ்டாலினிச தலைவர்கள் முதலாளித்துவ ஆட்சியை அபாயங்களிலிருந்து காப்பாற்ற அவர்கள் 'மக்கள் முன்னணி' கொள்கை மூலம் வர்க்கப் பகைமைகளை 'சமாதானப்படுத்தினா'. 1947ல் இந்திய துணைக்கண்டத்தில் ஏகாதிபத்தியவாதிகளின், இந்திய முதலாளித்துவத்தின் கூட்டு எதிர்புரட்சி சதியினால் ஏற்படுத்தப்பட்ட பிரிவினைக்கு அனுமதி அளித்து பட்டிருந்த ஸ்டாலினிச இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் நியாயப்படுத்தலை வழங்கியது. 1969ல் காங்கிரஸ் ஆட்சி நெருக்கடியில் தள்ளப்பட்ட போது சி.பி.ஐ.(எம்).சி.பி.ஐ. இரண்டுமே இந்திராகாந்தி ஆட்சிக்கு ஆதரவளித்து தக்க வைத்தனர் இந்த இரு கட்சிகளுமே 1971ல் பங்களா தேஷிலும், 1987ல் தமிழ் ஈழத்திலும் இந்திய இராணுவத்தின் பிற்போக்கு தலையீட்டுக்கு ஆதரவளித்தனர். 1977ல் அவசரநிலை ஆட்சிக்கு சி.பி.ஐ. ஆதரவளித்தது இந்த வருடம் ஏகாதிபத்திய பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சந்திரசேகர் அரசாங்கத்தின் இடைக்கால பட்ஜெட்டுக்கு சி.பி.ஐ.(எம்),சி.பி.ஐ. இரு கட்சிகளுமே ஆதரவாக வாக்களித்தனர்.

சி.பி.ஐ (எம்),சி.பி.ஐ. இரண்டுமே தமது தேர்தல் அறிக்கையில் சமூக நீதியை காக்கவும், 'தேசிய ஐக்கியத்துக்கும்' 'தேசிய இறையாண்மையை காக்கவும்', 'மதசார்பின்மையை பாதுகாக்கவும்' பிரிவினைவாத, வகுப்புவாத சக்திகளை தோற்கடிக்கவும் அழைப்பு விடுத்துள்ளனர். வர்க்க சாரமற்ற இந்த சுலோகங்களை ஸ்டாலினிசத் தலைமைகள் முன்வைப்பதற்கு காரணம் அவர்களது துரோகத்தனமான மக்கள் முன்னணி கொள்கையை தொடர்வதற்காகவாகும். பாரதீய ஜனதாக் கட்சியையும், காங்கிரஸ் (இ) கட்சியையும் நாட்டின் பிரதான எதிரிகளென சி.பி.ஐ (எம்) சி.பி.ஐ. தலைமைகள் முழங்கும் அதே சமயம் இப்படியான பிரிவினைவாத, வகுப்புவாத சக்திகளுடன் பஞ்சாபில் கூட்டுச்சேர்ந்து 'தீவிரவாதிகளுக்கு எதிராக 'தேசிய ஐக்கியத்தை காக்க தேர்தல் உடன்பாடு பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவும் இத்தலைமைகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்! இந்நிலைப்பாடு இத தலைமைகளின் அரசியல் மோசடியை மேலும் அம்பலப்படுத்தி உள்ளது. அவர்களுடைய அரசியல் அகராதியில் 'தேசிய ஐக்கியம்' என்பது அவர்களின் எஜமானர்களான ஆளும் வர்க்கத்துடன் ஐக்கியத்தைக் குறிக்கிறது.

மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் பரந்தளவில் கதவடைப்பினாலும், ஆட்குறைப்பினாலும் வேலை இழந்த லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைகளை பாதுகாக்க இந்த ஸ்டாலினிசத் தலைமைகள் மறுக்கின்றன. ஏகாதிபத்திய வங்கியாளர்கள் கோரும் போக்குவரத்து கட்டண உயர்வுகளை ஏற்க மறுக்கும் மக்களை மேற்கு வங்கத்தில் போலிசை ஏவி சுட்டுத் தள்ளுகின்றனர். ஸ்டாலினிசத் தலைமைகள் அவர்கள் ஆட்சி செய்யும் இம்மாநிலங்களில் முதலீடுகளை செய்யும்படி பிர்லா, அம்பானி, கோயாங்கா போன்ற முதலாளிகளிடம் மன்றாடுகின்றனர். கேரளாவில் தொழிற்துறை அமைச்சர் கௌரி, வேலையில்லா பிரச்சினைக்கு தீர்வுகான தனியார் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்று கூறுமளவுக்கு சென்று விட்டார். சந்திரசேகரின் இடைக்கால பட்ஜெட்டுக்கு ஆதரவளித்ததன் மூலம் அவர்கள் வெளிப்படையாகவே தேசிய மயமாக்கப்பட்ட பொதுத் துறையை தகர்ப்பதற்கு ஆதரவளித்துள்ளனர். கதவடைப்பு செய்யப்பட்ட, ஆட்குறைப்பு செய்யப்பட்ட பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் இப்பொழுது தெளிவாகி வருவது என்னவென்றால் கதவடைப்பு செய்யப்பட்ட, நலிந்த ஆலைகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற இத்தலைமைகள் கோருவது ஒரு வஞ்சகத்தனமான ஏமாற்றுதலாகும். இது தொழிலாளர்களை ஒரு புரட்சிகரமான வேலைத் திட்டத்தில் அணிதிரட்டுவதை இத்தலைமைகள் நிராகரிப்பதை மூடிமறைப்பதற்கான ஒரு கோஷமாக பயன்படுத்தப்படுகிறது.

அவர்கள் தொழிலாள வர்க்கத்தை புரட்சிகரமான முறையில் அணிதிரட்ட மறுப்பதற்கு காரணம் முதலாளித்துவ வர்க்கத்தின் "முற்போக்கு பகுதியினர்" என அவர்கள் அழைப்பவர்களுடன் அவர்களுக்குள்ள கூட்டை அது குழப்பிவிடும் என்பதனாலாகும். அதற்கு காரணம் இத்தலைமைகளே முதலாளித்துவ தனிச்சொத்துடமையை காக்க கங்கணம் கட்டி நிற்பதனாலாகும். பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் பகுதியில் "முற்போக்கு தன்மையை" இவர்கள் 'கண்டுபிடிப்பதற்கு' காரணம் அவர்களது வர்க்கக் கூட்டு மக்கள் முன்னணி கொள்கையை நியாயப்படுத்துவதற்காகவாகும்.

இந்த மக்கள் முன்னணி கொள்கையின் அடைப்படையிலேயே இப்பொழுது அவர்கள் முதலாளித்துவ அமைச்சரவையில் அமைச்சர்களாகி தொழிலாளர்களை 'கட்டுப்படுத்துவதற்கு' அழைக்கப்பட்டிருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கத்துடன் உள்ள நேர்மையற்ற உறவை துண்டித்து முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி ஒரு தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அமைக்க தொழிலாளர்களுடன் நேர்மையான ஐக்கியத்தை ஏற்படுத்தும்படி தொழிலாளர்கள் இத்தலைமைகளை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது

## சி.பி.ஐ. (எம்) சி.பி.ஐ-க்கு கண்டன வாக்குகள்

இந்த ஸ்டாலினிச தலைமைகளின்மேல் இன்னும் பிரமைகளை வைத்திருப்பவர்களுக்கு, தமது சொந்த நடைமுறை அனுபவத்தின் வாயிலாக அவர்களது துரோகத்தைக் கண்டு கொள்ள பின்வரும் கோரிக்கையை முன் வைக்கிறோம். சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டித்து, சோசலிச வேலைத் திட்டத்தை செயல்படுத்தும் தொழிலாளர்—விவசாயி அரசாங்கம் அமைக்கப் போராடுமாறு நிர்ப்பந்தித்து—டிராட்ஸ்கிஸ்டுகள் போட்டியிடாத தொகுதிகளில் சி.பி.ஐ.(எம்),சி.பி.ஐ. வேட்பாளர்களுக்கு மட்டும் உங்களது விமர்சன வாக்குகளை (Critical Vote) அளியுங்கள்!

## புரட்சித் தலைமையை கட்டுங்கள் !

தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளின் காட்டிக்கொடுப்புகளின் காரணமாகவே தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் தாக்குதல்கள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடி சர்வதேச ரீதியாக உள்ள பிரச்சினையாகும். இந்நெருக்கடியை தீர்ப்பதற்காகவே உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு போராடி வருகிறது. தொழிலாள வர்க்கத்தின ஸ்டாலினிச மற்றும் சீர்திருத்தவாத தலைமைகளுக்கு எதிராகவும் குட்டி முதலாளித்துவ மாவோவாத தலைமைகளுக்கு எதிராகவும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்காகவும், சோசலிசக் கொள்கைகளுக்காகவும் சமரசமின்றி போராடி வரும் இயக்கம் டிராட்ஸ்கிச இயக்கமாகும்.

டிராட்ஸ்கிச இயக்கத்துக்கும் தொழிலாள வர்க்க மத்தியிலுள்ள இதர அனைத்து அரசியல் போக்குகளுக்கும்—ஸ்டாலினிசம், மாவோயிசம், சீர்திருத்தவாதத்துக்கும்—இடையிலுள்ள அடிப்படையான வேறுபாடு சர்வதேசியத்துக்கும், தேசியத்துக்கும் இடையிலான வேறுபாடாகும். சர்வதேசியத்துக்கான போராட்டம் உலகப் பொருளாதார நெருக்கடியினால் உக்கிரப்படுத்தப்படும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைமையின் கீழ் முதலாளித்துவத்திற்கு எதிரான பொதுப் போராட்டத்தை முன்னெடுப்பதாகும். மறுபுறம் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் போக்குகள் முதலாளித்துவ நெருக்கடிக்கு தொழிலாள வர்க்கத்தை பலியிடும் வேலைத் திட்டத்தில் செயல்படுகின்றன.

இவ்வாறாக தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்ப்பதற்காக அக்டோபர் புரட்சியையும் அதன் சர்வதேசிய முன்நோக்குகளையும் குழிபறித்த ஸ்டாலினிசத்துக்கு எதிரான போராட்டத்தில் 1938ல் உருவாக்கப்பட்ட நான்காம் அகிலத்தின் போராட்டம் ஸ்டாலினிசத்துக்கு எதிரான வரலாற்று வெற்றியை அடைந்துள்ளது. சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் வீழ்ச்சி அடைந்தது சோசலிசம் அல்ல அதன் மரண எதிரியான ஸ்டாலினிசமே. இது தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியும் என்று கூறிய மார்க்சிச விரோத ஸ்டாலினிசத்துக்கு ஏற்பட்ட வரலாற்று தோல்வியாகும். மறுபுறம் அக்டோபர் புரட்சியை சர்வதேசியத்துக்கும் குறிப்பாக வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு விஸ்தரிப்பதன் மூலமே சோசலிசத்தின் இறுதி வெற்றியை அடைய முடியும் என்ற சர்வதேசிய முன்நோக்கில் மூன்றாம் அகிலத்தை 1919ல் கட்டிய லெனின், டிராட்ஸ்கியின் முன் எதிர்பார்ப்புகளும், சர்வதேசியத்துக்கான போராட்டமும் மிகச்சரியானவை என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தொழிலாள வர்க்கத்தின், ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கான வழிகாட்டியான டிராட்ஸ்கிசத்துக்கு இன்றைய மார்க்சிசத்துக்கு போராடும் கட்சியான இந்தியாவிலுள்ள டிராட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தை தொழிலாள வர்க்கத்தின் பரந்த புரட்சிக் கட்சியாக மாற்ற முன்வரும்படி வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும், புரட்சிகர அறிவுஜீவிகளையும். இளைஞர்களையும் அழைக்கிறோம்,

சோசலிசத் தொழிலாளர் கழகம் பின்வரும் வேலைத்திட்டங்களுக்காக போராடுகிறது.

முதலாளித்துவ லாப உற்பத்தி முறையின் உலக நெருக்கடியினால் அதிகரித்துவரும் ஆலைமூடல்கள், ஆட்குறைப்புகள் சம்பள வெட்டுகள் முதலியவற்றை தொழிலாள வர்க்கத்தின் மேல் திணிப்பதை முடியடிக்க சமுதாயத்தின் தேவையின் அடிப்படையில் உற்பத்தியை மறு ஒழுங்கமைக்க அனைத்து அடிப்படைத் தொழிற் துறைகளையும், வங்கிகளையும் முதலாளித்துவ உடமையாளர்களுக்கு நஷ்ட ஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின்கீழ் தேசியமயமாக்கல்.

- உலக வங்கி, ஐ.எம்.எப். போன்ற ஏகாதிபத்திய நிதி அமைப்புகளுக்கான கடன்களையும், உள்நாட்டு முதலாளிகளுக்கான கடன்களையும் திருப்பிச் செலுத்துவதை நிராகரித்தல்.
- தொழிற்சங்க தலைமைகளின் ஆதரவுடன் தொழிலாளர்கள்மேல் முதலாளிகள் தொடுக்கும் தாக்குதலை எதிர்த்துப் போராட தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலைக் குழுக்களை அமைத்தல்! இந்தக் குழுக்கள் ஆலைமூடல் அபாயத்திற்கு எதிராக ஆலையில் உள்ளிருப்புபோராட்டத்தை தயார் செய்ய வேண்டும்!
- வேலைநீக்கம் செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு அமர்த்தல்!
- போராட்டத்திலுள்ள தொழிலாளர் சபைகளை (சோவியத்துக்களை) அமைத்தல்!
- முதலாளித்துவ அரசின் படைகளின் பயங்கரவாதத்திற்கும் கருங்காலி குண்டர்களின் தாக்குதல்களுக்கும் எதிராக தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களையும், மறியல் போராட்டங்களையும் ஊர்வலங்களையும், கூட்டங்களையும் பாதுகாக்க தொழிலாளர்களின் சொந்த பாதுகாப்பு படைகளை அமைத்தல்!
- அனைத்து தொழிற்சங்க விரோத சட்டங்களையும், கறுப்புச் சட்டங்களையும் ரத்துச் செய்தல்!
- அனைவருக்கும் வேலையை உத்தரவாதம் செய்தல்!
- சம்பள இழப்பின்றி வாரத்துக்கு 48மணி நேர வேலையை 30 மணி நேரமாக்கல்!
- அனைவருக்கும் இலவச மருத்துவம், கல்வி வசதிகளை உத்தரவாதம் செய்தல்!
- அனைவருக்கும் குடியிருப்பு குடி நீர் வசதியை உத்தரவாதம் செய்தல்!
- அனைத்து துறைகளிலும் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்கல்!

## இளைஞர்களுக்கு வேலைத்திட்டம்

- கல்வி அமைப்பை மறு ஒழுங்கு செய்தல்! தொழிற்சங்கங்களின் மற்றும் மாணவர் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் நவீன தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான கல்வியை இளைஞர்களுக்கு ஏற்பாடு செய்தல்! பாடசாலை மற்றும் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய அனைத்து வேலையற்ற இளைஞர்களுக்கும் உடனடியாக ஒரு தரமான வாழ்க்கைத் தரத்தை உத்தரவாதம் செய்ய வேலையற்றோர் உதவித் தொகையை வழங்கல்! இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் வேலைகளுக்கு சாதி அடிப்படையில் வேலை என்ற மண்டல் கமிஷனுக்குப் எதிராக அனைவருக்கும் கல்வி, வேலை தரக்கூடிய சோசலிச அமைப்பை நிறுவுதல்.

## விவசாயிகளுக்கான வேலைத்திட்டம்

கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில் நுட்ப புரட்சி தொழிற்துறையில் மட்டுமல்ல விவசாயத்துறையிலும் பெரும்மாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. உலகப் பொருளாதாரத்தின் அழுத்தம் நகர்ப்புற தொழில் துறைகளையும் நாட்டுப்புற விவசாய துறையையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது மலிந்த விலையிலும் தரமாகவும் சந்தையில் விற்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள், உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தையிலிருந்து அகற்றும் அபாயத்தை கொண்டுள்ளன

(12ம் பக்கம் பார்க்க)

வெளியீடு : சோசலிசத் தொழிலாளர் கழகம் தபால் பெ. எண் 968, பெரம்பூர் பாரக்ஸ். சென்னை-12 அச்சிட்டோர் : பரணி அச்சகம், சென்னை-12.

ஆசிரியர் : எஸ். சக்தி

படிப்பகம்

www.padippakam.com



# சர்வதேச தொழிலாளர்கள் மாநாட்டிற்கான அறை கூவல்!

—ஞானு

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியாகிய புரட்சிக கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரெஞ்சுப் பகுதியினுலும் மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்டு பிரான்சில் செயற்படும் இயக்கத்தாலும் 5-5-91 அன்று பாரிஸ் நகரில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டம் "சிறிலங்காவின் நிலைமைகளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும" என்ற தலைப்பில் ஈராக்கில் பல்லாயிரககணக்கில் மக்களைக் கொன்று குவித்த ஏகாதிபத்திய யுத்தம் இந்திய துணைக் கண்டத்திலும் குறிப்பாக சிறிலங்காவிலும் ஏற்படுத்திய தாக்கங்கள்பற்றி ஆராய்ந்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் செயலாளர் தோழர் பீட்டர் சுவாட்ஸ் மற்றும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஜெர்மன் பகுதியைச் சேர்ந்த தோழர் நேசனும் இக்கூட்டத்தில் உரையாற்றினர். பிரதான பேச்சை பீட்டர் வழங்கினுர், அதன் சுருக்கம் பின்வருமாறு:—

அண்மையில் நடந்த யுத்தம் குவைத்தை விடுவிப்பதையோ அல்லது சதாம் உசெயினை வீழ்த்துவதையோ அதன் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதை ஒருவருக்கும் விளக்கத் தேவையில்லை. இது பழைய காலனியான ஈராக்கிற்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் மிகக் கொடூரமான யுத்தமாகும். இதன் உள் நோக்கம் மீண்டும் வளைகுடாப் பிராந்தியத்தைக் காலனியாக்குவதும், அதனுடன் உலகின் பெரிய எண்ணை வளங்களை ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதுமேயாகும். இந்த யுத்தம் ஏகாதிபத்தியத்திற்கு உரிய எந்த ஒரு முரண்பாட்டையும் தீர்க்கவில்லை. மாருக இக் கொடூரமான போரைவிட மிக மோசமான அழிவுகளைத் தரக்கூடிய போர்களை எதிர்காலத்தில் உருவாக்குகின்ற புதியதொரு கால கட்டத்தின் ஆரம்பமே இப் போராகும். ஆகையால் இப்போர் பற்றிய பாடங்களை மிகவும் கவனமாகக் கற்றுக் கொள்ளல் தொழிலாள வர்க்கத்திற்கு மிகவும் முக்கியமானதாகும்.

எப்படி ஏகாதிபத்தியவாதிகளால கிட்டத்தட்ட ஒரு தடையும் இன்றி இப்படி ஒரு கொடுமையான யுத்தத்தை நடத்த முடிந்தது?

அதாவது இயங்கிக் கொண்டிருக்கும் எல்லாத தொழிலாள வர்க்க இயக்கங்களினது அரசியல் போக்குகளின் திவால்தன்மையையும், சரணடையும் போக்குகளையும் கொண்டுதான் இதை விளங்கிக் கொள்ள முடியும். அடுத்து தொழிலாள வர்க்கத்திற்குள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த சமூக ஜனநாயகப் போக்கு, அத்தோடு ஒடுக்கப்படும் நாடுகளில் மக்கள் சக்தியில் ஆளுமை புரிந்த தேசிய மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ வாதிகளையும் உள்ளடக்கும். முதலில்நாம் ஸ்டாலினிசத்தில் இருந்து ஆரம்பிப்போம் கோர்பச்சேவின் தங்கு தடையற்ற ஆதரவில்லாமல் கொடூரமான முறையில் இப் போரை நடத்தியிருக்க முடியாதென்பதை நீங்கள் ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டீர்கள் என நம்புகிறேன். உண்மையில் ஸ்டாலினிசம், ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவு கொடுப்பதென்பதொன்றும் புதிதான தொன்றல்ல. 1930களிலிருந்தே ஸ்டாலினிசம், ஏகாதிபத்தியத்தோடு இணைந்து உலக சோசலிசப் புரட்சியைத் தோற்கடிக்கத் தன்னுலான யாவற்றையும் செய்து கொண்டே வருகின்றது.

ஒடுக்கப்படும் நாடுகளில் ஒவ்வொரு கால கட்டத்திலும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கையில், ஸ்டாலினிசம் தனது ஆதரவினை நிறுத்திக் கொண்டது முன்னர் அது இவ்வியக்கங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட ஆதரவினைக் கொடுத்து வந்தது. அதன் காரணம், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு நெருக்கடி கொடுப்பதற்குப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதற்காக மட்டுமே ஆகும். இதனலேயே பி.எல்.ஓ. மற்றும் விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப்பயிற்சிகளும் ஆயுதங்களும் வழங்கினர். கியூபா, எதியோப்பியா, அங்கோலோ போன்றவை ஒரு வரையறுக்கப்பட்ட உதவியைப் பெற்றுக் கொண்டன, ஆனுல் இவை எல்லாம்இன்று முற்ருக நிறுத்தப்பட்டு விட்டன.

இதே போல அக்டோபர் புரட்சியால் பாதுகாக்கப்பட்ட சொத்துறவு முறைகளைப் பாதுகாப்பதை சோவியத் அதிகாரத்துவம் அடியோடு கைவிட்டு விட்டது. உண்மையில் கோர்பச்சேவ் போரிஸ் எல்ட்சின் ஆகியோர் வெளிப்படையாகவே இச்சொத்துறவு முறையைத் தூக்கி எறிவதற்கான சகல வேலைகளையும் இணைந்து செய்கின்றனர். சோவியத் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக இதனை முடிப்பதற்கு, ஏகாதிபத்தியத்தின் உதவி அவர்களுக்கு மிகவும் தேவையாயுள்ளது இதற்காகவே ஏகாதிபத்தியப் போருக்கு எதிராக முலபெல்லாம் காட்டி வந்த சம்பிரதாய பூர்வமான எதிர்ப்பைத் தன்னும் காட்டாதிருந்தனர். கடந்த காலத்திலிருந்து இன்றுவரை தமக்கு ஆதரவளித்த அரசாங்கங்களுக்கும், இயக்கங்களுக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவம் துரோகம் செய்ததோடு இவைகளை நேரடியாகவே ஏகாதிபத்தியங்களிடம் ஒப்படைக்கின்ற வேலையையும் செய்தது. சோவியத் அதிகாரத்துவம் ஈராக்கைப்பற்றித் தமக்குத் தெரிந்த சகல இராணுவ ரகசியங்களையும் நேரடியாகவே பெண்டகனுக்குக் கொடுத்து உதவியது. சோவியத் அதிகாரத்துவம் இப் போருக்கு எதிராக இருந்திருக்குமேயானுல் இப்போது நடந்ததுபோல் ஈராக்கில் பேரழிவினைச் செய்து முடிப்பது மிகவும் கஷ்டமான காரியமாகவே இருந்திருக்கும்,

இரண்டாவதாக சமூக ஜனநாயக வாதிகளைக் குறிப்பிட வேண்டும். தொழிலாள வர்க்கத்திற்குள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த இவர்கள் இப்போருக்கு முழுமையான ஆதரவை வழங்கினர், பிரான்சில், சமூக ஜனநாயக வாத அரசாங்கம் ஈராக்கின்மீது குண்டு மழைபொழிய தனது இராணுவத்தை அனுப்பியது. ஜேர்மனியில், இப் போருக்கு எதிரான மக்கட் பேரணியில் தாம் தலைமைப் பங்கெடுத்து அரசாங்கத்தின் உத்தியோகப் பூர்வ கொள்கைகளுக்குள் அவர்களை இழுத்துச செல்ல வழிவகுத்தனர். AFL-CIO என்ற அமெரிக்கத் தொழிற் சங்கம் மில்லியன் கணக்காக டாலர்களைச் செலவு செய்து விளம்பரங்களைப் போட்டு இப்போரை அழகு படுத்தியது. இப்படியாக இப் புறநிலை மாற்றங்களுககு அடிபணிவது ஏகாதிபத்தியத்தின் கால்வருடிகளான சமூக ஜனநாயகவாதிகளுக்கு பகிரங்கத் தேவையாய் உள்ளது. சீர்திருத்த வாதத்திற்கு அதன முக்கியபணியாக இருப்பது,தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்துடன் இணைத்து விடுவதே. இவர்கள் கடந்த காலங்களில் சில பேச்சு வார்த்தைகளுக்கு ஊடாக தொழிலாள வர்க்கத்திற்குச் சில சலுகைகளையம் சில சீர்திருத்தங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஆனுல் இன்று தீவிரமடைந்து வரும் வர்த்தகப் போட்டிகளின் மத்தியில் இப்படியான சலுகைகளைப் பெறுவதென்பது சாத்தியமற்றதொரு காரியமாகும். ஆகையால் இச் சமூக ஜனநாயகவாதிகள் நேரடியாகவே முதலாளித் அரசுகளின் போலிஸ்காரர்களாக மாறியுள்ளனர்.

மூன்ருவதாக, வளைகுடா யுத்தமானது, தேசிய முதலாளித்துவத் தலைமையாலோ அல்லது குட்டி முதலாளித்துவத் தலைமையாலோ ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க முடியுமென்ற மதிப்பிழந்த கதைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தது. பின்தங்கிய நாடுகளில் உள்ள எல்லா முதலாளித்துவ அரசுகளும் இப்போருக்குத் தமது ஆதரவை வழங்கின. கடந்த காலத்தில் தாங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாதிகள், சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவு கொடுப்பவர்கள் என்று தம் பட்டமடித்துத் திரிந்த அனைவரும் இதனையே செய்தனர், எகிப்து, சிரியா, ஐக்கிய அரபு எமிரேட்டுகள். சௌதிஅரேபியா, துருக்கி போன்றவை ஏகாதிபத்தியங்களுடன ஓர் ராணுவக்கூட்டை ஏற்படுத்திக் கொண்டன. பாகிஸ்தான், ஈராக்கிற்கெதிராக தனது ராணுவத்தை அனுப்பியது இந்தியா தனது விமான தளங்களை ஏகாதிபத்தியத்திற்கு எரிபொருள் நிரப்ப திறந்துவிட்டது. இதைப் போலவே தமிழ் மக்களைக் கொன்ருெழிக்க தனது படைகள தேவைப்பட்டிருக்காவிட்டால், பிரேமதாசாவும் தனது படைகளை யுத்தத்திற்கு அனுப்பியிருப்பாரெனபதில் சந்தேகமே இல்லை. பிரேமதாசா அரசாங்கமும் விமானதளத்தை ஏகாதிபத்தியம் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதி அளிக்க தயார் என்றும் அறிவித்தது, இதற்கான காரணங்கள், இந்த ஆட்சிகள் யாவும் ஏகாதிபத்தியத்தின் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் கூட அவை முதலாளித்துவ அரசுகளே ஆகும். இந்த எல்லா அரசுகளும் ஒரு பககத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் மறுபக்கத்தில் பாட்டாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இடையில் நசுங்குபவையேயாகும். இந்த ஆட்சிகளின் அடித்தளம் முதலாளித்துவ சுரண்டல் முறையை ஒழிப்பதல்ல. பின்வரும் காரணங்களுக்காகவே இவர்கள் தம்மை ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாகக் காட்டுகிருர்கள். அவர்கள் தமது சொந்தத் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டி எடுப்பதில் ஒரு சிறு பகுதியைதாம் பெற்றுக் கொள்வதற்காகவே இதைச் செய்கின்றனர். ஏன ஏகாதிபத்தியம் இன்னும் சிறிது கூடத்தராமல் பெரும் பகுதியைத்தான் எடுக்கிறது என்ற பிரச்சினையில்தான் இவர்கள் ஏகாதிபத்தியத்துடன் முரண்படுகின்றனர், ஆனுல் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி பேரளவில வரும் பொழுது எவ்வித நிபந்தனையுமின்றித் தம்மை ஏகாதிபத்தியததுடன் இணைத்துக் கொள்கிருர்கள். இது ஈராக்கிற்கு எதிரான போருக்கு ஆதரவு கொடுத்த முதலாளித்துவ அரசுகளுக்கு மட்டுமின்றி ஈராக்கிய அரசுக்கும் பொருத்தமானதாகும்.

சதாம் உசைன் ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி அல்ல. அவர் 'மிகப் பெரிய யுத்தம்' என்று கூறி ஆரம்பித்த யுத்தம் இறுதியில் ஆண்மையற்றுப் போயிற்று. காரணம், சதாம் உசெயினின் சொந்தக் கொள்கை முதலாளித்துவ நலன்களாலேயே தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒரு போதும் அவர் அரபுமக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதற்காக குவைத்தில் ராணுவத் தலையீடு செய்யவில்லை. அதற்காக அவர் ஒரு போதும் குவைத் தொழிலாள வர்க்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கவுமில்லை. இந்திய, பாகிஸ்தான், இலங்கைத் தொழிலாள வர்க்கம் உட்பட குவைத் தொழிலாள வர்க்கம் உட்பட குவைத் தொழிலாள வர்க்கத்தை இப்போருக்கு ஆதரவாக அணிதிரட்டியிருந்தால் இப்பிராந்தியத்திலிருந்தே ஏகாதிபத்தியத்தை விரட்டியிருக்கலாம்.

தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதென்பது, ஒரு வர்க்க முன்னேக்கு சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும். சர்வதேச தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டும் ஒரே வழியில் மட்டுமே இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும. இது எல்லாவற்றிற்கும் முதலாக ஒரு புரட்சிகரத் தலைமையைக் கட்டுமாறு கேட்கிறது, இதுவே நான்காம் அகிலத்தின் முக்கியத்துவமாகும். இது ஒரு தனி உலகக் கட்சி. அதற்குப் பல நாடுகளில் பகுதிகள் உண்டு. அதாவது ஒருவர் இக் கட்சியில் சேரும் போது அவர் உலகக் கட்சியில் சேர்கிருரே தவிர குறிப்பிட்ட ஒரு நாட்டில் இருக்கும் பகுதிக் கட்சியில் மட்டும் சேரவில்லை. ஒடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்தின், உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலம், அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்தோடும், கிழக்கு ஐரோப்பியத் தொழிலாள வர்ககத்தோடும் எந்தவிதத்திலும் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது. ஏகாதிபத்திய மையங்களிலிருந்து ஏகாதிபத்தியத்தைத் தூக்கி எறியாமல் இப்போரையோ அல்லது பசி, பட்டினி வறுமையையோ ஒரு போதும் நீக்க முடியாது.

இதன் காரணவாகவே நால்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாள வர்க்கத்தைச் சுதந்திரமாக அணிதிரட்டவும் சுதந்திரமான வேலைத் திட்டத்திற்காகவும் போராடுகிறது. தொழிலாள வர்க்கமானது, ஸ்டாலினிசத்தினதும். முதலாளித்துவத்தினதும் குட்டி முதலாளித்துவத்தினதும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் வரை தனது வரலாற்றுக் கடமையை ஒருபோதும் செய்ய முடியாது, தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து சுதந்திரமாக அணிதிரட்டும் போராட்டத்திற்காக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு எதிர்வரும் நவம்பர் மாதம் பெர்லினில் சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டைக் கூட்டவுள்ளது. இம் மாநாட்டில் நோக்கம் எல்லாக் கண்டங்களிலும், எல்லாத் தேசங்களிலும் உள்ள தொழிலாள வர்க்கத்திடம் நான்காம் அகிலத்தின் வேலைத் திட்டத்தை எடுத்துச் செல்வதாகும், என்று கூறித் தனது உரையை முடித்தார்.

அவரது உரையின் பின்னர் கேள்விகளுககு பதிலளிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள குட்டி முதலாளித்துவத் தேசிய விடுதலை இயக்கங்களில் ஒன்ருன தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்; பி.எல்.ஓ., ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த போன்று உலகில் உள்ள பல தேசிய விடுதலை இயக்கங்களின் பொதுவான முன்நோக்கு என்ன? இவைகள் தேசிய இயக்கங்கள். ஒரு போதும் சோசலிச இயக்கங்களல்ல இதை அவர்களே மறுத்ததில்லை, அவர்களுடைய வேலைத்திட்டம் தேசிய சுதந்திரம் என்பதற்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்றும், ஒரு நாட்டிற்குள் இருக்கும் எல்லா வர்க்க சக்திகளையும் அணிதிரட்டித் தேசிய ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட முடியுமென்றும், அவர்கள் சொல்கிருர்கள்; ஆனுல் இதனைச் செய்ய முயலும் போது. அந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு விதமான சமூகப் பிரச்சினைகளின் வெளிப்பாடுகளை ஒருபோதும் தடுத்துவிட முடியாது. நிலச்சுவாந்தாரிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்யாமல் ஒருபோதும் கூலி விவசாயிகளை அணிதிரட்ட முடியாது. அதே போல வங்கியாளரிடமிருந்தும். ஆலைச் சொந்தக்காரரிடமிருந்தும் சொத்துக்களைப் பறிமுதல் செய்யாமல தொழிலாளர்களை அணிதிரட்ட முடியாது. இவைகளை நாம் செய்வோமாயின்; ஒரு போதும் தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாது. காரணம் சொத்துக்களைக் கொண்டுள்ள வர்க்கம் உடனடியாக எமது பரம எதிரியுடன்தான் போய் இணையும்.

இன்றைய நிலைமையில் உலக முதலாளித்துவ வர்க்க நெருக்கடி மேலும் மேலும் தீவிரமடைந்திருக்கிறது. சமூகப் பிரச்சனைகள் மேலும் மேலும் கூடிக் கொண்டு செல்கிறது, ஒடுக்கப்பட்ட மக்களின் வறுமை நெருக்கடி ஒரு நம்ப முடியாத வடிவத்தை எடுத்திருக்கிறது. இந்நிலையில் இத் தேசிய விடுதலை இயக்கங்

(12 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

தோட்டத்துறை:

# "தொண்டமான் - செல்ல

# முதலாளிகளுடன் கூட்டு வாழ்க்கை நடாத்துகி

— குடா ஓயா இ.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஏப்ரல் 21ம் திகதி அட்டன் - டிக்கோயா நகரசபை மண்டபத்தில் கூட்டிய தொழிலாளர் மகாநாட்டின் பேரில் நடாத்திய பிரச்சார இயக்கம் தோட்டத் தொழிலாளர்களின் பேராதரவினை வெற்றி கொண்டு வருகின்றது பு க. க. தோழர்கள் சந்தித்த இ. தொ. கா. அங்கத்தினர்கள் தாம் தொண்டமான்—செல்லச்சாமி தலைமையால் அடுத்தடுத்துக் காட்டிக் கொடுக்கப்பட்ட முறையைக் கூறி வெதும்பினர். யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ் சாதித்ததாக தொண்டமான் — செல்லச்சாமி தலைமை கூறிக் கொள்ளும் 'வெற்றிகளின்' நிச கோலத்தினை ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் டரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.



எஸ். தொண்டமான ஜே. ஆர். ஜயவர்தனு

இங்கு பேசுபவர்கள் சாதாரண இ. தொ. கா. அங்கத்தினர்கள் அல்ல. இ. தொ. கா. தலைமையின் கருங்காலி துரோக நடவடிக்கைகளால் கொதிக்கும் இ. தொ. கா. கிளைத் தலைவர்கள். குடா ஓயா தோட்ட இ.தொ.கா. கிளைத் தலைவர் சே. முருகையா இக் காட்டிக் கொடுப்பின் ஒரு அத்தியாயத்தை விபரிக்கையில் கூறியதாவது:

'எங்களுடைய 19 பிரச்சினைகள் சம்பந்தமாக நல்லதம்பி முதலாளியுடன் 29 4 1982ல் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்றுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஆதாய போனஸ் பிரச்சினை மாத்திரம் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய 18 பிரச்சினைகளும் தீர்ந்த பாடாய் இல்லை. ஒப்பந்தத்தில் செல்லச்சாமி கையொப்பமிட்டு எங்களுக்கு உறுதி மொழி தந்தார்கள். ஆனால் முதலாளியுடன் சேர்ந்து கொண்டு எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை உடன் அமுல் படுத்துமாறு 1988ம் ஆண்டு 14 நாள் வேலை நிறுத்தம் செய்தோம், ''இப்பொழுது முதல் நீங்கள் வேலைக்கு போங்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்றேன்'' என்று கூறினர். ஆனால் பிரச்சினை இன்னமும் தீர்ந்த பாடாய் இல்லை. தொண்டமான் தோட்ட முதலாளிகளுடன் கூட்டு வைத்துக்கொண்டு எங்களுடைய பிரச்சினைகளை தட்டிக்கழிக்கின்றார். அண்மையில் கொட்டகலைக் கோவில் கும்பாபிஷேகத்திற்குவந்தார். தோட்ட முதலாளிகளின் வீட்டில் தான் அவருக்குச் சாப்பாடு. எப்பொழுதும் அவர்கள் முதலாளிகளுடன் கூட்டு வாழ்க்கை நடாத்துகின்றார்கள். இதன் மூலம் தொழிலாளருக்கு எதிராகத் தொழிற்படுகின்றார்கள்.

''இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான போது இத்தோட்டம் துண்டாடப்படமாட்டாது என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது சர்வோதயத்துக்கு 3 ஏக்கர் விற்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் மலேசியாவிலும் வசிக்கும் இரண்டு மகள்மாருக்கு தலா 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது''

இ. தொ. கா. தலைவர்கள் நெருங்கி உறவாடும் இந்த நல்லதம்பி முதலாளி எத்தகைய மோசடிப் பேர்வழி என்பதை புள்ளி விபரங்களுடன் விளக்குகையில் சே. முருகையா கூறியதாவது: '1987 ஜூனுக்கும் 1988 ஜூலைக்கும் இடையில் இவர் E. P. F பணம் ரூபா 95303 ஐ கொள்ளையடித்துள்ளார். 1987ல் யூனில் E P. F. பணமாக ரூபா. 20307/34சதம் பிடிபட்டது. ஆனால் வங்கிக்கு ரூபா 14,475/15 ஐ மட்டுமே அனுப்பப்பட்டது. அவ்வாறே ஜூலையில் ரூபா. 19088/6 சதம் பிடிக்கப்பட்ட போதும் வங்கிக்கு ரூபா. 13,387/- மட்டுமே அனுப்பப்பட்டது. 19:8மேயில் ரூபா 21743/:3சதம் பிடிக்கப்பட்டு ரூபா. 11643/2 மட்டுமே வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஒருவருட காலத்தில் தொழிலாளர்களின் E.P.F பணத்தில் இருந்து 2 இலட்சத்து 29 ஆயிரத்து 348 ரூபா. பிடிக்கப்பட்ட போதும் 1இலட்சத்து 35 ஆயிரத்து 345 மட்டுமே வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூபா 95 308/- ஐ கொள்ளையடித்துள்ளார். அவ்வாறே E.T.F பணத்தில் இருந்தும் ரூபா. 13717/- கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. 1988ல் இருந்து தனியார் துறைக்கு மாற்றப்பட்ட தொழிலாளர்களின் பணமும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இவற்றைத் தட்டிக் கேட்க இ. தொ. கா. தலைமைப் பீடம் மறுத்து வருகின்றது.

''இந்தப் புள்ளி விபரங்களை எல்லாம் இ. தொ. கா சட்டத்தரணி கதிரேசனிடம் கொடுத்து, லேபர் கோட்டில் பேசும்படி கூறினேன். அதற்கு அவர் மறுத்துவிட்டார். முதலாளியின் மகனும் கதிரேசனும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். முதலாளி குடும்பத்துக்கும் அவருக்கும் நெருங்கிய நட்புறவு உண்டு. அதனால் அவர் மறுத்துவிட்டார். அட்டன் இ. தொ. கா. இராஜுவின் நிலையும் இதுதான், இது தொடர்பாக நடவடிக்கையில் இறங்க அவரும் மறுத்துவிட்டார். இத்தலைமைகள் முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதால் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடத் தொடர்ந்து மறுத்து வரு

கின்றனர்.
முற்றாக தூ

தொண்ட
சாமி தலை
அரசாங்கத்
பெறும்படி
கம்யூனிஸ்ட
வரும் பிர
குப் பூரண
வதாகக் கு
கையா,
யிட்டு தா
வதாகவும்
21ல் பு. க.
லாளர் ம
கொள்வத
பிட்டார்.

"நா

''தொண்
சாமி தலை
தோட்டத்
சாமி செட்
கொண்டு
கொடுத்து
தொண்ட
சாமியும்
கைத் து
டார்கள்.
தொழிலை
ஏமாந்
களின் து
போது எ
கின்றது.
தோட்ட

# கொட்டகலை ஹூட்டன் தொழிலாளர் போராட்டம்

கொட்டகலை ஹூட்டன் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு அடிப்படைக் கோரிக்கைகளை வென்றெடுக்கும் பொருட்டு மெதுவாக கொழுந்து பறிக்கும் இயக்கத்தினை ஆரம்பித்துள்ளனர்.

ஏப்ரல் 1ல் ஆரம்பமாகியுள்ள இப்போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாவன: 45 வருடங்களாக மாற்றப்படாது இருந்து வரும் 'லயன்' கூரைத் தகரங்கள் மாற்றப்படவேண்டும் ● இறந்தவர்கள், பென்சன் எடுத்தவர்களின் ஈ.பீ எப். பணம் உடனடியாக வழங்கப்படவேண்டும்.

தொழிலாளர்களின் இக் கோரிக்கையை, சட்டை செய்யாத நிர்வாகம் ஏப்ரல் 8ம் திகதியில் இருந்து அவர்களை வேலைக்கு வரவேண்டாம் என அறிவித்துள்ளது.

நிர்வாகத்தின் இப்போக்கினைவிட்டு எமது நிருபருடன் பேசிய தொழிலாளர்கள் கூறியதாவது! ''45 வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட தகரங்கள் இன்னமும் மாற்றப்படவில்லை மழைபெய்தால் லயன்களில் இருக்க முடியாது. வீட்டினுள் தண்ணீர் ஓடுகின்றது. இத்தகரங்களை மாற்றும்படி தொடர்ந்து கூறியும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை. எங்களுக்கு வேலை நாட்களும் குறைவு. 16—22 நாட்களுக்கு இடையே தான் வேலை கிடைக்கிறது. வேலைப் பழுவும் அதிகம். 1 ஏக்கருக்கு 1 1/2 விதம் வேலை செய்ய வேண்டும் ஆனால் 85 ஏக்கர்களைக் கொண்ட தோட்டத்தில் 4? தொழிலாளர்கள் தான் வேலை செய்கிறார்கள். இத்தோட்டத்தில் பல ஆண் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இப்பொழுது 35 பெண் தொழிலாளர்களும், 4 ஆண் தொழிலாளர்களும்வேலை செய்கிறார்கள்.

## பலவந்தம்

''கடந்த மூன்று வருடத்தில் இத்தோட்டத்தில் 3 தொழிலாளர்கள் இறந்துள்ளார்கள். ஆனால் அவர்களின் ஈ.பீ.எப் பணம் இன்னமும் எடுக்க முடியாமல் உள்ளது. அவர்களின் சம்பளத்தில் இருந்து ஈ.பீ.எப். கழிக்கப்பட்ட போதிலும்அவர்களின் கணக்கில் காசு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இத்தோட்டத்தில் 7 பேர் பென்சன் எடுத்துள்ளார்கள். அவர்களின் ஈ.பீ.எப் பணத்தையும் எடுக்க முடியாமல் உள்ளது. இவர்கள் பென்சனாகி பல வருடமாகிறது. இந்தப் பென்சன் பணம் இல்லாமல் இவர்கள் உயிர் வாழ்வுக்கு கஷ்டப்படுகிறார்கள். குறைந்தது ரூபா. 1000/-ஆவது வழங்கும்படி கேட்டால், அதற்கும் நிர்வாகம் மறுக்கிறது. இந்த ஈ. பி. எப் பணம் நிர்வாகத்தினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.''

இத்தொழிலாளர்கள் இ. தொ. கா. அங்கத்தவர்கள், இ. தொ. கா. தலைமை ஏப்ரல் 12லிருந்து கொழுந்தை பறிந்து வேறு தொழிற்சாலைக்கு விற்பனை செய்யும் இயக்கத்தில் தொழிலாளர்களை ஈடுபடுத்தி வருகின்றது. ஆனால் ஹூட்டன் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய தொழிலாளர்களை வேலைநிறுத்தத்தில் இறக்குவதற்கு இத் தலைமை மறுத்து வருகின்றது.



1980பதுகளில் இனவெறி குண்டர்களில் உடைத்து தகர்க்கப்பட்ட தோட்டத்தொழிலாளியின் 'லயன்'

எட்
தோ
ெ
தொழி
நஷ்ட
நிர்வா

எட்டியாந்
பல்ல தோட்
தற்காலிக
புஷ்பராணியை
வதில் இருந்
தோட்ட நிர்
ளார். தொழ
தலைவர் புஷ்
கேயே வே
வேண்டினர்.
இந்த வேலை
வதி என்
யிடம் கை
வரும் ஒரே
செய்ததால்
பொலிஸில் மு
தார்.

இதைத் ெ
ராணி தனது
ஊடாக நஷ்
இந்தவழக்கி
சம்பளம் வ
மெனத் தீர்
ஆனால் நிர்வ
மும் கொடு
ராணி இதை
சங்கத்திடம்
போதிலும் அ
வடிக்கையும்
தொழிலாளர்
டம் தெரிவித்

www.padippakam.com

# ...சாமி தலைமை

# ...ர்கள்''

## ...தொ. கா கிளைத் தலைவர்

...இத்தலைமைகளை
...வீச வேண்டும்''
...ன் — செல்லச்
...ய யூ. என். பி.
... இருந்து வெளி
...காரி புரட்சிக்
...ழகம் நடாத்தி
... இயக்கத்துக்
...ஆதரவு வழங்கு
...விட்ட கே. முரு
...பிரச்சாரத்தினை
...மகிழ்ச்சி அடை
...றினர். ஏப்ரல்
...கூட்டும் தொழி
...நாட்டில் கலந்து
...ம் அவர் குறிப்

பார்ப்போம். 'தொழிலாளர் பாதை' நிருபர்களைச் சூழ்ந்து கொண்ட கொட்டகலை ஹரிங்டன் தோட்டத்தைச் சேர்ந்த இ. தொ. கா. தொழிலாளர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

ஹரிங்டன் தோட்ட லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க உப தலைவர் எஸ். பி. கணேசனும் நிர்வாகக் குழு அங்கத்தவர் வி. தங்கவேலுவும் ''தொழிலாளர் பாதை'' நிருபரிடம் பேசுகையில் கூறியதாவது:

''தொழிலாளர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அரசாங்

வேற்றப்படும்' என செல்லச்சாமி அன்று கூறினர். ஆனல் இன்றுவரை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட 19 பிரச்சினைகளில் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

''இந்த ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்துமாறு கோரி தொழிலாளர்களான நாம் 1990 நவம்பர் 13ல் இருந்து 22 நாட்கள் வேலைநிறுத்தம் செய்தோம். வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தொண்டமான் எங்களை அட்டன் இ. தொ. கா. அலுவலகத்தற்கு அழைத்தார். அங்கு அவா தொழிலாளர்களை வேலைநிறுத்தத்தினை உடன் கைவிடும்படி கூறினர். 15 நாட்களில் உங்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்போம்; பாபர்' கத்தி பிரட்டுகின்ற மாதிரி பிரட்டமாட்டோம். வேலைக்குப் போங்கள்' என்று சொன்னர். இந்தச் சொல்லைக் கேட்டு. வேலைநிறுத்தத்தினைக் கைவிட்டு வேலைக்குத திரும்பினேம். ஆனல் 5 மாதங்கள்

லாளர் பிரச்சினைகளில் முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு காட்டிக் கொடுக்கின்றார்கள். தொண்டமானும் — 'செல்லச்சாமியும் அரசாங்கத்துள் இருந்துகொண்டு இதைத்தான் செய்து வருகின்றார்கள். அவர்கள் முதலாளிகளுக்குச் சாதகமாகவே நடந்து கொள்கிறார்கள்.

''எங்களுடைய தோட்டத்துக்கு டாக்டர் இல்லை. வாசத் கூட்டு இல்லை. பால்மா இல்லை. எனக்கு குழந்தை பிறந்து ஒரு வருடத்துக்கு மேலாகின்றது; இன்னமும் பேர்த் சர்டிபிகேட் எடுக்கவில்லை. தோட்டத்தில் டாக்டர் இல்லாததால் பதிவு செய்யப்படவும் இல்லை. தோட்டத்திற்கு தோட்டம் செய்ய முடியாது ஆடு, மாடு வளர்க்க முடியாது. 'லயன்' தகரங்கள் எல்லாம் ஓட்டை. மழைகாலத்தில் லயனகளில் இருக்க முடியாது' என வாழ்க்கையின் அவலநிலையை விபரித்தனர்

### கருப்பையா வேலை நீக்கம்

இந்த ஹரிங்டன் தோட்டத்தில் தொழிலாளரின் போராட்டத்தில் முன்நின்றதற்காக இ. தொ. கா. தலைவர் கே. கருப்பையா வேலைநீக்கம் செய்யப்பட்டது பற்றிப் பேசுகையில் தொழிலாளர்கள் கூறியதாவது: ''இதைப்பற்றி இ. தொ. கா. தலைமை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இ. தொ. கா. அட்டன் பிரதிநிதி ராஜூவிடம் கூறினேம். இது உங்கள் உள் பிரச்சினை. நாங்கள் தலையிட முடியாது: நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். இந்த இலட்சணத்தில் இவர்கள் முதலாளிகளுடன் சேர்ந்து தங்கள் சங்கத் தலைவரையே பதிவாங்குகின்றார்கள்.

''இந்தத் தோட்டம் இராமசாமி செட்டியாருக்கு கையளிக்கப்பட்டபோது இது எந்தவிதத்திலும் துண்டாடப்படமாட்டாது என செல்லச்சாமி வாக்குறுதி தந்தார். ஆனல் இதில் 7ஏக்கர் கொட்டகலை தொழிற்சாலையில் உள்ள முதலாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தோட்டத்தில் 1. வீடுகள் தொழிலாளர்களுக்கெனக் கட்டப்பட்டது. ஆனல் ஒரு வீடும் தொழிலாளிக்குக் கொடுக்கப்படவில்லை. மாறாக வெளியாருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த வீடுகள் ஏன் தொழிலாளிக்குக் கொடுக்கப்படவில்லை என இராமசாமி முதலாளியை கேட்ட போது, இது என்னுடைய தோட்டம்; நான் எதையும் செய்வேன்; நீங்கள் இதைப் பற்றிக் கதைக்க முடியாது' என்று கூறிவிட்டார்.

''இ. தொ. கா. தோட்ட தலைவர் கருப்பையாவைத் தொடர்ந்து எம் ஜோதிவேல் என்ற மெக்கானிக் வேலை நீக்கம் செய்யப்பட்டார். முதலாளியின் வேண்டுகோளின் பேரில் பொலிசார் பல தொழிலாளர்களைக் கைது செய்து தாக்கினர். C. L. F கட்டிடத்தில் இராணுவம் இருந்த சமயத்திலும் தாக்குதல் இடம் பெற்றது. எங்களது பிரச்சனைகள் பற்றி எத்தனையோ பத்திரிகைகளுக்கு தகவல் கொடுத்தோம். அவர்கள் எவருமே இவற்றைப் பிரசுரிக்கவில்லை'' எனவும் குறிப்பிட்டனர்.

லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினரான வி. தங்கவேலு கூறியதாவது!

''நான் முன்னர் யூ. என். பி. தொழிற்சங்கத்தில் தலைவராக இருந்தேன். ஆனல் அச்சங்கத் தலைவரான ராஜா செனவிரத்ன முதலாளியிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டார். லஞ்சம் வாங்கியதை நேரில் பார்த்தேன். அத்துடன் நாங்கள் அனுப்பிய 121 பேரின் சந்தாப் பணப்பத்திரத்தையும் திருப்பி அனுப்பி விட்டார்கள். இதைத் தொடர்ந்து அத் தொழிற்சங்க கிளையைக் கலைத்துவிட்டு லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து கொண்டேன். எங்களுடைய பிரச்சினைக்காகதான் உயிரைக் கொடுத்துப் போராடவும் தயாராக இருக்கின்றேன். இந்த அடிமை நிலையிலிருந்து விடுபட ஒருவன் செத்தாலும் பரவாயில்லை. எனது மூன்று பிள்ளைகளையும் மற்றத் தொழிலாளர்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்றார்.

### பொய் குற்றச்சாட்டு

இராமசாமி முதலாளியின் தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளை விபரிக்கையில் தங்கவேலு கூறியதாவது; தொழிற்சங்க முன்னணிப் போராளிகளை வேலைநீக்கம் செய்கின்றார். பொய் குற்றச்சாட்டின் பேரில் தொழிற்சங்கப் போராளிகளை பொலிசார், இராணுவத்தை கொண்டு கைது செய்விக்கின்றார். லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவரான பி. வேலுச்சாமி கைது செய்யப்பட்டு பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் துன்புறுத்தப்பட்டார். இ. தொ. கா. தலைவர் கறுப்பையா வேலை நீக்கம் செய்யப்பட்டார். ஜோதிவேல் என்ற தொழிற்சங்கப் போராளி வேலைநீக்கம் செய்யப்பட்டார். தொழிலாளர்களிடம் இருந்து கழிக்கும் சந்தாப் பணத்தை லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு அனுப்புவதில்லை; ஆனல் ல. தோ. தொ. ச அட்டன் பிரதேச தலைமையும் இதைப் பற்றி அக்கறைப்படுவதாய் இல்லை'' எனவும் தங்கவேலு குறிப்பிட்டார்.

''இந்தச் சந்தாப் பணத்தை பெற முயற்சிக்காத தலைமை தொழிலாளர்களின் போராட்டம் சம்பந்தமாக என்ன செய்யப் போகின்றது?'' எனவும் அவர் வியப்பு தெரிவித்தார்.

## ...கள் அவர்களின் உறுதிமொழியை நம்பி ஏமாந்துவிட்டோம்''

— ஹரிங்டன் தோட்ட தொழிலாளர்

...ான் — செல்லச்
... எங்களுடைய
...ரயான இராம
...ருடன் சேர்ந்து
...களைக் காட்டிக்
...விட்டார்கள்.
...ம் செல்வச்
...களுக்கு நம்பிக்
...ம் செய்துவிட்
...ர்களின் உறுதி
...ம்பி நாங்கள்
...ாய். அவர்
...த்தை நினைக்குக்
... மனம்கொதிக்
...ர்கள் இந்தத்
...5 வரட்டும்

சுத்துக்குச் சொந்தமான இந்த தோட்டத்தினை இராமசாமி செட்டியாருக்கு விற்பனை செய்வதில் முன்நின்றவர்கள் செல்லச்சாமியும்தொண்டமானுமே அப்போது அவர்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகக் கூறிக் கொண்டு இராமசாமியுடன் 29/4/1982ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தை எவரும் அசைக்க முடியாது. இதில் குறிப்பிடப் பட்டுள்ள அத்தனையும் நிறை

கழிந்துவிட்டது. பிரச்சினை தீர்ந்தபாடாய் இல்லை. ஒரு மந்திரி சொல்கிறார்—ஒருபெரிய மனுசன் சொல்லுத் தவறமாட்டார் என்று நினைத்தோம். ஆனல் அவர் எங்களை ஏமாற்றி விட்டார். அவர் சொன்னதற்கு மாறாக கத்தியைப் பிரட்டி விட்டார்'' என்று கூறினர்கள்.

### சாப்பாடு

''தொண்டமான் கொட்டகலைக்கு வரும்போது இராமசாமிதான் சாப்பாடு போடுவார். இத்தலைமைகள் எப்பொழுதும் முதலாளிகளுடன் தான் கூட்டு. இதனல் தொழிலாளர் பிரச்சினைகளில் ...

...ாந்
...ட:
...ா
...ளிக்கு
...வழங்க
...றுப்பு
...டை கணே
...ச் சேர்ந்த
...ாளியான
...ம் வெட்டு
...லக்கும்படி
...அறிவித்துள்
...த் கிளைத்
...ரியை அங்
...செய்யும்படி
...ற்கிடையே
...ாகம் பிய
...தொழிலாளி
...ா. இரு
...ல் வேலை
...கி இதனை
...ாடு செய்

...ந்து புஷ்ப
...ழிற்சங்கம்
...கோரினர்.
...க்கு 9நாள்
...வேண்டு
...ப்பட்டது.
... இன்ன
... புஷ்ப
... தொழிற்
... விட்ட
...ந்த நட
...ல்லை என
...' நிருபரி

# உடப்புமீனவர் சுரண்டலுக்கு பலியாகிறார்கள்

உடப்பு மீனவ கிராமத்தில் வாழும் ஏழை மீனவர்கள் முதலாளித்துவ மீன் முதலாளிகளின் பிடியில் அகப்பட்டு படுபிவேச்சமான சுரண்டலுக்கு உள்ளாகி வருகின்றார்கள். பெப்ரவரி 28ம் திகதி இக்கிராமத்தில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தோழர்களைச் சந்தித்த இம் மீனவ தொழிலாளர்கள் தமது வாழ்க்கையின் அவல நிலையை விபரித்தனர்.

விட்டில் மீன்வலை' பின்னிக் கொண்டிருந்த ஒரு மீனவத் தொழிலாளியும் அவரது மனைவியும் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முகம் கொடுத்துள்ள அரசியல் நிலைமையை பு. க. க. அங்கத்தினர்களுடன் கலந்துரையாடுகையில் கூறியதாவது!

''இன்று காலை நான் வேலைக்குப் போகையில் பிள்ளைகள் தேநீர் குடிக்கவும் வீட்டில் சீனி இருக்கவில்லை. இன்று முதலாளி ரூபா.20/- கொடுத்தார். சம்பாதிப்பதில் அரைவாசியை

தருவதாக பெரும் முதலாளிகள் கூறிக் கொள்கிறார்கள். எம்மை அவர்கள் தினமும் ஏமாற்றுகிறார்கள். இந்த கிராமத்தில் நல்ல பணக்காரர்களாக இருப்பவர்கள் பெரும் வலை முதலாளிகள். பெரும் வலை முதலாளிகள் 120 பேர் உள்ளனர். 30 பேர் இக்கடலிலும் ஏனையோர் வட-கிழக்கிலும் உள்ளனர். அங்கு இருப்பவர்கள் இங்குள்ளவர்களை சம்பளத்துக்கு கூட்டிச் செல்கின்றனர். இங்குள்ள குடும்பத்தவர்களை நன்றாகத் தாம் பராமரிப்பதாக கூறியே கூட்டிச் செல்கிறார்கள். ஆனல் அவை ஒன்றும் நடைபெறுவதில்லை. திடீரென இரவில் பிள்ளைக்கு சுகவீனமானல் இந்த முதலாளிகளின் வாகனத்திலேயே போக வேண்டும். அப்படிப் போனல் அடுத்த நாளில் இருந்து அம்முதலாளியிடமே தொழில்செய்யப்போக வேண்டும். ரூபா. 10/- அவர்களிடம் கடன் வாங்கினாலும் அந்த முதலாளியிடம் தொழில் செய்ய வேண்டும். ஒருவர் இறந்தால் அவரின் குழந்தை அம்முதலாளியிடம் அடிமைச்சேவை செய்ய வேண்டும்.

''நானும் எனது மனைவியும் இந்த உடுத்த துணிக்கு மறு துணி இல்லாமல் இருக்கின்றோம். பாடசாலையில் — கிராமத்தில் கூட்டம் நடந்தாலும் — ஏழையான எங்களை அவற்றுக்கு அழைப்பது இல்லை. ஏழைகளின் பிரச்சினை அங்கு கலந்துரையாடப்படுவதில்லை.

''நான் க. பொ. த (உயர்தரம்) சித்தியடைந்தவன். கல்பிட்டி, மூந்தலம், இறுதியில் உடப்பிலும் படித்தேன். சுங்க திணைக்களத்தில் (கண்டம்) தொழிலாளியாக வேலை செய்தேன். ரூபா. 1700/- கிடைத்தது. சம்பளம் குறைவானதால் அவ்வேலையிலிருந்து விலகிவிட்டேன். இப்பிரதேச மீனவர்கள் படிப்பறிவற்றவர்கள். நகர்ப்புறம், தோட்டப்புறம் போல் எங்களுக்கு ஓர் அமைப்பு இல்லை. போராடுவதானல் அத்தகைய ஓர் அமைப்பினை உருவாக்க வேண்டும்.' எனவும் அவர் குறிப்பிட்டார்.

## டிரேட்டன் காவலாளி வேலைநீக்கம்

கொட்டகலை டிரேட்டன் தோட்டத் தொழிற்சாலையில் காவலாளியாக தொழில் புரிந்து வந்த கே. இராமஜெயம் மார்ச் 20ம் திகதியில் இருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அலுவலக ஊழியர் ஒருவரின் 'பாக்'கை சோதனையிட வில்லை என்ற காரணத்தினை காட்டி இவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஆனல் இப்பாது காவல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த மேலதிகாரிகள் மன்னிக்கப்பட்டுள்ளனர். 'இது திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கை' என இராமஜெயம் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தார்.

''நான் இ.தொ.கா. தொழிற்சங்க அங்கத்தவன். தொழிற்சங்கத்துக்கு இது பற்றி அறிவித்துள்ளேன். நாட்கள்கடந்து செல்கின்றன. ஆனல் தீர்க்கமான நடவடிக்கைகள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.'


# தொழிலாளர் பாதை

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 6.00 3 மாதம் — ரூ. 18.00
6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் — ரூ. 72.00

பெயர் :..............................

முகவரி :..............................

சந்தாக் காலம் :.............. ரூ: ......... சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90 1-வது மாவிகாதத்தை ஒழுங்கை
கொழும்பு — 10.


படிப்பகம்

www.padippakam.com



## போக்குவரத்து தொழிலாளர்கள் மீது...,

(6ம் பக்கத்திலிருந்து)

அது மேற்கூறிய வேலைத்திட்டங்களின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடி வருவது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகமும். அதன் தொழிற்துறை பிரிவான டிராட்ஸ்கிசத் தொழிலாளர் அணியுமம. காட்டிக் கொடுப்புகளுக்கு எதிராக தொழிற சங்கங்களினுள் மாற்று புரட்சித் தலைமையைக் கட்ட போராடி வரும் டிராட்ஸ்கிசத் தொழிலாளர் அணியில சேர்ந்து சோசலிசக் கொள்கைகளுக்கான தொழிலாளர் வர்க்க ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்க வருமாறு அனைத்து வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும் அழைக்கிறோம. சோசலிசத் தொழிலாளர் கழகமும், டிராட்ஸ்கிச தொழிலாளர் அணியும் பின்வரும கோரிக்கைகளுக்கு போராட முன்வருமபடி தொழிலாளர்களை அழைக்கிறது.

- ஃ கண் துடைப்பு அரசாங்க விசாரணைக் கமிஷன்களில் நம்பிக்கை வைக்காதே!
- ஃ தொழிற்சங்கங்களின் சொந்த 'விசாரணை கமிஷனை' ஏற்படுத்து!
- ஃ கொலைகாரர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கு!
- ஃ போலிசார் உண்டுபண்ணிய நாசத்துக்காக முழு நஷ்டஈடு வழங்கு!
- ஃ வேலைநிறுத்த நாட்களுக்கு முழு சம்பளம் வழங்கு!
- ஃ காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடு!
- ஃ போராட்டத்திலுள்ள அனைத்து தொழிலாள வர்க்க பிரிவுகளையும் ஐக்கியப்படுத்து!
- ஃ போலீஸ், இராணுவங்களை கலை!
- ஃ தொழிலாளர்களின் சொந்த பாதுகாப்பு அணிகளை கட்டு!
- ஃ பஞ்சாப், காஷ்மீர், அஸாமிலிருந்து உடனடியாக இராணுவங்களை வாபஸ் வாங்கு!
- ஃ சி.பி ஐ(எம்) சி.பி ஐ தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் உறவை துண்டித்து சுதந்திரமாக சோசலிசக் கொள்கைகளை நிறைவேற்றும் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!

மேற்கூறிய கோரிக்கைகளுக்காகவும், இதர தொழிலாளர் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மாநாட்டுக்கு அழைப்புவிடு!

## சர்வதேச நிதி ரூ. 15,000

உலக முதலாளித்துவம் இன்று மறுபடி இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் ஆழமான பொருளாதார அரசியல் நெருக்கடியுள் தள்ளப்பட்டுள்ளது. சந்தையையும், கச்சாப் பொருட்களையும் மலிந்த கூலியையும் தேடி உலக ஏகாதிபத்தியங்கள் தீவிர போட்டி வேட்டையில் இறங்கியுள்ளன. இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் பெயரளவிலான 'சுதந்திரம்' வழங்கப்பட்ட நாடுகள் மறுபடியும் ஏகாதிபத்திய சக்திகளினால் காலனி பிரதேசங்களாக மாற்றப்படும் அபாயத்தை கொண்டிருக்கின்றன. ஈராக் மேல் உலக ஏகாதிபத்தியங்கள் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும் அங்கு ஏகாதிபத்திய துருப்புகள் நின்றுகொண்டிருப்பதும் ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்க திட்டங்களை அம்மணமாககி உள்ளன. ஆனால் இத்திட்டங்கள் தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் விரோதங்களை முடுக்கி விட்டு மூன்றுவது உலக யுத்தத்திற்கான நிலைமைகளை தோற்றுவித்து வருகிறது. இதனை சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சியின் மூலமே தோற்கடிக்க முடியும். இதற்கு ஒரு புதிய சர்வதேசிய புரட்சித் தலைமை தேவை. இதற்காகவே உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நவம்பரில் பெர்லினில் ஒரு உலகத் தொழிலாளர் மாநாட்டை கூட்டுகிறது. இம் மாநாட்டுக்கு இந்திய தொழிலாளர்கள் தமது சர்வதேசிய பங்களிப்பை செய்ய முன்வர வேண்டுமென்று சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவுகின்றது. இதற்கு ரூ 15 000 தேவைப்படுகிறது இதற்கு தாராளமாக நிதி உதவி செய்யுமாறு அனைத்து தொழிலாளர்களையும், இளைஞர்களையும் அழைக்கிறோம்.

## தேர்தல் அறிக்கை தொடர்ச்சி!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிராக விவசாயத் தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும் நகர்ப்புற தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு உருவாக்கும் தொழிலாள வர்க்க அரசு, வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தை நிலைநாட்டும். விவசாய உற்பத்திக்கு தேவையான நவீன கருவிகளை குறைந்த விலையில் வழங்கவும, விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும், இலகுவான முறையில் திருப்பிச் செலுத்தக்கூடிய புதிய கடன்களை வழங்கும், விவசாய உரங்களுக்கு மானியங்களை வழங்கும், பெரும நிலச்சுவான்தாரர்களிடமிருந்து நிலங்களை பறிமுதல் செய்து உழுபவர்களுக்கு நிலங்களை பகிர்ந்தளிக்கும். விவசாய உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விலையை உத்தரவாதம் செய்யும்

- ஃ நிலப்பிரபுக்களின் நிலங்களை தொழிலாளர் அரசின் கீழ் தேசியமயமாக்கி உழுபவர்களுக்கு நிலங்களை பகிர்ந்தளித்தல்!
- ஃ ஆறுகளை இணைத்து கால்வாய்களை வெட்டி விவசாயிகளின் நீர்ப்பாசனத்திற்கு உத்தரவாதம் செய்தல்!
- ஃ விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்தல்!
- ஃ இலகுவான முறையில் திருப்பிச் செலுத்தக் கூடிய புதிய கடன்களை வழங்கல்!
- ஃ விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை வழங்கல்!
- ஃ விவசாயக் கருவிகளை குறைந்த விலையில் வழங்கல்!
- ஃ மத வெறியர்களின் தாக்குதல்களுக்கு எதிராக சிறுபான்மை மதப்பிரிவினரை பாதுகாக்க தொழிலாளர் பாதுகாப்பு சபைகளை அமைத்தல!
- ஃ தேசிய பாதுகாப்புச் சட்டம் (என்.எஸ்.ஏ) மற்றும் இதர கறுப்புச் சட்டங்களின்கீழ் கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல்!
- ஃ ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்தல்: (உ.ம் —காஷ்மீர், தமிழ் ஈழம, நாகலாந்து, மணிப்புரி, சிக்கிம்)
- ஃ ஒடுக்கப்படும் மக்களின், ஏழை விவசாயிகளின் ஆதரவுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்த போராடல்!
- ஃ உலக ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்க உலக சோசலிசப் புரட்சியின் வெற்றிக்காக போராடல்!

சோசலிச வேலைத் திட்டத்தை முன்னெடுக்கப் போராடும் டிராட்ஸ்கிச வேட்பாளர்களுக்கு ரயில் என்ஜின் சின்னத்தில் முத்திரையிடுங்கள்!

தமிழ் ஈழப் போராளிகளுக்கும், தமிழ் ஈழ அகதிகளுக்கும் எதிரான பிரச்சாரத்தை உடனடியாக நிறுத்தும்படியும் தமிழ் ஈழததைச் சேர்ந்த அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யும்படியும் சோசலிசத் தொழிலாளர் கழகம் கோருகிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் நாட்டுப்புறத்தில் இராணுவத்தின் ஒடுக்குமுறைகளை சோசலிசத் தொழிலாளர் கழகம் கண்டனம் செய்வதுடன் அப்பகுதிகளிலிருந்து உடனடியாக இராணுவத்தை வாபஸ் வாங்கும்படியும், அனைத்து அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படியும் கோருகிறது.

தொழிலாள வர்க்கத்தின், ஒடுக்கப்படும் மக்களின் அனைத்து அரசியல் அமைப்புகளின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க, அவர்களுடன அரசியல் வேறுபாடுகள் இருந்த பொழுதிலும் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடுகிறது. இவ்வாறாக உரிமைகள் அச்சுறுத்தப்படும் பொழுது வர்க்க சுதந்திரத்தின் அடிப்படையில் ஐக்கிய நடவடிக்கைகளுக்காகவும், பாதுகப்பபு அணிகள் அமைக்கவும் போராடுகிறது,

**இத்தகைய சோசலிச வேலைத்திட்டத்திற்காகப் போராடும் டிராட்ஸ்கிஸ்டுகளை ரயில் என்ஜின் சின்னத்தில் முத்திரையிட்டு ஆதரியுங்கள் !**

(★9ம் பக்கத் தொடர்ச்சி)

களின் வெளிப்பார்வை எப்படி இருக்கிறதெனில், வித்தியாசமான முதலாளித்துவங்களுக்குள் அதாவது இலங்கை முதலாளித்துவம் — இந்திய முதலாளித்துவம் மற்றும் வேறுபட்ட அரபு முதலாளித்துவங்களுக்கிடையிலான வேறுபாடுகளை கையாண்டு தங்களுடைய காரியங்களைச் சாதித்து விடலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கின்றன, இது முற்றுமுழுதாக நடைமுறைக்குச் சாத்தியமில்லாமல் போயுள்ளதையே வரலாறுகள் நிரூபித்துக் காட்டியுள்ளன.

இன்று ஏகாதிபத்தியவாதிகள், பழைய முறையிலான காலனியாதிக்கத்திற்காக மீண்டும் ஒரு போரைத் தொடங்கியுள்ள நிலையில் எந்த ஒரு நாட்டிற்கும் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. இந்தக் காரணங்களாலேயே நாம் சொலகிறோம்; தேசிய விடுதலைப் போராட்டம என்பது, திட்டவட்டமாக சோசலிசப் புரட்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது. என்று யாராவது தேசியப் புரட்சியை இதற்கு வெளியில நின்று தீர்க்க முடியுமெனக் கருதினால், அது மிகவும் அழகான கற்பனைக் கதையாகவே இருக்கும். மிகவும் பேரழிவிலேயே போய் முடியும். இதனால்தான் தேசிய விடுதலை இயக்கங்களுக்குள், தங்களுடைய அணிகளுக்கிடையிலான ஜனநாயகத்தைக் கூட அனுமதிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

எப்போதாவது ஒரு ஏகாதிபத்திய நாடோ அலலது இந்தியா போன்ற முதலாளிததுவ நாடோ தேசிய விடுதலை இயககங்களுக்கு ஆதரவு கொடுக்கிறதெனில், அது ஏகாதிபததியங்களின் சொந்த லாபங்களின் நலன்களிலிருந்தே வழங்கப்படும். ஆதலால் இறுதியாகத் தோல்வியடைவது இவ் ஒடுக்கப்பட்ட மக்களேயாகும். இந்தக் காரணங்களாலேயே நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம், எந்த ஒரு ஒடுக்கப்பட்ட 'தேசிய இனத்துக்கும் இருக்கக்கூடிய ஒரே ஒரு துணையாளி சர்வதேசத் தொழிலாள வர்க்கமே தவிர வேறு யாருமல்ல என்று. இவ்வாறு தோழர் பீட்டர் சுவார்ட்ஸ உரையாற்றினர்.

சுமார் 60 தமிழ், பிரெஞ்சு தொழிலாளர்கள், இளைஞர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தின் முடிவில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஒழுங்கு செய்துள்ள, எதிர்வரும் கார்த்திகை மாதம் நடக்கவிருக்கும் சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டிற்கான அழைப்பு விடப்பட்டது. கூட்டத்திற்கு வருகை தந்தோரிடமிருந்து இம்மாநாட்டு நிதிக்காக 4310F (பிராங்குகள்) திரட்டப்பட்டது.

## சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேருங்கள்!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் உறுப்பினர் ஆகுங்கள் !

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி: தபாற்பெட்டி எண் 968'

பெரம்பூர்பாரக்ஸ், சென்னை-600012.

படிப்பகம்

# தொழிலாளர் பாதை

விலை 1/50

● மாதமிரு இதழ் — இதழ் 105 ● 1991 ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை



## வாசியுங்கள்

● உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணிகளும் (அனைத்துலகக் குழுவின் முன்நோக்கு பிரேரணை) — ஆகஸ்ட் 1988 — ரூபா. 10/-

● பெப்ரவரி 25 தேர்தலின் பின்னர் நிகரகுவா படிப்பினைகள் — ரூபா. 5/50 (அமெரிக்க வேர்க்கஸ் லீக் அறிக்கை)

● ருஷ்யாவில் நடப்பதென்ன? ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும் கொர்பச்சேவும் (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை) ரூபா. 5/50

● யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம்! ரூபா. 2/50 (பு. க. க. அரசியல் குழு அறிக்கை)

தொடர்புகள்: ஆனந்த வக்கும்புர
90, 1வது மாளிகாகந்த லேன்,
கொழும்பு — 10.


## பு. க. க. மே தினச் செய்தி:

# உலக யுத்தத்துக்கும் காலனிமயமாக்கலுக்கும் எதிராகப் போராடு!

உலகத்தை மீண்டும் பங்கு போடும் கொடிய காலனித்துவத்துக்காக ஏகாதிபத்திய வாதிகளிடையே இழுபறிகள் ஏற்பட்டுள்ள மூன்றாவது அணு வாயுத உலக யுத்தத்துக்கு எதிராக உலகத் தொழிலாள வர்க்கம் — ஒன்றிணைந்த அனைத்துலக புரட்சிகரச் சக்தியாகக் கிளர்ந்து எழவேண்டும் என நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த மே தினத்தில் வேண்டிக் கொள்கின்றது.

கோடானுகோடி தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் காட்டுமிராண்டித்துவத்தினை நோக்கி இட்டுச் செல்லும் ஏகாதிபத்தியவாதிகளின் அழிவுமிக்க ஆக்கிரமிப்பின் தன்மை ஏற்கனவே உலகத்தின் முன் நிலையில் வெளிப்பட்டுள்ளது. அது தான் வளைகுடா யுத்தம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை முன்னணியில் கொண்ட ஏகாதிபத்திய படைகளால் பாரசீக வளைகுடாவில் நடாத்தப்பட்ட தலையீடு "குவைத்தை விடுதலை செய்வதோ" அல்லது ஈராக்கிய சதாம் ஹுசேன் ஆட்சியாளர்களுக்கு தண்டனை வழங்கும் இராணுவ சாகஜம் அல்ல என்பதும் வெண்டியமட்டும் அம்பலமாகியுள்ளது. அதற்கு மாறாக அந்த ஆக்கிரமிப்பு, எண்ணெய் வளங்களின் மேல் ஏகாதிபத்திய ஆதிபத்தியத்தினை மீண்டும் உறுதி செய்யும் பொருட்டு அராபிய நாடுகளில் நிலவி வந்த பெயரளவிலான சுதந்திரத்தினையும் துடைத்துக்கட்டும் பொருட்டு இடம் பெற்றதாகும்.

ஈராக்கின் [illegible] அமெரிக்கப் படைகளும் [illegible] [illegible] [illegible] இடையில் [illegible] பல்லாயிரக் கணக்கான [illegible] குண்டுமாரி பொழிந்தும், [illegible] ஈராக்கில் இருந்து பக்தாத் நோக்கிச் சென்று [illegible] டிருந்த ஈராக் [illegible] பட [illegible] மாபெரும் [illegible] தள்ளியும் [illegible] பேரழிவின் பால் ஏகாதிபத்திய வாதிகள் [illegible] திண் எண்ணெய் வழங்களைக் கொள்ளையடிக்கும் பொருட்டு இராணுவ முகாம்களை அமைத்து வருகிறார்கள்.

பொருளாதாரத் துறையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு சைநழுவிப் போன உலக ஆதிபத்தியத்தினை மீண்டும் வென்றெடுக்கும் நடவடிக்கைகளின் நச்சுத்தன்மை இன்று வெளிப்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கான தொன் குண்டுமாரி பொழிந்து நாட்டின் தேசியபொருளாதார, அரசியல் அமைப்பினை பல நூற்றாண்டுகளால் இல்லையேல் பல தசாப்தங்களால் பின்னடிக்கச் செய்! ஏகாதிபத்தியப் படைகளின் கொடிய ஆட்சிக்குட்பட்ட காலனிகளாக அந் நாடுகளை மாற்று! அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இன்றைய திட்டப்பாடு இதுதான்.

### சவால்

இது இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சவால் செய்ய முடியாத அமெரிக்க ஆளுமையின் கீழ் உலக ஏகாதிபத்திய முறையைக் கொண்டு நடாத்தக் கையாண்ட விதிமுறைகளிற்கு முற்றிலும் மாறானது. இரண்டாம் உலக யுத்தம் ஏனைய சகல ஏகாதிபத்திய சக்திகளைப்பொறுத்தமட்டில் உண்டு பண்ணிய அழிவுகளை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் பிரகடனம் செய்த அமெரிக்க சமாதானத்தினதும், ஜனநாயகத்தினதும் சகாப்தம் ஒருவரவாற்றுடன் சங்கமமாகிவிட்ட சகாப்தமாகிவிட்டது. கடந்த 4 1/2 தசாப்தங்களாக உலக உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் உண்டான பிரமாண்டமான மாற்றங்கள் மூலம் அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஆளுமை சிதறிச் சின்னாபின்னமாகிப் போயுள்ளது. அது உலகுக்கு கடன் வழங்குபவர் என்ற நிலையில் இருந்து இன்று பிரமாண்டமான கடனாளியாகியுள்ளது. இதன் பரிமாற்றங்கள் நானாவிதமான விதத்தில் வெளிப்பாடாகியுள்ளன.


அமெரிக்க ஏகாதிபத்தியம் முகம் கொடுத்துள்ள பிரமாண்டமான வர்த்தகப் பற்றுக் குறையையும் மாதாந்தம் அதிகரித்துச் செல்லும் சென்மதி நிலுவைப் பற்றுக் குறையையும், மூலப்பொருள் வழங்களையும், சந்தைகளையும் தம் கைக்குள் போட்டுக் கொள்வதன் மூலம் தீர்த்துக்கொள்ள புஷ் ஆட்சியாளர்கள் தீர்மானம் செய்துள்ளார்கள். இதனை யுத்தப் பிரகடனம் மூலம் சாதிக்கவும் காலனிகளை உருவாக்கும் உலக யுத்தத்தில் குறிக்கவும் அமெரிக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

கணமும் தெரியாமல் குண்டுமாரி பொழிந்து நகரமட்டமாக்கும் தாக்களில் நிதி மூலதனத்தைப் பாய்ச்சுவதற்கு அமெரிக்காவினுள் தொழிலாள வர்க்கத்தின் சம்பளம், வாழ்க்கைத் தரத்தையும் அடிமை மட்டத்திற்கு இறக்கும் அவசியம் புஷ் நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது. பட்டினிகளை நூற்றுக்கணக்கில் மூடவும் வேலையற்றோர் எண்ணிக்கையை மாதாந்தம் நூற்றுக்கு 10வீதத்

(14-ம் பக்கம் பார்க்க)

## நான்காம் அகிலத்தின் ஸ்தாபக ஆவணம்:

# இடைமருவு வேலைத்திட்டம் தமிழில் பிரசுரம்



"முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்" என்ற நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இடைமருவு வேலைத் திட்டம் முதல் தடவையாக தமிழில் வெளிவந்துள்ளது. இச்செய்தியை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு முன் வைப்பதில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெருமகிழ்ச்சியடைகிறது.

இடைமருவு வேலைத்திட்டம் தமிழில் வெளிவருவது இந்திய துணைக் கண்டத்தில் ட்ரொட்ஸ்கிசப் புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பும்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மார்க்சிஸ்டுகளுக்கும், இலட்சோப லட்சம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கும் கைகொடுக்கும் ஒரு தீர்க்கமான நடவடிக்கையாகும். ஏகாதிபத்திய நெருக்கடி என்றுமில்லாத முறையில் வெளிப்பட்டுள்ள இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியப் பிடியையும் முதலாளித்துவத்தினையும் தூக்கிவீசி, உலகசோசலிசப் புரட்சியின் ஓர் அங்கமாக ஆட்சியைக் கைப்பற்றுதல் நிகழ்ச்சி நிரலில் ஏற்கனவே இடம் பிடித்துக் கொண்டுள்ளது. இதற்கு அவசியமான புரட்சிகர மார்க்சிஸ்ட் தலைமையைக் கட்டியெழுப்ப இந்நூல் நிச்சயம் கைகொடுக்கும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1988ல் இந்நூலின் சிங்கள மொழி பெயர்ப்பினை வெளியிட்டது. சமசமாஜக் கட்சியினர் இடைமருவு வேலைத்திட்டத்தின் சிங்கள மொழி பெயர்ப்பினை வெளியிடாதது மட்டுமன்றி இத்துணைக் கண்டத்தில் பலகோடி தமிழ் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை ட்ரொட்ஸ்கிசப் பதாகையின் கீழ் வென்றெடுக்கும் அவசியம் அவர்களுக்கு இருந்திராததால் அதனை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் அவசியமும் ஏற்படவில்லை. ட்ரொட்ஸ்கிசம் பற்றி கதையளந்து கொண்டு பப்லோவாத திரிபுவாத அரசியலினுள் காலடிவைத்த சமசமாஜ தலைவர்கள், ட்ரொட்ஸ்கியின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஏனைய நூல்கள் தொடர்பாகவும் இதே வகையிலேயே நடந்துகொண்டனர். ட்ரொட்ஸ்கியின் நூல்கள் தொழிலாள, ஒடுக்கப்படும் ஏழைமக்கள்கரங்களில் கிடைப்பதை தடை செய்யவே இத்தகைய நனவான சதிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களைப் பொறுத்தமட்டில் லியொன் ட்ரொட்ஸ்கியின் நூல்கள் வெறும் இலக்கிய இரசனைக்குரியதாக விளங்கினவேயன்றி, உலக சோசலிசப் புரட்சிக் கட்சியை கட்டிஎழுப்புவதற்கான முன்நோக்கின் வழிகாட்டியாக விளங்கியதில்லை.

நான்காம் அகிலத்தின் இந்த இடைமருவு வேலைத்திட்டம்

(18 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# உலகயுத்தத்துக்கும் காலனிமயமாக்கலுக்கும்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் அதிகரிக்கவும் குடியரசு, ஜனநாயகக் கட்சிகள் இரண்டினையும் சேர்ந்த ஆளும் வர்க்கம் களத்தில் குதித்துள்ளதன் அர்த்தம் இதுவே.

## லெனின்

அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தினை அழிவுள் தள்ளி மூலதனத்தினை மலையெனக் குவிக்கும் அமெரிக்கா எதிர் பார்ப்பது என்ன? ஏனைய ஏகாதிபத்தியவாதிகளுடன் சகவாழ்வு நடாத்தும் முதலீட்டுத் திடல்களா? இல்லை. தமது ஏகபோகத்துக்கு உட்பட்ட அமெரிக்கக் காலனிகளாகும். லெனின் குறிப்பிட்டது போல் "மூலதனத்தினை ஏற்றுமதி செய்கையில் காலனிகளைக் கைப்பற்றுவதற்கான உந்துதலை வழங்குவதே அவசியமாக உள்ளது. அதற்குக் காரணம், காலனி சந்தைகளில் போட்டியை ஒழிப்பது, விநியோகத்தை உத்தரவாதம் செய்வது அவசியமான 'உறவுகளை' கட்டி எழுப்புதல் ஆகியவற்றின் பேரில் ஏகபோக முறையைப் பாவித்தல் (சில வேளை பாவிக்கக் கூடிய ஒரு முறை அவைதான்) இலகுவாய் இருப்பதே" (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்)

ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியாகியதன் பின்னரான இரண்டு வருடங்களுள் ஏற்கனவே இரண்டு நாடுகளில் (பனாமா, ஈராக்) ஆக்கிரமிப்பு இடம்பெற்று, அந்நாடுகளுள் அமெரிக்கப் படைகளை இருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அது தனியொரு ஏகாதிபத்தியம் சுதந்திரமாக உலகம் பூராவும் செய்யக் கூடிய காரியம் அல்ல, அவ்வாறெனின் ஏனைய ஏகாதிபத்திய சக்திகள் சுய விருப்புடன் அமெரிக்க ஆளுமையை ஏற்றுக்கொண்டு, ஏகாதிபத்திய விதிமுறையைக் கைவிட வேண்டும். அது ஏகாதிபத்தியத்தின் கீழ் நடைமுறைப் படுத்த முடியாத ஒரு விதிமுறையாகும். இந்நூற்றாண்டின் முதல் அரைநூற்றாண்டில் 11 ஆண்டுகள் முழு உலகினையும் தழுவிய ஏகாதிபத்திய யுத்தம் இரண்டுக்கு உள்ளாகக் காரணம் அதுவே.

இன்று மீண்டும் ஒருமுறை ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டியானது, சகல சமரசங்களும், பேச்சுவார்த்தைகளும் சரிந்து கொட்டி கொடிய இராணுவ ஆட்சிக்காக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான ஏற்பாடுகள் தீர்த்து வைக்கப்பட முடியாத ஒரு நிலையிலேயே ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நடைமுறைக்கான துறையானது தொடர்ந்தும் தேசிய அரச துறையாக வன்றி, பூகோள ரீதியிலான துறையாகியுள்ளது. ஒவ்வொரு ஏகாதிபத்திய வல்லரசும் ஏனைய ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதார, அரசியல் பிராந்தியத்தினுள் பாய்ந்து விழுந்து, அவற்றினுள் தமது ஆளுமையை நிலைநாட்டும் போரில் ஈடுபட்டுள்ளன, வளைகுடா யுத்தத்தில் அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மன், திய வல்லரசுகளிடையே நிலவிய இணக்கமானது அபிவிருத்தியடையாத நாடுகளில் பேரளவில் இருந்து வந்த சுதந்திரத்தைக் கூட ஒழித்துக்கட்டி, அவற்றை மீண்டும் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய பாணியில் மிலேச்ச காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்த வேண்டும் என்பதில் மட்டுமே இருந்து வந்தது. அது எந்த ஏகாதிபத்திய வல்லரசின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பான நாய்ச் சண்டை இந்த இணக்கத்தின் அடியில் தீர் செய்ய முடியாத வகையில் நிலவுகின்றது: அந்த விதத்தில் வளைகுடா யுத்தமானது உலகினை மீண்டும் கூறுபோடும் மூன்றும் ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் ஆரம்பமாகும்.

ஆசிய, 'சார்க்' நாடுகளுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொள்ள ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் முயற்சியானது, ஆசியாவிலும் பசுபிக் கரைப் பிராந்தியத்திலும் தமது ஆதிபத்தியத்தினை வளர்த்துக் கொள்வதாகும். கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன் உள்ளடங்கலான ஐரோப்பியப் பிராந்தியத்தில் தனது பொருளாதார, அரசியல் ஆளுமையை பரப்பும் நடவடிக்கைகளில் ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுள்ளனர். இதே சமயம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வடக்கு தென் அமெரிக்கப் பிராந்தியங்களைத் தமது ஆளுமைக்குள் போட்டுக் கொள்ளும் இராணுவ நடவடிக்கையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர், பனாமா மீதான ஆக்கிரமிப்பும் லத்தீன் அமெரிக்காவில் 'போதைப்' பொருள்களுக்கு எதிரான யுத்தமும் இந்த இலக்கில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும். இந்தப் புதிய போக்கின் அர்த்தம், முழுப் பூகோளத்தையும் ஏகாதிபத்திய அணுவாயுத யுத்தத் திடலாக மாற்றுவதே.

## பங்கீடு

உலகத்தை மீண்டும் பங்கிட்டுக் கொள்ளும் மிலேச்ச ஏகாதிபத்தியத் திட்டம் வளர்ச்சி காண்கையில் எதிரியின் முன்நிலையில் முகட்டைப் பார்க்கும் நாய்க் குட்டி போன்று ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் பூரண அடிபணிவினைக் காட்டிக் கொண்டுள்ளனர். உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தினைக் காட்டிக் கொடுத்துவிட்டு, ஏகாதிபத்தியத்துடன் சகவாழ்வில் ஈடுபட்டுக் கொண்டு 'சோசலிசத்தை' தனித்தனி நாடுகளுக்குக் கட்டுப்படுத்தி வைக்கச் செயற்பட்ட ஸ்டாலினிச அதிகாரத்துவம், இன்றைய உலக அபிவிருத்திகளின் எதிரில் முகம் கொடுத்த நெருக்கடியினால் கவிழ்ந்து கொட்டத் தொடங்கியது. இதனால் ஏகாதிபத்தியம் தொடர்பான அதன் எதிர்ப்புச் சக்தி கூட முழுமையாக ஒழிந்து போயிற்று. இன்று மாஸ்கோ -- பீகிங் ஸ்டாலினித்துவ அதிகாரத்துவங்கள் இரண்டும் ஏகாதிபத்திய ஏகதரகு முதலாளிகளாகச் செயற்படுகின்றன.

வளைகுடா யுத்தம் வெளிக்கொணர்ந்த மத்திய கிழக்கு எண்ணெய் நிலங்களைக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய முயற்சியைச் சுதந்திரமாகக் கொண்டு நடாத்தும் பொருட்டு ஒரு எதிர்ப்பு வார்த்தை தன்னும் ஸ்டாலினிஸ்டுகள் பேசியதில்லை. இன்று போல்டிக் பிராந்தியத்தில் உள்ள சிறிய குடியரசுகளின் தேசியவாதிகளைத் தூண்டிவிட்டு, சோவியத் யூனியனை சிதறடிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் கொணரும் பிற்போக்கு உபாயங்களுக்கு கதவு திறந்துள்ளனர். உலகப் புரட்சிக்குக் குழிபறிக்கும் ஸ்டாலினிச வழிமுறையானது உலகப் புரட்சியின் முதல் நடவடிக்கையான 1917 அக்டோபர் புரட்சியின் சகல வெற்றிகளையும் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பலி கொடுக்க செயற்படுவதாக இருக்கும் என்ற லியோன் ட்ரொட்ஸ்கியின் தீர்க்க தரிசனத்தை நிரூபித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிகள் கவிழ்ந்து கொட்டியதன் மூலம் வெளிப்பாடான யுத்தத்தின் பின்னரான உலக அமைப்பின் வெடிப்பின் மத்தியில் ஏகாதிபத்தியவாதிகள் புதிய உலக அமைப்புக்கான ஆக்கிரமிப்பு பாய்ச்சலில் ஈடுபட்டு வரும் நிலையில் சகல தேசியவாத வேலைத்திட்டங்களதும் வங்குரோத்து முழுமையாக அம்பலமாகிக் கொண்டுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய உலக அமைப்பினைக் கொண்டு நடாத்தும் பொருட்டுத் திணிக்கப்பட்ட உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதியமைப்புக்களின் உறுதியுடன் உயிரைப் பிடித்து வைத்திருந்த அபிவிருத்தியடையாத நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கம், இன்று 'தேசிய சுதந்திரம்' பற்றிய சகல கதையளப்புக்களையும் ஒதுக்கி எறிந்துவிட்டு, முழுமையாக ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியுமாறு நெருக்கப்பட்டுள்ளன. உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்துக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட 'சுயபூர்த்தி' 'சுயசக்தி' பற்றிய தேசிய முதலாளித்துவத்தின்' சகல நப்பாசைகளும் இன்று வெடித்துச் சிதறி உள்ளன, தேசிய முதலாளிகளின் 'சுதந்திரம்' பற்றிய கருத்துக்கள் இன்று தேசியப் பொருளாதாரத்தினை எந்த ஏகாதிபத்திய எஜமானனுக்கு என்ன விலைக்கு விற்றுத்தள்ளுவது என்பதை தெரிவு செய்யும் சுதந்திரமாகவே உள்ளது. அது ஏகாதிபத்திய யுத்தத்தின் தீப்பிளம்பினுள் சகல நாடுகளையும் தள்ளிவிடுவதற்கான பாதையாகும்.

ஏகாதிபத்தியவாதிகளுடன் நல்ல வாய்ப்பான கொடுக்கல் வாங்கல்களை எதிர்பார்த்த ஈராக்கின் சதாம் ஹுசேன் ஆட்சியாளராகட்டும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு விமானத் தளங்களைத் திறந்துவிட்டு, எண்ணெய் பெற்றுக்கொள்ள முயன்ற இந்திய, இலங்கை ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளராகட்டும் நிலைமை இதுவே. இந்த ஆட்சியாளர்களின் 'சுயாதீனம்', சவூதி அரேபிய, எகிப்து குவைத் அல்லது துருக்கியின் ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாளர்களின் சேவைகளில் இருந்து வேறுபடுத்திக்காட்டுவதானால் — முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் மக்கள் முன்னணி அமைத்து கொண்டு, சகவாழ்வு நடாத்துவதன் மூலம் ஏகாதிபத்தியத்தின் அழிவுமிக்க பிடியினை தத்தம் நாடுகளில் தொடர்ந்தும் பேணிக் கொள்ள உதவும் ஏகாதிபத்திய சார்பு அதிகாரத்துவத்திலிருந்தும் அதன் திரிபுவாதக் கைக்கூலிகளிலிருந்து மட்டுமே வேறுபடுத்த முடியும்.

ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினதும் தேசிய முதலாளி வர்க்கங்களினதும் முற்போக்குப் பாத்திரம் பற்றிப் பேசிக் கொண்டு, தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தினைக் காக்கவும் புரட்சிகரக் கட்சிகளைக் கலைத்துவிடவும் தொழிற்பட்ட, பப்லோவாதிகளிற்கும் அதன் வெளிப்பாடான நாலுவிதமான தேசியவாதச் சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிராகவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1953ல் இருந்து தொடர்ந்து போராடியது. இதன் மூலம் உலகத் தொழிலாள வர்க்கத்துக்கு அவசியமான பாட்டாளி வர்க்க அனைத்துலகப் புரட்சிகரப் பதாகை பேணப்பட்டது. பிரித்தானியத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைவர்களான ஹீலி, பண்டா, சுலோற்றர் ஒடுகாலிகளை அனைத்துலகக் குழுவில் இருந்து ஒழித்துக் கட்ட 1982 தொடக்கம் அமெரிக்க வேர்க்கஸ் லீக் போராடியது. இது 1985ல் அனைத்துலக் குழுவின் பிளவாக ருசுப்படுத்தப்பட்டமை, அனைத்துலகக் குழு தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கும் கலைப்புவாதத்துக்கும் எதிராக அரசியல் ரீதியாக ஆயுதபாணியாக்கப் பட்டதன் புதிய கட்டத்தினைக் குறித்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் உலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் புரட்சிகரப் பாத்திரத்தினையும் அந்த வர்க்கத்தினை அரசியல் ரீதியில் தயார் செய்வதற்கான தகுதியையும் இந்த திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் மூலமே கைவரப் பெற்றது. மூன்றும் உலக யுத்தத்தின் பயமுறுத்தல் உருவாகியுள்ள இன்றைய தருணத்தில் மனித குலத்தின் எதிரில் உருவாகியுள்ள மனித கலாச்சாரமா அல்லது காட்டுமிராண்டித்தனமா என்ற பதிலடு அனைத்துலகக் குழுவின் முன்நோக்கும் பிரேரணையில் கீழ்க்கண்ட முறையில் சமர்ப்பிக்கப் பட்டது:

"ஒன்றில் பாட்டாளி வர்க்கம் சமூக உரிமையின் அடிப்படையில் முழு உலகத்தினதும் உற்பத்திச் சக்திகளை மறுசீரமைப்பதன் மூலமும் முதலாளி வர்க்கத்தினைத் தோற்கடிப்பதன் மூலமும் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுகளுக்கும் இடையேயான இம்முரண்பாட்டினை முற்போக்கான முறையில் தீர்க்க வேண்டும். அல்லது உற்பத்திச் சக்திகளை அழிப்பதோடு மனித இனத்தினை அடியோடு அழிப்பதன் மூலம் முதலாளித்துவம் தனது தீர்வினைத் தேடிக் கொள்ளும்" (உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணியும் — 'தொழிலாளர் பாதை' வெளியீடு)

சோசலிசத்தின் அடிப்படையில் உலக உற்பத்திச் சக்திகளை மறுசீரமைத்து, முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசுவதன் மூலம் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையேயான முரண்பாடுகளை முற்போக்கான முறையில் தீர்க்கக் கூடிய புரட்சிகர சமூக சக்தி தொழிலாள வர்க்கமே. அந்த வரலாற்றுப் பாத்திரத்தினை அது நிறைவேற்று வண்ணம் சீர்திருத்தவாத, வர்க்கச் சமரச அதிகாரத்துவத்தால் தடுக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய நாடுகளதும், பின்தங்கிய நாடுகளதும் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சியாளர்களும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராகத் தொடுத்துவரும் நாசகாரத் தாக்குதல்களை எதிர்த்து தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் போராட்டப் பாதையில் காலடி வைக்க மீண்டும் மீண்டும் முயன்றனர்.

இவர்களைக் காட்டிக் கொடுக்க சகல நாடுகளிலும் உள்ள அதிகாரத்துவங்கள் தொழிற்பட்டு வருகின்றன. தொழில் அழிப்பு சம்பளவெட்டு, சேமநல சேவைகள் ஒழிப்பு முதலான தாக்குதல்களின் முன்நிலையிலும், இன மத ஒடுக்குமுறைகளின் எதிரிலும், இராணுவ-பாசிச அடக்குமுறைகளின் எதிரிலும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி, தனிமைப்படுத்த இவர்கள் தொழிற்படுகின்றார்கள். 5 இலட்சம் கொலைகாரப் படைகளை இறக்கி ஈராக் மக்களுக்கு எதிராகத் தொடுத்த பரந்த இராணுவ தாக்குதலுக்கு எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து எந்தவிதமான சுயாதீன எதிர்ப்பும் உருவாகா வண்ணம் தவிர்ப்பதில் இவர்கள் அக்கறை காட்டினர். இந்த அதிகாரத்துவங்கள் நாட்டுக்கு நாடு தொழிற்பட்ட விதத்தினை நோக்கின் இவர்கள் ஏகாதிபத்திய அணுவாயுத யுத்தத்தின் இரத்த வெள்ளத்தில் முழு மனித இனத்தினையும் மூழ்கடிக்க பிற்போக்கு ஆளும்வர்க்கத்துடன் அணிதிரண்டுள்ள முறைமை நன்கு புலனாகின்றது.

சீர்திருத்தவாத, வர்க்கச் சமரச அதிகாரத்துவங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதன் மூலம் இப்பிற்போக்குத் தலைவர்களை தூக்கி வீசி, புரட்சிகர மார்க்சிச தலைமையின் கீழ் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டாமல், ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களும் திணிக்கும் அழிவில் இருந்து தொழிலாள —

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியா: பஞ்சாப், அசாம் தேர்தல்களுக்கு ஸ்டாலினிஸ்டுகள் எதிர்ப்பு

இந்தியாவின் பிரசித்தி பெற்ற துணிநெசவு ஆலையான பீ. அன் சீ. மில் மூடப்படுவதற்கு எதிராக இடம்பெற்ற ஒருநாள் 'பந்த்' போராட்டத்தினால் சென்னையும் அண்ணா மாவட்டமும் ஸ்தம்பித்தது. பாடசாலை மாணவர்களின் பரீட்சை காரணமாக பல்லவன் போக்குவரத்துச் சேவையும், ஆஸ்பத்திரி சேவையும் இந்த 'பந்தில்' சம்பந்தப்படுத்தப்படவில்லை. அரசாங்க, தனியார் துறையைச் சேர்ந்த சகல பக்டரிகள், வர்த்தக நிலையங்கள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டு, வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. சென்னையின் முக்கிய கைத்தொழில் பிரதேசங்களான மாதவரம் ஜனுவரம், பேரம்பூரில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பித்துக் கிடந்தது. தொழிலாளர்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தி' வீரியத்துடன் தலையிட்ட இடங்களில் பொலிசார் 600 தொழிலாளர்களை கைது செய்தனர்.

ஸ்டாண்டர்ட் மோட்டர்சுடன் சேர்ந்து இன்று பீ அன்ட் சீ. மில்லின் மூடுவிழாவானது உலக நெருக்கடியையும் ஏகாதிபத்திய முதலீடுகளுக்குச் செய்யப்படும் தயாரிப்பையும், இந்தியாவின் பாரம்பரிய தேசியக் கைத்தொழில்கள் துடைத்துக் கட்டப்பட்டு வருவதையும் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தியாவின் 'தேசிய' கைத்தொழிலும் பொருளாதாரத்துறையும் முற்று முழுதாய் நெருக்கடிக்குள்ளாகி வரும் நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் வீ. பி. சிங்கின் ஜனதா டால் கட்சியுடன் முதலாளித்துவ கூட்டரசாங்கம் அமைப்பதற்கான தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள். மே 20 23, 26ம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தியப் பொதுத்தேர்தலில் ஜனதா தளம் உள்ளடங்கலான முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து, போட்டி தவிர்ப்புகளில் ஈடுபடத் தயாராகி வருகின்றார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI) தேசிய சபையின் பிரேரணை இக்கூட்டினைப் பற்றி கூறியதாவது: ''எமது அரசியல் இலக்கு பாரதீய ஜனதா கட்சியையும் காங்கிரஸ் (இ) கட்சியையும் தோற்கடிப்பதும் லோக சபையில் (இந்திய பாராளுமன்றம்) இடதுசாரிச் சக்திகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தினை கொண்ட இடதுசாரி–தேசிய முன்னணிக் கூட்டின் மத்திய அரசாங்கம் ஒன்றினை கட்டி எழுப்புவதே.''

இந்திய ஸ்டாலினிஸ்டுகளின் மற்றோர் பிரிவினரான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, (மார்க்சிஸ்ட்—சிபிஎம்) தேசிய முன்னணியுடன் கூட்டரசாங்கத்தில் நுழைவது சம்பந்தமான தமது தயார் நிலையை வெளிப்படுத்தியுள்ளது. 'தீர்மானம் செய்வது தொடர்பான நெருக்குவாரம் ஏற்படுத்த முடியாதெனில் அரசாங்கத்தில் சேர தாம் விரும்பவில்லை' என அவ்வறிக்கை கூறிக் கொண்டுள்ளது.

இதற்கிடையே வீ.பி.சிங்கின் ஜனதா தளத்துக்கும் காபந்து பிரதமர் சந்திரசேகரின் ஜனதா தளத்துக்கும் (எஸ்) இடையே கூட்டுக்கான இரகசியப் பேச்சுவார்த்தைகள் தற்சமயம் இடம் பெற்றுவருகின்றது.

ஜனதா தளத்தின் தேசிய இணைப்புக் கமிட்டிக்கும் ஸ்டாலினிசக் கட்சிகள் உள்ளடங்கலான 'இடதுசாரிக் கூட்டுகளுக்கும் இடையே ஏப்ரல் 5ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சி பி. ஐ தலைவர் எம். பாரதியும் சீ.பீ.ஐ (எம்) அரசியல் குழு உறுப்பினர் ஹர்கிஜன் சிங் சந்தித்து ஒரு நிலைப்பாட்டினை வகித்தனர்: ஜனதாதளத்துடனான (எஸ்) கருத்துப் பரிமாறலை உடனடியாக முறித்துக் கொள்ளக் கூடாது. மார்ச் 29, 30, 31ம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டில் கலந்து கொள்ளவந்த சி. பி. ஐ. பிரதிநிதி தாம் இந்தியாவினுள் ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்க ஆயத்தமாகி வருவதாகத் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் முதலாளித்துவக் கூட்டரசாங்கங்களுக்கு



முதலாளித்துவத்துக்கு எதிரான இத்தகைய போராட்டங்கள் தினசரிக் காட்சி.

வெளியில் இருந்து கொண்டு அவற்றுக்கு முண்டு கொடுத்து வந்த இந்திய ஸ்டாலினிஸ்டுகள் இம்முறை அவற்றில் நேரடியாக இணைந்து கொள்ள முடிவு செய்தமை, அவர்களின் எஜமானனான ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கும் சேவை செய்யும் தமது எதிர்ப்புரட்சி தொழிற்பாட்டினை புதிய மட்டத்திற்கு உயர்த்திக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்திய ஸ்டாலினிச சகாக்கள் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவி ஏற்றுக் கொள்ள எடுத்த முடிவினை இலங்கை ஸ்டாலினிஸ்டுகள் 'அத்த' பத்திரிகையில் பெருமகிழ்ச்சி ததும்ப, உஜாருடன் வெளியிட்டனர். வெளியில் இருந்து கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கையில் 'மக்கள் நம்பிக்கை' குறைந்து போவதால், அரசாங்கத்தில் நேரடியாக நுழைவது அவசியம் என இலங்கையின் ஸ்டாலினிஸ்டுகள் வாதிட்டு வந்தனர்.

அசாம், பஞ்சாப் மாநிலங்களில் தேர்தல் நடாத்தாமல்



காபந்து பிரதமர் சந்திரசேகர்

தொடர்ந்தும் அவற்றை புது டில்லியின் நேரடி ஒடுக்குமுறையின் கீழேயே வைத்திருக்க வேண்டும் என்ற பிரச்சாரத்துக்கும் இந்திய ஸ்டாலினிஸ்டுகள் ஆதரவு அளித்துள்ளனர். இது சம்பந்தமாக ஒரு நினைவூட்டல் கடிதத்தினைக் கூட சி. பி. ஐ, சீ. பீ. எம் தலைமைகள் காங்கிரஸ் (ஐ), பகுபிற்போக்கு இந்துவெறி பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## விமர்சனம்

எதிர்வரும் தேர்தலில் அரசியல் இலாபத்தின் பேரில் சந்திரசேகரின் காபந்து அரசாங்கம், பஞ்சாபிலும், அசாமிலும் தேர்தல் நடாத்தும்படி ஏப்ரல் 11ம்திகதி ஜனாதிபதிக்குசிபார்சு செய்தது. இந்தச் சிபார்சினை கடுமையாக விமர்சனம் செய்த சீ.பீ. ஐ (எம்) தலைவர்கள், அதனை அமுல் செய்ய வேண்டாம் என ஜனாதிபதியைக் கோரி இருந்தனர். தமது அதிகாரத்தினைப் பாவித்து இம்முடிவினை அமுல் செய்வதை தவிர்க்குமாறு சீ. பீ. ஐ (எம்), தேர்தல் ஆணைக் குழுவைக் கேட்டுள்ளதாக அதன் அரசியல் குழு உறுப்பினரான ஹர்கிஷான் சிங் சுர்ஜிட் பீ. ரீ. ஐ. செய்திச் சேவையிடம் குறிப்பிட்டார்.

''இன்றைய அரசாங்கம் தீவிரவாதிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் செயல்பட முயற்சிக்கிறது, லோக் சபை தேர்தலை நடாத்துவதன் மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் உறுதி செய்ததன் பின்னர் தேர்தல் நடாத்துவது பற்றிய விவாதத்துக்கு வர சகல அரசியல் கட்சிகளும் தயாராக உள்ள நிலையில் அரசாங்கத்தின் நடவடிக்கை கலைக்கப்பட்ட லோக் சபாவின் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவம் செய்த பல்வேறு அரசியல் கட்சிகளின் அபிப்பிராயம் பற்றி இன்றைய அரசாங்கம் எதுவித அக்கறையும் காட்டவில்லை'' என்பதைக் குறிக்கிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாரதீய ஜனதா கட்சியின் இனவாதம், மதவாதம் சம்பந்தமான அவர்களின் 'விமர்சனம்' ஒருபுறமிருக்க, இந்திய ஸ்டாலினிஸ்டுகள் பஞ்சாபையும், அசாமையும் ஹிந்து மதவெறி மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு கீழ்ப்படுத்தி வைக்க பாரதீய ஜனதா கட்சியுடனும் வெளிவெளியாகக் கைகோர்த்துக் கொண்டுள்ளனர். சமீப காலம் வரை பஞ்சாபிலும், அசாமிலும் தேர்தல் நடாத்த வேண்டும் எனக் கேட்டு வந்த சீ.பி.ஐ. தலைவர்கள் கூட 180 பாகையில்குத்துக்கரணமடித்து அம்மாநிலங்களில் தேர்தல் இரத்தாக வேண்டும் என்ற பிரச்சாரத்தில்குதித்துள்ளனர். இந்தக் குத்துக்கரணத்தின் மூலம் தம்மிடையே இருந்து வந்த சிறுசிறு கருத்து வேறுபாடுகள் மறைந்து, நெருங்கித் தொழிற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக சீ. பீ. எம். தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாளாவண்ணம் எதிர்ப்புரட்சி அரசியலின் உச்சக் கம்பத்துக்கு ஏறிக் கொண்டுள்ள இந்த சீ. பீ. ஐ, சீ. பீ. எம் தலைவர்களையே 'இந்தியாவின் இடதுசாரி சக்திகள்' என சந்தர்ப்பவாத நவசமசமாஜ மத்தியவாத தலைவர்கள் அரவணைத்துக் கொண்டுள்ளனர்; இந்தியாவினுள் சிறுபான்மை தேசிய இனங்களையும் மதக் குழுக்களையும் நசுக்கவும், தொழிலாள வர்க்கத்தினை ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுக்குப் பலியிடவும் இந்திய ஸ்டாலினிஸ்டுகள் தொழிற்படுகின்றனர். கடந்த ஆண்டு நடைபெற்ற நவசமசமாஜக் கட்சியின் 13வது ஆண்டு நிறைவு விழாவுக்கு சீ.பீ.எம்.மின் தமிழ்நாடு நிறைவேற்றுக் குழு 'நல்வாழ்த்து' அனுப்பியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்டாலினிஸ்டுகளின் இந்த துரோக நடவடிக்கைகளை தமக்கு முற்றிலும் சாதகமாக்கிக் கொண்டுள்ள படுபிற்போக்கு இந்திய வலதுசாரி பாரதீய ஜனதா கட்சி, இன—மத வெறிப் பிரச்சாரத்தினை முன்னெடுத்துள்ளது; ஏப்ரல் 4ம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய பா ஜ. கட்சி தலைவர் எல். ஜே. அத்வானி, பாகிஸ்தானத்தின் நிர்வாகத்துக்குள் வரும் 'காஷ்மீரினை இந்தியாவுக்குப் பெறும் பொருட்டு தமது கட்சி செயற்பட்டு வருவதாகக் கூறினார். விஸ்வ ஹிந்து பரிசத மற்றும் ஆர். எஸ். எஸ். போன்ற வலதுசாரி இனவெறியர்களுடன் சேர்ந்து இத்தகைய இன—மத ஆத்திரமூட்டல்களில் பாரதீய ஜனதா கட்சி ஈடுபடக் காரணம், இந்தியத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக பாசிச இயக்கம் ஒன்றைக் கட்டி எழுப்புவதே.

தொழிலாள வர்க்கத்தின் மீது அத்தகையமிலேச்ச பாசிச சர்வாதிகாரத்தினைத் திணிக்க அவசியமான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதற்கு இந்திய தொழிலாள வர்க்கத்தினை முதலாளித்துவ மக்கள் முன்னணி பொறிகளில் மாட்டுவதற்கு ஸ்டாலினிச ஏஜன்டுகளின் சேவை இந்திய ஆளும் வர்க்கத்துக்கு அவசியம். சீ. பீ. ஐ. சீ. பீ. எம். தலைவர்கள் தமது எஜமான்களுக்கு இச்சேவையை வழங்கத் தயாராகி வருகின்றனர்.

ஸ்டாலினிஸ்டுகளின் இந்த மக்கள் முன்னணி துரோக அரசியலுக்கு எதிராக மாற்றுப் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவதற்கு இந்தியத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தோழமை இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம் மட்டுமே போராடி வருகின்றது. முதலாளித்துவ ஜனநாயக நப்பாசைகளுக்கு எதிராக இந்திய முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, தொழிலாள வர்க்க அரசினை ஸ்தாபிதம் செய்வதற்கான புரட்சிகர வேலைத்திட்டத்துடன் சோ. தொ. க, வட சென்னை, வில்லிவாக்கம் தேர்தல் தொகுதிகளில் தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

www.padippakam.com



ஈராக்:

# குர்திஷ் மக்கள் மேல் ஏகாதிபத்தியம் புதிய அவலங்களைத் திணிக்கிறது

அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் குர்திஷ் அகதிகளுக்கு முகாம்கள் அமைக்கும் சாட்டில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வடக்கு ஈராக்கில் விஸ்தரித்துள்ளது. ஈராக்கிய மக்கட் படுகொலைகளுக்குப் பொறுப்பாக இருந்த அமெரிக்கத் தளபதி நோர்மன் ஸ்வாஸ்கோப் இதைப் பற்றிக் குறிப்பிடுகையில் "பாக்தாத் படைகளால் குர்திஷ் மக்கள் பயமுறுத்தப்படும்வரை அமெரிக்கப் படைகள் வடக்கு ஈராக்கில் நிலை கொண்டிருக்கும்'' எனக் கூறியுள்ளார்.

வடக்கு ஈராக்கில் உள்ள முக்கிய எண்ணெய் நிலையங்களான கிர்குக், டோகுக், இர்பில், ஸாகுவை மீண்டும் கைப்பற்றும் பொருட்டு ஈராக்கிய இராணுவம் ஒடுக்கப்பட்ட குர்திஷ் மக்களுக்கு எதிராக நடாத்திய ஒடுக்குமுறைகள் மூலம் அவர்களை ஏகாதிபத்திய சுரண்டலின் பலிகடாக்களாக்கியுள்ளது.

கிர்குக்கைச் சுற்றி இடம்பெற்ற சண்டையில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். முழுச் சனத்தொகையும் — இலட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மலைகளைத் தாண்டியும், துருக்கி ஈரான் எல்லைகளைத் தாண்டி ஓடியும் உள்ளனர். மக்கட் குடியிருப்புப் பிரதேசங்கள் ஹெலிகொப்டர்களின் றொக்கட் தாக்குதல்களுக்கும் குண்டு வீச்சுக்களுக்கும் இலக்காகியுள்ளன.

## இனப்படுகொலை

இந்த இனப்படுகொலைகள் அமெரிக்க ஏகாதிபத்தியம் பாரசீக வளைகுடாவில் மேற்கொண்ட தலையீட்டின் சிக்கலான தன்மையை நன்கு தெளிவாக அம்பலமாக்கிக் கொண்டுள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் ஈராக்கிய பிராந்தியத்தில் 20% த்தை தொடர்ந்தும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பு, சதாம் ஹுசேன் ஆட்சியாளர்கள் குர்திஷ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தொடரப் பச்சை விளக்குக் காட்டியுள்ளது.

முற்றிலும் பந்தோபஸ்தற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட, குவைத்தில் இருந்து தப்பியோடிய மூன்று 1 இலட்சம் ஈராக்கியப் படையினரை 'பென்டகன்' கொன்று தள்ளி வந்த நிலையில் புஷ், ஈராக்கிய மக்களை ஹுசைனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும்படி வேண்டினார். ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு, குர்திஷ் மக்களுக்கு ஒரு முழுச் சுதந்திரத்தை வழங்காது போகினும் ஒரு தன்னடக்கம் கொண்ட பிராந்தியத்தையாகுதல் வழங்கும் என நம்பத் தூண்டியது.

கிளர்ச்சி ஆரம்பமாகி, கிளர்ச்சிப் படைகள் வட ஈராக்கின் கணிசமான பிராந்தியத்தினைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தவேளையில் ஈராக்கிய இராணுவம் குர்திஷ் மக்களுக்கு எதிரான ஒரு இரத்தக் களரி



ஜோர்ஜ் புஷ்

வாகம் மறைமுக ஆதரவை வழங்கியது.

குர்திஷ்தான் தேசாபிமான யூனியனினதும், குர்திஷ் ஜனநாயகக் கட்சியினதும் குர்திஷ் முதலாளித்துவத் தேசியவாதத் தலைவர்கள் புஷ் நிர்வாகத்தினைப் பற்றிய நப்பாசைகளைப் பரப்பி வந்தனர். இருப்பினும் அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்த பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் எந்தவிதமான ''விடுதலை''ப் பாத்திரத்தினையும் வகிக்க விரும்பவேயில்லை. ஆரம்பத்தில் இருந்தே பிராந்தியத்தின் பரந்த வளங்களைச் சூறையாடுவதும், அதன் மூலோபாய அந்தஸ்தினை தன் பிடிக்குள் கொணர்வதுமே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இலக்காக விளங்கியது.

## வாய்மூடு மந்திரம்

குர்திஷ் மக்களை நசுக்குவதில் வாஷிங்டன் வகித்த வாய்மூடு மந்திரப் பாத்திரமானது மீண்டும் ஒரு தடவை வளைகுடாவில் அமெரிக்கத் தலையீட்டினை நியாயப்படுத்த முன்வைக்கப்பட்ட 'நியாயங்கள்' மோசடியானவை என்பதை நிரூபித்து விட்டது. குவைத் மக்களுக்கு எதிராக ஈராக் அரசாங்கம் இழைத்ததாகச் சொல்லப்பட்ட — பூதாகாரப்படுத்தப்பட்ட அட்டூழியங்களை குர்திஷ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுடன் ஒப்பிடும் போது அவை அற்பமானவை.

மேலும் குவைத்தை பேணுவதன் மூலம் சுயநிர்ணய உரிமையின் காவலனாகத் தான் தொழிற்பட்டுக் கொண்டுள்ளதாக அமெரிக்க ஏகாதிபத்தியம் காட்டிக்கொள்ள எடுத்த கோலம் சிதறிச் சின்னாபின்னமாகியுள்ளது. ஏன்? அவ்வளவுக்கு புஷ் நிர்வாகம் குர்திஷ் மக்களின் நியாயமான தேசியவாத உந்துதல்களுக்கு அப்பட்டமான குரோதம் காட்டிக் கொண்டுள்ளது. பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டுக்கு ஆதரவு வழங்கிய பல்வேறு ஆதரவாளர்கள் இன்று குர்திஷ் கிளர்ச்சி தொடர்பான அதன் போக்குக் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளனர். 'நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் வலதுசாரி எழுத்தாளர்கள் தொடக்கம் அமெரிக்க தொழிற்சங்க இயக்கமான ஏ. எப். எல் — சி, ஐ.ஓ. வின் கிர்க்லன்ட் தலைமை வரை

இவர்களில் இந்துக் கண்டனக் குரலின் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? குர்திஷ் மக்களை இந்த மௌனத்தில் மூழ்கடிக்கும் வரை இவர்கள் காத்திருந்தனர். இவர்கள் இஸ்ரேலில் சியோனிச ஆட்சியாளர்கள் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இழைத்து வரும் அநியாயங்களை தொடர்ந்து ஆதரிக்கின்றனர். ஈராக்குக்கு எதிராக — அதை முழுமனே நாசமாக்க அமெரிக்காவும் அதன் சகல எதிர்ப்புரட்சி சக்திகளும் தொடுத்த பட்ட முறைக்கு அவர்கள் காட்டிய ஆதரவை இங்கு குறிப்பிட்டுத்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

குர்திஷ் தேசிய பிரச்சினை சுயநிர்ணய முறையில் பகடைக்காயாக்கப்பட்டமையோ அல்லது குர்திஷ் மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து இரத்தம் தோய்ந்த துரோகமோ அப்படி ஒன்றும் புதியதல்ல.

சினை பெட்டகத்தின் அடியில் தள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில் குர்திஷ் கிளர்ச்சிகள் ஊக்கப்படுத்தப்பட்டு, பின்னர் காட்டிக் கொடுக்கப்பட்டன. ஏகாதிபத்தியமும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களில் ஏதேனும் ஒன்றும் இதைச் செய்தன. பிராந்தியத்திலான தமது நலனின் பேரில் அவை இதைச் செய்தன. பல தடவைகளில் துருக்கி, அல்லது ஈராக், அல்லது சிரியா பிறரின் நாடுகளில் குர்திஷ் கிளர்ச்சிகளை ஆதரிக்கும். தத்தம் நாடுகளில் உள்ள குர்திஷ்களை நசுக்கிக் கொண்டே இந்த ஆட்சியாளர்கள் இந்த 'ஆதரவினை' வழங்கி வந்தனர்.

குர்திஷ் மக்கள் தொடர்பான அமெரிக்காவின் கடைசி மாபெரும் பாத்திரம் 1973–74ல் இடம் பெற்றது. பாக்தாதில் பாத்திஸ்ட் ஆட்சியாளர்களுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியை ஆதரிக்கும் பொருட்டு

திஷ் ஜனநாயகக் கட்சிக்கு பிரமாண்டமான அளவில் சி.ஐ.ஏ. நிதியீட்டமும் ஆயுத விநியோகமும் செய்யப்பட்டன. குர்திஷ் கெரில்லாக்களுக்கு நேரடி ஆதரவு வழங்கும் விதத்தில் ஈரானிய ஆயுதப் படைகளும் பயன்படுத்தப்பட்டன.

பக்டாதில் தமது சதியின் பொறிமுறை எனும் நூலில் இந்த சி.ஐ.ஏ. சதியை விபரிக்கையில் ஒரு காங்கிரஸ் கமிட்டி அறிக்கையை இதற்கு ஆதாரமாக மேற்கோள்காட்டியுள்ளார். மூன்றரை தசாப்தங்களின் பின்னர் மசூட் பர்ஸானி தமது தந்தையின் அடிச்சுவட்டிலேயே பயணம் செய்தார். குர்திஷ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை அவர் ஏகாதிபத்திய இயந்திரத்தின் அடிப்படையிலேயே கொண்டு நடாத்திய தோடு குர்திஷ் மக்களை மீண்டும் இரத்தக் களரிக்கும் இட்டுச் சென்றார்.

தொழிலாளவர்க்கம், குர்திஷ் மக்களின் சுயநிர்ணயத்துக்கான



குவைத் — பஸ்ரா வீதியில் ஈராக்கிய படைகளும், மக்களும் ஏகாதிபத்திய படைகளால் கொலையுண்டு கிடக்கும் காட்சி

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓட்டோமன் ஆட்சியாளர்கள், குர்திஷ் மக்களை ஆர்மேனியர்களுக்கு எதிராகத் தூண்டிவிடச் செய்தனர். இதனை அவர்கள் தமது பிரித்தாளும் தந்திரத்தின் பாகமாக செய்தனர். முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து ஏகாதிபத்திய வல்லரசுகள், ஓட்டோமன் முடியாட்சியை கூறுபோட்டுக் கொண்டனர். அவர்களின் உடன்படிக்கையில் 'ஒரு உள்ளூர் சுயாட்சி திட்டம்' குர்திஷ் மக்களுக்கு வழங்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது. அதோடு பிற்காலத்தில் துருக்கி எனப்பட்டதன் கிழக்குப் பகுதியில் ஒரு சுதந்திர அரசினை அமைக்கும் உரிமையும் வழங்கப்படும் என்றனர். உண்மையில் இந்த உடன்படிக்கையானது இப்பிராந்தியத்தினை காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட ஒரு தொகை குட்டி அரசுகளாக — ஈராக், சிரியா குவைத் — கூறுபோடுவதிலேயே அக்கறை காட்டியது. ஆனால் ஏகாதிபத்தியம் திணித்த தேசிய எல்லைகளின் உறுதிப்பாட்டின் வலுவுக்காக குர்திஷ் பிரச்

அமெரிக்க, இஸ்ரேல், ஈரான் ஆட்சியாளர்கள் ஒன்று பட்டனர். 1973 அராபிய — இஸ்ரேல் யுத்தத்தினைத் தொடர்ந்து ஈராக்கிய ஆட்சியாளர்களைக் கட்டிப் போடுவதற்கான ஒரு சாதனமாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் சியோனிச ஆட்சியாளர்களும் குர்திஷ் கிளர்ச்சியை பயன்படுத்த விரும்பினர். அத்தோடு வாஷிங்டன், 1972ல் அமெரிக்க எண்ணெய் கம்பனிகள் ஈராக்கில் தேசியமயமாக்கப்பட்டதற்கு எதிரான ஒரு பதிலடியாகக் கிளர்ச்சிக்கு ஆதரவு வழங்க எண்ணியது. ஈரான் ஷா சர்வாதிகாரி, ஒடுக்கப்பட்ட ஈராக் குர்திஷ் மக்களின் தேசிய அபிலாசைகளை சுரண்டிக் கொள்ள முயன்றது. ஷட் — அல் — அரப் பகுதியில் எல்லை சலுகைகளையும் மற்றும் விரிவாக்கல் நோக்கங்களையும் அடைய இதைப் பயன்படுத்த முயன்றது.

## கிசிங்கர்

அன்றைய அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹென்றி கிசிங்கரின் பணிப்பின் பேரில் முன்தாபா பர்ஸானியின் குர்

நிபந்தனையற்ற உரிமையையும் முதலாளித்துவ தேசியவாத தலைவர்கள் கையாண்ட முற்றிலும் பிற்போக்கான வழிமுறையையும் இனம் பிரித்துக் காண வேண்டும். குர்திஷ் மட்டுமன்றி சகல முதலாளித்துவ தேசியவாத அமைப்புக்களதும் — பி எல் ஓ, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட — வரலாற்றுப் பலவீனம் என்னவெனில் இவை எல்லாமே ஏகாதிபத்தியத்துடனான கூட்டின் மூலமே சுதந்திரமும் சுயநிர்ணயமும் பெறுவது தான்.

அப்படியாக தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே குர்திஷ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிசமாக அளித்தல் செய்ய முடியும். முதலாளித்துவத்தினை தூக்கி வீசி, ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட பிற்போக்கு எல்லைகளை தகர்த்து எறியும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாகவே இதைச் சாதிக்க முடியும். உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இந்த முன்னோக்கின் அடிப்படையிலேயே போராடி வருகின்றது.

www.padippakam.com



# உலகயுத்தத்துக்கும் காலனிமயமாக்கலுக்கும்..

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்கப்படும் மக்களை மீட்க முடியாது. இதற்கான வேலைத் திட்டத்தினையும், தலைமையையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளுமே வழங்குகின்றன.

## இந்தியத் துணைக்கண்டம்

சீர்திருத்தவாதிகளும், ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களைக் காக்கும் பொருட்டு தம்மை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளன. இந்த அரசியலை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிப்பது பற்றி இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் மிகவும் கேவலமான வடிவங்களை எடுத்துள்ளன. இவை ஏனைய இடங்களில் இழைக்கப்பட்ட காட்டிக் கொடுப்புக்களை எல்லாம் தாண்டிச் செல்கின்றன.

இலங்கையில் சமசமாஜ, ஸ்டாலினிச தலைவர்களும் இந்தியாவில் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் திணிக்கப்பட்ட பிற்போக்கு முதலாளித்துவ அரசுகளுக்கும் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கும் அடிபணிந்தமையானது கோடானுகோடி இந்திய, பாகிஸ்தானிய, பங்களாதேஷ், பர்மிய, இலங்கை மக்களுக்கு சகிக்க முடியாத வேலையின்மை பஞ்சம்,பட்டினியையே தேடிக் கொடுத்துள்ளது. இவற்றுக்கு எதிராகத் தலைதூக்கும் மக்கட் போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் தயாரிப்பு நடவடிக்கையாக ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை இடைவிடாமல் இன, மத மோதுதல்களில் ஈடுபடச் செய்து இராணுவ — பாசிச சர்வாதிகாரத்தினை திணிக்க முயன்று வருகின்றது. 1947—48ல் இந்தியாவை பிரிவினை செய்த வேளையில் இந்தியத் துணைக்கண்டம் பூராவும் இடம் பெற்ற இரத்தக் களரியை தாண்டும் ஒருதொகை மோதுதல்களை தூண்டிவிடுவதில் பிற்போக்கு ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் பயங்கர இயக்கமானது இந்த காட்டுமிராண்டி நடவடிக்கையின் ஒரு பாகமே.

யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய உலக அமைப்பின் பொறிவானது இந்தியத் துணைக்கண்டத்தின் உள்ளே ஏகாதிபத்தியச் சார்பு தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பிற்போக்கும், அறிவும் இலட்சோப இலட்சம் மக்களிற்கு வசிப்பிடமும் இல்லாமல் செய்வதன் மூலம் வெளிப்பாடாகியுள்ளது. இன்று பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, இந்தியா, இலங்கை முதலான சகல முதலாளித்துவ நாடுகளில் திணிக்கப்படும் இன — மத ஒடுக்குமுறைகளைச் மக்களும், ஏழைகளும் ஒரு நாட்டில் இருந்து மறு நாட்டிற்கு அகதிகளாக கலைக்கப்பட்டு வருகின்றார்கள். இந்தியாவின் பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் இருந்து பாகிஸ்தானுக்குப் பெருக் கெடுக்கும் அகதிகளும் பங்களாதேஷ் முஸ்லீம் அடிப்படைவாதிகளின் ஒடுக்குமுறையைச் சகிக்க முடியாமல் இந்தியாவுக்குள் பெருக்கெடுக்கும் இலட்சக்கணக்கான சிக்மாக்கள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களும், பர்மாவில் இராணுவ ஒடுக்குமுறையிலும் முஸ்லீம் எதிர்ப்பிலும்பங்களாதேசுக்குள்ளும் இந்தியாவுக்குள்ளும் பெருக்கெடுப்போரும், வட — கிழ் மாகாண தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினால் அவர்களின் வீடுவாசல்களில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட 8 இலட்சம் மக்கள் இந்தியாவுக்குச் சென்றமையும் இந்த சரணடைந்த மாபெரும் மக்கள் சனத்தொகையின் ஒரு சிறு துளியாகும்.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் மாபெரும் வெற்றிகளை ஈட்டிக்கொண்டுள்ள இன்றைய உலக நிலையில் குறைந்த பட்ச மனித வாழ்க்கை வசதிகள் தானும் இல்லாமல் இங்ஙனம் புகலிடம் தேடிக்கொண்டுள்ள இலட்சோப லட்சம் மக்கள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிகளுக்கு எதிராகத் தொடுக்கும் பலத்த குற்றச் சாட்டாகும்.

இது வெறுமனே இன்று அடைக்கலம் தேடிக் கொண்டுள்ள மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அழிவுமட்டுமன்றி, முழுத் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மீதும் மிலேச்ச ஏகாதிபத்திய இராணுவ ஆட்சியினை திணிக்க எடுக்கப்பட்டு வரும் ஆரம்ப நடவடிக்கையாகும். இதனை ஈராக்கில் இடம்பெறும் சம்பவங்கள் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபித்துக் கொண்டுள்ளன. அந்தந்த நாடுகளில் மக்கள் வாழ்க்கைகளை நாசமாக்கும் முறையில் தலையிட்டு வரும் ஏகாதிபத்தியவாதிகள், அந்நாடுகளில் தமது படைகளை இருத்தும் திட்டங்களுக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகின்றார்கள். இந்த விதத்திலேயே ஈராக் குர்திஷ் மக்களின் அவலநிலையை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தமும் அதனால் உருவான அகதிகள் பெருக்கமும் 1987ல் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவு பெற்ற இந்திய படைகளின் நுழைவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இன்று இந்த வேலைத்திட்டம் உலகம் பூராவும் நடைமுறைப்படுத்தும் அளவுக்கு உசார்த்தப்பட்டுள்ளது. இந்நிலைமையில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் முதலாளித்துவக் கட்சிகள், குழுக்களும் முஸ்லீம் எதிர்ப்பு இந்து வெறியை தூண்டுவதானது இந்தியாவிலும் துணைக்கண்டம் பூராவும் ஏகாதிபத்திய நிலைமைகளைச் சிருஷ்டிப்பதாக உள்ளது.

ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களைத் தூக்கி வீசும் பொருட்டு ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் கிராமப்புற ஏழைகளையும் அணி திரட்டி, தொழிலாளி வர்க்கம் சுயாதீனமாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் தலைமையின் அவசியத்தினை இது தோற்றுவிக்கின்றது. ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் சேர்ந்து செய்து வரும் சதிகளை ஒழிக்கவும் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை மூன்றாம் உலக யுத்தத்திற்குப் பலியிடுவதை தவிர்க்கவும் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவினைப் பெற்ற தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே முடியும். தொழிலாள வர்க்கம் அரச அதிகாரத்தினைக் கைப்பற்றுவதன் மூலம் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களினால் தீர்க்கப்படாது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய உரிமைகளை உறுதி செய்தல், ஏழை விவசாயிகளின் நிலம் உரிமையை வழங்குதல் உள்ளடங்கலான ஜனநாயக பணிகளை இட்டு நிரப்புவதன் மூலம் சோசலிச சொத்து முறையை ஸ்தாபிதம் செய்யவேண்டும்.

உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளையின் பேரில் இடம்பெறும அரசாங்கத்தினைக் களங்கள், கூட்டுத்தாபனங்கள் தனியார்மயமாக்கமும தோட்டங்கள் பக்டரிகளில் இலட்சக் கணக்கான தொழில்கள் வெட்டும் விவசாயிகளுக்கும் கிராமப்புற ஏழைகளுக்கும் கிடைத்து வந்த மானிய ஒழிப்பும் சேமநல சேவைகள் வெட்டும் ஏகாதிபத்திய மூலதனத்தின் நலனின் பேரில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளாகும். 'சுதந்திர' காலப்பகுதி எனப்பட்ட காலத்தில் வெளிநாட்டுக் கம்பனிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டுக் கட்டியெழுப்பப்பட்ட ''தேசிய''க் கைத்தொழில், நிறுவன அமைப்பினைச் சிதறடித்து, நிதி மூலதனத்தின் நலனுக்குப்பொருத்தமான முறையில் ஏகாதிபத்திய ஏகபோகங்களின் வேட்டைக்களமாக இந்நாடுகளை மாற்றுவதே வங்கியாளர்களின் கட்டளையின் அடிநாதமாகும்.

இந்த தொழிற்பாட்டின் மூலம் சிதறடிக்கப்படுவது பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அமைப்பு மட்டுமன்றி. பெரொஸ்ரொயிகா அல்லது முதலாளித்துவ புனருத்தாரணத்தின் கீழ் ஸ்டாலினிஸ்டுகள் சோவியத் யூனியன்கிழக்கு ஐரோப்பா, சீனாவில் மட்டுமன்றி 15 ஆண்டுகளுக்கு முன் ஏகாதிபத்தியத் திடமிருந்து விடுதலை செய்ததாகக் கூறிக் கொண்ட வியட்னாமிலும் பொருளாதார அமைப்பு முழுமனே சிதறடிக்கப்பட்டு ஏகாதிபத்திய நிதி மூலதனப் பாய்ச்சலுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஏகாதிபத்திய நாடுகளிலும் பெருமளவிலான கைத்தொழில்கள் மூடப்பட்டுவருவதோடு இலட்சக்கணக்கானோர் தொழில்களும் இடம் பெற்று வருகின்றது. இந்தஇலட்சணத்தில் 'மறுசீரமைப்பு' இடம் பெறுகின்றது. உற்பத்திச் சக்திகளின் முன்னொரு போதும் இல்லாத வளர்ச்சியின் சிதறடிக்கப்பட்டுள்ள பழைய உலக அமைப்புக்குப் பதிலாக புதிய ஏகாதிபத்திய உலக அமைப்பினைக் கட்டி எழுப்பும் அவசியத்தின் அடிப்படையிலேயே இவை இடம்பெற்று வருகின்றன. தேசியப் பொருளாதாரங்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன ஏகபோகங்களின் நலன்களுக்கு ஏற்ப உற்பத்தியும் விநியோகமும் மீண்டும் மறுசீரமைக்கப்படுகின்றன. இந்தத் தொழிற்பாடு இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற முறைமையை விளக்குகையில் லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''மூலப்பொருட்களின் பெரும் முக்கியமான மூலகங்கள் தொடர்பாக ஏகபோகங்கள் மூலதனத்தின் ஆளுமையைப் பெரிதும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளன. இதனால் கூட்டிணைக்கப்பட்டதும், கூட்டிணைக்கப்படாததுமான கைத்தொழில்களுக்கு இடையே முரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ளன.'' (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்)

நிதி மூலதனத்தின் நலன்களுக்கு ஏற்ற புதிய ஏகாதிபத்திய உலக அமைப்பின் பொருட்டுச் செய்யும் பொருளாதார மாற்றங்களுக்கும் இராணுவ மயமாக்கல்களுக்கும் முன்நிலையில் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் அதற்குச் சமமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். இவற்றுக்கான தீர்வு, ஏகாதிபத்திய உலக அமைப்பினை உலகச் சோசலிசப் புரட்சி மூலம் தூக்கிவீசும் பணியிலேயே தங்கியுள்ளது, ஏகாதிபத்தியத்துக்கும் அதன் ஏஜன்சியான தேசிய முதலாளித்துவ ஆட்சிக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கும் தொழிலாள வர்க்கத்தினை கட்டிப் போடச் செயற்படும் சீர்திருத்தவாத, சந்தர்ப்பவாத, குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளை துரத்தியடித்து, புரட்சித் தலைமையைச் சூழ தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டுவதே அப்பணியை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு அவசியமான முன்நிபந்தனையாகும். இதன் பொருட்டு பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் போராடுகின்றன.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்துக்கு ஆதரவு வழங்கியும், கிராமப்புற இளைஞர்களுக்கு எதிராக படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள முதலாளித்துவ அரச படைகளின் கையாட்களாகியும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைமைகள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியின் பாதுகாவலர்களாகியுள்ளனர். யு. என். பி. உடன் கூட்டுக்களில் உள்ள மக்கள் முன்னணி அமைத்துக் கொண்டுள்ள இத்தலைமைகள், மக்கள் முன்னணியை காப்பதன் அடிப்படையில் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் சகல போராட்டங்களையும் தவிர்த்துக் கொள்வதோடு, அப்போராட்டங்கள் தோன்றும் சகல இடங்களிலும் அவற்றை காட்டிக்கொடுத்தும் வருகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தினைக் காட்டிக் கொடுக்கத் தொழிற்படும் இத்துரோகத் தலைவர்கள் கடைப்பிடித்து வரும் வேலைத்திட்டத்தினால் குழம்பிப் போகும் மத்தியதர வர்க்க ஏழை மக்கட் பிரிவினரிடையே அரசியல் ஆளுமையைக் கட்டி எழுப்ப குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்கள் தோன்றுகின்றன. தேசியவாதவேலைத் திட்டத்தின் அடிப்படையில் இயங்கும் இவை ஏதேனும் ஒரு ஏகாதிபத்திய கோஷ்டியின் அல்லது முதலாளித்துவ ஆளும் வர்க்கப் பகுதியினரின் நலன்களுக்குத் தோள் கொடுக்கின்றன. தொழிலாள வர்க்க எதிர்ப்பு, இனவாத பாசிச இயக்கமாக மாறிய ஜே.வி.பி. இந்த தொழிற்பாட்டிற்குநல்ல தோர் உதாரணமாகும். தமிழ் தேசிய இனத்தினுள் செயற்பட்ட புளொட், ஈபிஆர்எல்எப், டெலோ, ஈரோஸ், ஈபிடீபி போன்ற குழுக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இனவாத முதலாளித்துவ ஆட்சியாளர்களின் எடுபிடிகளாக மாறியதன் மூலமும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏகாதிபத்தியச் சார்பு இந்திய ஆளும் வர்க்கத்துடனும் இலங்கையின் யூ. என். பி. அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்ததன் மூலமும் இந்த தேசியவாதக் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் அரசியல் வங்குரோத்தினையும் பிற்போக்கினையும் போதுமான அளவு நிதர்சனமாக்கியுள்ளது.

## புரட்சித் தலைமை

இந்தச் சகல அபிவிருத்திகளும தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் பாரிய தலன்களை இட்டு நிரப்ப அவசியமான அனைத்துலகவாத புரட்சித் தலைமை பற்றிய பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகமும் லியொன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்திய துணைக் கண்ட தொழிலாள வர்க்கத்தினை புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடி வருகின்றது. ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் சகிக்க முடியாத ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் ஆட்பட்டு வரும் மதக் குழுக்கள் தாழ்த்தப்பட்ட மக்களும், இளைஞர்கள் இல்லப் பெண்கள், கிராமப்புற ஏழை விவசாயிகளை அணிவரையும் தொழிலாள வர்க்கத்தினைச் சூழ புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதன்

# வடக்கு-கிழக்கில்: ஊரடங்குடன் குண்டுவீச்சும்

# 'சுட்டெரிக்கும்' இயக்கமும் உக்கிரம்

ஏப்ரல் 2ல் ஊரடங்குச் சட்டம் யாழ் மாவட்டத்தில் அமுலுக்கு வந்ததில் இருந்து, ஊர் காவற்துறை, காரைநகர், வேலணை முதலான இடங்களில் இடம் பெற்று வந்த காட்டுமிராண்டி குண்டுவீச்சு குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் தமிழ் விடுதலைப் போராளிகள் தொடுத்த தாக்குதலில் 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 48 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்ததைத் தொடர்ந்தும் யூ. என் பி. அரசாங்கத்தின் இந்த இனப் படுகொலை இயக்கம் மேலும் உக்கிரம் கண்டுள்ளது.

ஆனையிறவு முகாம் மற்றுமோர் மாங்குளம் ஆகுவதைத் தவிர்க்கும் ஒரு தொகை கையாலாகாத்தனமான நடவடிக்கைகளின் ஒரு பாகமாகவே ஊர்காவற்றுறை, வேலணை விமானக் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் ஏப்ரல் முதற் பகுதியில் இடம்பெற்ற மோதுதலில் 8க்கும் அதிகமான கடற்படையினர் இறந்ததாக அரசினது வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் குறிப்பிட்டது தெரிந்ததே.

வடக்கில் ஊரடங்கு பிறப்பித்து இக்குண்டு வீச்சில் இறங்கிய அதே வேளையில் கிழக்கில் அரசபடைகள் 1989/90ல் நாட்டின் தென்பகுதியில் கையாண்ட 'சுட்டெரிக்கும்' இயக்கத்துக்குச் சமமான ஒன்றை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய இன மக்களுக்கு எதிராக ஆரம்பித்துள்ளது. தெற்கில் இந்த 'சுட்டெரிக்கும்' இயக்கத்துக்குத் தலைமைதாங்கிய மேஜர் ஜெனரால் சிசில் வைத்தியரத்ன கிழக்கிலங்கை தளபதியாக நியமனம் பெற்றதைத் தொடர்ந்தே தலையற்ற 'சடலங்கள்' மட்டக்களப்பு, அம்பாறை சந்திகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 27ம் 28ம் திகதிகளில் மட்டக்களப்பு இருதயபுரம், கல்வடி பாலம் முதிய இடங்களில் தலைகள் வெட்டிக்கப்பட்ட நான்கு சடலங்கள் இங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கிருந்து வரும் தகவல்களின்படி கழுத்தின் அடியில் வடிவிலான வெட்டுக்கள் போடப்பட்டே இக்கொலைகள் செய்யப்பட்டுள்ளன. இங்ஙனம் 30க்கும் அதிகமான சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டமெங்கும் ஒரு பயப் பிராந்தி ஏற்பட்டுள்ளது. சாதாரண வாழ்க்கை நடவடிக்கைகளை ஒடுக்கப்படும் மக்கள் பகல் 12 மணியுடன் முடித்துக்கொண்டு வீடுகளுக்குள் அடங்கிக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையை இந்த ஆட்கடத்தலும் கொலைகளும் உருவாக்கியுள்ளன.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் படைகளுக்கும் இடையில் இரண்டு வாரங்களுக்குமேலாக இடம் பெற்றுவரும் கடும் மோதுதலைத் தொடர்ந்து, இராணுவ முகாம்களைச் சூழவுள்ள பகுதியில் அப்பாவி ஏழை மக்களின் குடியிருப்புக்கள் அனைத்துமே விமானக் குண்டு வீச்சுக்களால் நாசமாக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பிரான்சிய வைத்திய குழுவினர் மேல் இடம்பெற்ற குண்டுவீச்சில் டாக்டர் தாதிமார் உட்பட்ட 4வர் காயமடைந்துள்ளனர். மடு வவுனியா வீதியில் இடம்பெற்ற இத்தாக்குதல்களின் ஒரே இலக்கு, வரையறுக்கப்பட்ட அற்ப சொற்ப வைத்திய உதவிகளும் ஒடுக்கப்படும்தமிழ் மக்களைச் சென்றடையா வண்ணம் தடுப்பதே.

பலாலி விமானத் தளத்தைச் சூழவுள்ள பகுதியில் தமது பிடியை விஸ்தரிப்பதில் ஈடுபட்டு வந்த இனப்படுகொலைப் படையினர் இன்று அந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகளை காரைநகர் கடற்படை முகாம் பகுதியிலும் கடைப்பிடித்து வருகின்றனர். ஏப்ரல் 1ம் திகதி அவர்களின் விஸ்தரிப்பு முஸ்திபுகளை பற்றி எமது யாழ்/நிருபர் எழுதுகையில் குறிப்பிடுவதாவது: ''ஏப்ரல் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு காரைநகர் ஜே. நோர் காவல் அரண்களில் இருந்து இராணுவத்தினர் வடக்கு—கிழக்காக முன்னேற முயன்றனர். புலிகளும் இராணுவத்தினரும் மோதிக் கொண்டனர். ஒரு 'பொம்பரும்' ஹெலிகொப்டரும் இரவு தாக்குதலில் ஈடுபட்டன. காரைநகர் C. T. B டிப்போ பகுதி ஏராளமான ஷெல் வீச்சுக்கு இலக்காகியது. 3 புலிகள் களத்தில் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 2ம் காரைநகரில் அவ்ரோ விமானம் குண்டுவீசியது. அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெற்ற இக்குண்டுவீச்சால் பல வீடுகளும் தண்ணீர் தாங்கி சட்டிடங்களும சேதமாகின. இங்கு கிட்டத்தட்ட 15 பீப்பா குண்டுகள் வீசப்பட்டுள்ளன. ஏப்ரல் 3 புதனன்று 'பொம்பர்கள்' காரைநகரையும், ஊர்காவற்துறையையும் வலம் வந்த படியே இருந்தன. பெருமளவிலான ஷெல் வீச்சுக்களோடு அவ்ரோ விமானம் 10 பீப்பா குண்டுகளையும் வீசியது; காரைநகர் முழுவதும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. 3—4 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களும் கூட இப்புகை மண்டலத்தைக் காண முடிந்தது. ஹெலிகளும் பொம்பர்களும், அவ்ரோக்களும் சுற்றி வட்டமிட்ட மாதிரியை நோக்கிய போது வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற பாணியில் கண்மூடித்தனமான தாக்குதல் இங்கும் இடம் பெறுமோ என்ற பீதி அதிகரித்த வண்ணமே இருந்தது''.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின் பேரில் நாட்டின் ஏனைய பாகங்களில் இடம் பெறும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும், ஸ்ரீ. ல. சு. க தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் போட்டி போட்டுக் கொண்டு தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரங்களில் ஈடுபட்டுக் கொண்டுள்ள நிலையிலேயே இந்த இராணுவ பயங்கரங்கள் வட — கிழக்கில் இடம் பெற்று வருகின்றன. தமிழ் ஒடுக்கப்படும் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் இந்த இனவாத யுத்தமும் பிரச்சாரமும் இடம் பெற்று வரும் அதே வேளையில் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையின் பேரில் தொழில், வாழ்க்கைத்தரம், சேமநல சேவைகள் உதவிமானியங்களை துடைத்துக்கட்டும் நடவடிக்கைகளில் யூ என். பி, அரசாங்கமும் முதலாளிகளும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர். இக்கொடிய தாக்குதல்களுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தின வர்க்கப் போராட்டம் வெடித்து எழுமோ என்ற பீதி ஆட்சியாளர்களையும் ஆளும் வர்க்கத்தையும் இம்மனித வேட்டைகளில் தொடர்ந்து ஈடுபடத் தூண்டியுள்ளது.

சமசமாஜ — ஸ்டாலினிச தலைவர்கள் இந்த இனவாதப் பிரச்சாரங்களில் வெளிவெளியாகக் கலந்து கொள்வதன் மூலம் தொழிலாள வர்க்கப் போராட்டத்தை நசுக்கி, யூ என். பி. அரசாங்கத்தின் மிலேச்சத்தனங்களுக்கு முண்டு கொடுக்கிறார்கள். நவசமசமாஜ மத்தியவாதிகள் தமிழ் தேசிய இனத்துக்கும், தொழிலாள வர்க்கத்துக்கும் முதுகில் குத்தும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளனர். சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும் என மோசடியான முறையில் கூறிக்கொள்ளும் இவர்கள் விடுதலைப் புலிகளை நசுக்கும் பேரில் இடம் பெற்று வரும் இன்றைய இனவாத யுத்தத்துக்கு ஆதரவு அளிக்கிறார்கள். யுத்தத்தினால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்க்க சமஷ்டி முறையை விடுதலைப் புலிகள் ஏற்கவேண்டும் என மறு ரீதியிலும் இவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் தலைமை ஏகாதிபத்தியவாதிகள், இப்பிராந்தியத்தின் முதலாளிகள், இலங்கை முதலாளிகளின் பின்னால் வயிறளப்பதன் மூலம் தமது வங்குரோத்து அரசியலை காட்டிக்கொள்வதோடு இலங்கை முதலாளிகளின் இரத்தக் களரிகளுக்கும் கைகொடுக்கின்றார்கள். இந்திய ஆட்சியாளர்களை நடுவர்களாகக் கொண்டு கூட்டப்படும் பேச்சுவார்த்தைகளிலேயே கலந்து கொள்வோம் என விடுதலைப் புலி தலைவர்கள் விடுத்து வரும் அறிக்கைகள் இதை நிரூபித்துக்கொண்டுள்ளது. அத்தோடு ஏப்ரல் புத்தாண்டு இரவு மொனராகலை விவசாய குடியிருப்பு ஆத்திமலையில் நடாத்திய தாக்குதலின் மூலம் 17 கிராமத்தவர்களைப் படுகொலை செய்ததன் மூலம் சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் நடாத்திவரும் இனவெறி யுத்தத்தினை நியாயப்படுத்தும் புதிய சுருதி சேர்க்கும் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலி தலைமை ஈடுபட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் சிங்கள கிராமியவாசிகள் இலட்சக்கணக்கில் வேட்டையாடிய யூ. என். பி. அரசாங்கம் சிங்கள மக்களின் காவலனாக தனனைக் காட்டிக் கொள்ள மட்டுமன்று, இனவெறி ஆட்சி நீடிப்புக்களுக்கு 1947ல் இருந்து சிங்கள ஆளும் வர்க்கம் கையாண்ட இனவாத உத்தியை தொடரும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

இலங்கை — தமிழ்ஈழம் பிரதேசங்களில் வாழும் தொழிலாள வர்க்கத்தின் கூட்டிணைப்பின் மூலம்பிரேமதாச அரசாங்கம உட்பட இலங்கை இனவாத கொலைகார இயக்கத்துக்கு எதிராக தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின உரிமைகளைக் காக்கும் போராட்டத்துக்கு தொழிலாள வர்க்கத் தலைமை தாங்க வேண்டும். இதன் மூலமே விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்கு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.



வே. பிரபாகரன்

'தாய்நாடு' 'இனம்' காக்கும் சாட்டில் யூ. என். பி.யும் முதலாளித்துவ ஸ்ரீ. ல சு க.வும் நடாத்திவரும் மோசடிகளுக்கு எந்தவொரு தொழிலாளியும் பாதந்துவிடக்கூடாது.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்து! இலங்கை இராணுவத்தை வடக்கு — கிழக்கிலிருந்து வாபஸ் பெறு! என்பதன் அடிப்படையில் தொழிலாள வர்க்கம் தனது வர்க்க இயக்கங்களை அணிதிரட்ட வேண்டும். இலங்கை— தமிழ்ஈழம் சோசலிச குடியரசினை நிறுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக போராட்டத்தில இணையுமாறு நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்,

## உலக யுத்தத்துக்கும் . . .

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசினைத் தூக்கி வீசி, சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை நிறுவுவதே அப்போராட்டத்தின் இலக்காகும். உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கின் அடிப்படையில் இடம் பெறும் இப்போராட்டத்துடன் இணைவதென சகலதொழிலாள வர்க்கப் போராளிகளும், ஒடுக்கப்படும் மக்களும் இந்த மே தினத்தில் தீர்மானம் செய்ய வேண்டும்.

● யூ. என். பி யை வெளியேற்று!

## இடைமருவு வேலைத்திட்டம். . .

(13-ம பக்கத் தொடர்ச்சி)

தமிழ், சிங்கள மொழிகளில் வெளிவந்துள்ளமை பப்லோவாதத்தால் தாற்றமெடுத்த சமசமாஜக் கட்சிக்கும், ஸ்டாலினிஸ்டுகளுக்கும், பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் புதிய ஏஜண்டுகளாகப் பதிவுசெய்து கொண்டுள்ள நவசமசமாஜக் கட்சியினருக்கும் ஓர் தலையடியாக இருக்கும்.

இந்தவேலைத்திட்ட பத்திரத்தினை வாசிக்கும்எவரும்ட்ரொட்ஸ்கிசத்துக்கு உரிமை கோரும் நானாவித சந்தர்ப்பவாத, மத்தியவாத குழுக்களின் அரசியலுக்கும் புரட்சிகர வேலைத்திட்டத்துக்கும் இடையேயான ஆதாளபாதாளத்தைப் புரிந்து கொள்ளலாம். ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினை நாசமாக்கத் தொழிற்பட்ட பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளுக்கு எதிராக நானகாம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நடாத்திய வெற்றிகரமான போராட்டத்தின் ஓர் அங்கமாக இந்நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு, பிரசுரமும் அமைகிறது.

நாம் வாழும் இந்த யுகத்தில் மனித இனம் முகம் கொடுக்கும் மிகவும் தீர்க்கமான பிரச்சினையால—தலைமைப் பிரச்சினையை ஆய்வு செய்யும் இந்நூல், பாரம்பரிய சந்தர்ப்பவாதத் தலைமைகளின் பிடியில் இருந்து தொழிலாள வர்க்கத்தினை விடுவித்து சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டம் பக்கம் வென்றெடுக்க வழிகாட்டுகின்றது.

முக்கிய ஏகாதிபத்திய நாடுகளிலும் காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளிலும், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலும் தொழிலாள வர்க்கத்தின் வேலைத்திட்டத்தினை அபிவிருத்தி செய்து கொண்டுள்ள இந்நூல் தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் வேலைத்திட்டப பிரச்சினையையும கவனத்துக்கெடுத்துள்ளது. இவ்வேலைத்திட்டம், லியோன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டையும், பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டதாகும்.

இந்நூலின் இறுதியில் நான்காம் அகிலத்தின் அரசியலமைப்பு இணைக்கப்பட்டுள்ளது. பு. க. க. அங்கத்தவரான தோழர் எம். இராசேந்திரனால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூலின் முன்னுரையை தோழர். எம். அரவிந்தன் எழுதியுள்ளார். இந்நூலின் முகப்பு அட்டைவேலைப்பாடுகள் ரணில் அல்விட்டிகலவால் செய்யப்பட்டுள்ளன.

சிங்கள. தமிழ் மொழிகளில் வெளிவந்துள்ள இந்த மார்க்சிச வேலைத்திட்டத்தினை படிக்குமாறும் கலந்துரையாடுமாறும் நாம் சகல தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும வேண்டுகின்றோம். 90, 1வது மாவிகாகந்த ஒழுங்கை மருதானையில் உள்ள பு. க. க, தலைமையலுவலகத்தில் இதனை விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

● மக்கள் முன்னணிகளை நிராகரி!

● இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை கட்டி எழுப்பு!

● இந்தியத் துணைக்கண்ட சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை நோக்கி முன்னேறு!

● புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பு!

படிப்பகம்

# இந்தியாவில் ரொக்சியிஸ்டுக்களின் மீதான துன்புறுத்தல்களை கண்டனம் செய்

..ர்வதேசரீதியாக தொழிலாளர் இயக்கம் கட்டாயமாகவும் ..டமையாகவும், இந்திய ரொக்சியத கட்சியான சோசலிசத் தொழிலாளர் ..கழகத்தின் மீது தற்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் ..ட்டமிட்ட துன்புறுத்தல் நடவடிக்கைகளை கண்டனம் செய்ய ..வண்டும்.

..ந்தியாவில் அதிகரித்துக் கொண்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புக் ..ளின் மத்தியில், அரசபடைகள் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் ..குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் ..கழகத்தின் மீது இலக்கு வைத்திருக்கின்றன.

..மிக நெருக்கடிகள் மோசமாகிக் கொண்டிருக்கும் வேளையில் ..சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அங்கத்தவர்களை வாயடைக்கச் ..செய்யும் நோக்கத்தில் அவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள் ..ப்பட்ட தொடர்ந்த பயமுறுத்தல் முயற்சிகள் முழுமையாக ..தால் விளைந்துள்ளன.
..00 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட இந்தியாவில் ..டுப்படுத்த முடியாமல் வளர்ந்துவரும் பாரிய அதிக நெருக்கடியை ..ர்க்க முடியாத தங்களது கையாலாகாத் தனத்தை மூடிமறைப்பதற்காக ..தலாளித்துவ அரசியல் வாதிகள் இனவாதத்தையும், சாதிவெறியையும் ..மதம், மேலும் தூண்டிவிடுகையில், சோசலிசத் தொழிலாளர் கழகம் மட்டுமே ..ன் தொழிலாளர் இயக்கத்திற்குள், இந்திய தொழிலாள வர்க்கத்தை ..இலங்கையிலும், தமிழீழத்திலும் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுத்துவதற் ..காகப் போராடும் ஒரேயொரு கட்சியாகும்.
..ந்போதய தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் 200 க்கும் மேற்பட்ட ..க்கள் கொல்லப்பட்டுள்ள நிலைமைகளில் பொலிஸார் இந்திய ..ரொக்ஸிஸ்டுக்களின் மேல் கவனம் செலுத்துவது மிகவும் மோசமான ..பயங்கரங்களுக்கான அறிகுறியாகும்.
..டந்த கிழமை வட-கிழக்கு மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் 1000 ..சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு மேல் பொலிஸார் துப்பாக்கிப் ..பிரயோகம் செய்ததினால் 12 தொழிலாளர்கள் கொல்லப்பட்டதுடன் ..50க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தொழிலாளர்கள் அரசுக்கு ..சொந்தமான டாலா (Dalla) சிமெந்து தொழிற்சாலை தல்மியா (Dalmia) ..தொழில் நிறுவனத்துக்கு விற்கப்படுவதை தடை செய்வதற்காக ..தொழிற்சாலை வாசலில் மறியல் செய்தனர். புதுடெல்லிக்கு 310 மைல்கள் ..கிழக்காக புனித இந்து நகரமான வாரணாசிக்கு அண்மையில் ..சனபந்ரா (Sunebhadra) நகரத்தில் அமைந்துள்ள இந்த தொழிற்சாலை உத்தரப் பிரதேச சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதாகும். கடந்த நான்கு கிழமை அரசாங்கம் இந்த தொழிற்சாலையை அதனது புதிய தனியார் சொந்தக்காரர்களுக்கு கையளிக்க விழைந்தது.
பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக அருகில் உள்ள ஒப்ரா (Obra) அனல் மின்சார நிலையத்தைச் சேர்ந்த 7000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியதால் இப்பிரதேசம் பாரிய மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு உட்பட்டது.
இத்தொழிற்சாலை தனியார் துறைக்கு மாற்றுவதற்கான தீர்மானம் தேசிய, மாநில அரசுகளின் தனியார் மயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். தனியார் மயப்படுத்தலின் போது வேலைகளை உத்தரவாதம் இல்லாது ஒழிக்கப்படுவதுடன் வேலை நிலைமைகள் பாரியளவில் தாழ்த்தப்படும். இந்த வேலைத்திட்டம் தொழிலாள வர்க்கத்தின் கடுமையான எதிர்ப்பை சந்தித்தது.

..டாலா (Dalla) தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் வேலை நிறுத்தங்களும் ..ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து வருவதை ஏற்படுத்தியது தான் தனியார் மயப்படுத்துதலுக்கு காரணமென அரசு நியாயப்படுத்தியது.
அசோசியேட்டட் பிரஸ் (Associated Press) செய்தி நிறுவனம் இந்தியாவின் சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களின் மாதாந்த சம்பளம் 75 இலிருந்து 100 டொலர்கள் வரையென அறிவித்துள்ளது.

சோசலிசத் தொழிலாளர் கழகம் இரண்டு வேட்பாளர்களை இந்த ..தேர்தலில் நிறுத்தியுள்ளது. தென் மாநிலமான தமிழ்நாட்டின் தலைநகரான ..சென்னையில் புகழ்பெற்ற கர்நாடிக் புடவை ஆலையான (Buckingham ..d Carnatic Textile Mills) தொழிலாளியான தோழர் மோகன் ..லோக்சபா தேர்தல் தொகுதியான வட சென்னையில் கட்சியின் ..வேட்பாளராக போட்டியிடுகின்றார். ..தொழிற்சங்கத்தில் முன்னணி நிர்வாகக்குழு அங்கத்தவரான ..போட்டியாளர் ..மாநகரம் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் வில்லிவாக்கம் தொகுதியில் ..கட்சியின் வேட்பாளராவார்.

..மே 21ல் ராஜிவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு முன்பிருந்தே இந்திய ரொக்ஸிஸ்ட்டுக்கள் அரசின் துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டனர். ஏப்ரல் 23ல் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பத்திரிகையான "தொழிலாளர் பாதையின்" ஆசிரியரான தோழர் S. ராம் சென்னையில், "இலங்கையில் இனவாத யுத்தத்திலும், கிராமத்துப் படுகொலைகளிலும் பின்னணியும் - தீர்வும்" என்ற தலைப்பில் ஒரு பகிரங்க சொற்பொழிவாற்றிய இரண்டு நாட்களுக்கிடையில் பொலிஸ் ஒரு வித அச்சுறுத்தும் வகையில் பாரியளவில் புலனாய்வு விசாரணைகளையும் மேற் கொண்டது. ஏப்ரல் 25ம் திகதி நாகமணிக்கு பொலிஸ் அதிகார அலுவலகத்தைச் சேர்ந்த குமாரி என்று தன்னை அடையாளம் காட்டிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சென்னையில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தலைமையகத்தில் தோழர் ராமை சந்திக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். இதை அடுத்த நாட்களில் இதே பொலிஸ் உத்தியோகத்தர் தோழர் மோகன் இன் உறவினர்கள் வீட்டுக்குச் சென்று அவரது கடந்தகாலம், தனிப்பட்ட வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை தொடர்பாக விசாரணை நடாத்தினார். பின்னர் மே மாதம் 12ம் திகதி குமாரி தோழர் மோகன் இன் வீட்டுக்கு சென்றதுடன் அதே தினத்தில் பெரம்பூர் ..நிலையில் B+C ஆலை தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதிகளின் வாசலில் தோழர் மோகன் ஐ நேருக்கு நேர் சந்தித்தார். குமாரி அவரிடம் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் ஏனைய அங்கத்தவர்களைப் பற்றியும், கட்சி .. தொழிலாளர்களின் வேலைநிறுத்த மொன்றில் தலையிட்டிருக்கின்றதா என்பது பற்றியும் விசாரணை செய்தார்.

..மே 16ம் திகதி காலையில் அண்ணா நகர் மேற்கு விசேட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சேவகர் சிவலிங்கம் (P.C. 2179) தோழர் கைலாசத்தின் வீட்டுக்கு விஜயம் செய்தார். தோழர் கைலாசத்தை வீட்டில் காணாததால் இந்த உத்தியோகத்தர் அன்று மாலை திரும்பவும் வந்து கைலாசம் கண்டிப்பாக தன்னை திருமங்கலம் பொலிஸ் நிலையத்தில் சந்திக்க வேண்டுமென ஒரு தகவலும் கொடுத்திருந்தார்.

மே 21 இல் இந்த பொலிஸ் துன்புறுத்தல்களை ஒரு முடிவுக்கு கொண்டு வரும்படி சோசலிசத் தொழிலாளர் கழகம் கோரிக்கை விடுத்தது. சென்னைப் பொலிஸின் பொது நிர்வாகிக்கு தோழர் மோகன் அனுப்பியுள்ள கடிதத்தில்: "விசாரணை செய்யும், இதுபோன்ற விசாரணைக்கு உட்படுவதுமான மேலே கூறப்பட்ட முயற்சிகள் சட்டபூர்வமாக உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியான எங்களது ஸ்தாபனத்தின் அங்கத்தவர்களதும், ஸ்தாபனத்தினதும் அரசியல் உரிமைகள் மீதும் சிவில் உரிமைகள் மீதும் சட்ட விரோதமான அத்துமீறல்களை உருவாக்குகின்றது. இந்த நடவடிக்கைகள் சோசலிசத் தொழிலாளர் கழகம் தனது கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் பிரச்சாரம் செய்யும் சட்டரீதியான உரிமையுள்ள நடவடிக்கைகளுக்கும், அத்துடன் வட சென்னை லோக்சபா தொகுதிக்கும், வில்லிவாக்கம் சட்டசபைத் தொகுதிக்குமான அதனது வேட்பாளர்களுக்கான தேர்தல் பிரச்சார வேலைகளை மேற்கொள்ளுவதற்கும் ஒரு இடையூறாகும்."

தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிகர நிரலை அடக்குவதற்கான இவர்களது முயற்சிகளில் சென்னை தொழிற்சங்கத்தின் (MTU) ஸ்டாலினிச தொழிற்சங்க அதிகாரத்துடன் பொலிஸ் பகிரங்கமாக இணைந்து செயற்படுகின்றது. கடந்த வருடம் நவம்பர் 13இல் சென்னை தொழிற்சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட B+C மில் தொழிலாளர்களின் கூட்டமொன்றின் போது தோழர் ராம் தொழிற்சங்க வாசலில் வைத்து 30 குண்டர்களினால் தாக்கப்பட்டார்.

இத்தாக்குதலை ஒழுங்கு செய்தவரான வரதராஜன் MLU வின் தலைவரும், ஸ்டாலினிச இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் அங்கத்தவருமாவார். 1989இல் இவருக்கெதிராக தோழர் ராம் தொழிற்சங்கத் தலைவர் பதவிக்காக போட்டியிட்டார். ராம் மீது தாக்கியவர்களுக்கு தலைமை தாங்கிய குமரேசன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) அங்கத்தவரும், MLU வின் நிர்வாகக்குழு அங்கத்தவருமாவார்.

இத்தாக்குதலின் போது அண்மையிலுள்ள புளியந்தோப்பு பொலிஸ் நிலையத்தின் பொலிஸ்காரர்கள் ஒரு வித தலையீட்டையும் செய்யாது மௌனமாக இருந்ததுடன் தாக்குதல் முடிந்தவுடன் தோழர் ராமை கைது செய்து அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களையும் சோடித்தனர்.

சோசலிசத் தொழிலாளர் கழகம் அவர்களுக்கெதிரான தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் துன்புறுத்தல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவரும்படியும், தோழர் ராமுக்கு எதிரான பொய்க்குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்கும்படியும் நிர்ப்பந்தம் செய்கின்றது. சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்கு மேலான தாக்குதல்கள் தொழிலாள வர்க்கம் முழுமைக்குமான தாக்குதல்களின் ஒரு பகுதியாகும்.

கண்டனக் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

THE DIRECTOR GENERAL OF POLICE
TAMIL NADU
STATE POLICE HEADQUARTERS
DR. RADAKRISHNAN SALAI
MADRAS 600 004, INDIA


பிரதிகள் அனுப்ப வேண்டிய முகவரி:-


**Tholilalar Pathai**
**POSTFACH 1609**
**7120 BIETIGHEIM-BISSINGEN**


## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடு

ஏகாதிபத்தியத்திற்கும், ஸ்டாலினிசத்திற்கும் எதிராக உலகத் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசப்புரட்சிக்காக அணிதிரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடுகள்.

நாள்தோறும் கூர்மையடையும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளில் வெடித்துக் கிளம்பும் வர்க்கப் போராட்டங்களுக்கு ஆயுதபாணியாகுவதற்காக ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்.





www.padippakam.com



## தொழிலாளர் பாதை பத்திரிகைக்கு

## 300 புதிய சந்தாதாரர்களை வென்றெடுத்தல்

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப்பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை தொழிலாளர் பாதையாகும். தொழிலாளர் பாதைக்கு 300 புதிய சந்தாக்களை வென்றெடுக்கும் பிரச்சாரத்தை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை ஆடி'91 இலிருந்து ஆரம்பித்துள்ளது. இந்த இலக்கை மார்கழி'91 முடிவதற்குள் அடைவதற்கு ஒத்துழைப்புத்தரும்படி தொழிலாளர்களையும், இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

உலகரீதியிலும், இலங்கையிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை தொழிலாளவர்க்க அனைத்துலகவாத 'வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே போராடுகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையில் ஈராக்குக்கு எதிராக இடம் பெற்ற யுத்தத்தில் ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டமை தெரியவந்தது. ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளை கொள்ளையடிக்கும், உலகினை மீண்டும் கூறுபோடும் யுத்த காலப்பகுதிக்குள் மனித இனத்தினை மீண்டும் இழுத்துச் செல்கின்றனர். இந்த ஏகாதிபத்திய நெருக்கடி பிரமாண்டமான புரட்சிகரப் போராட்டங்களை தூண்டிவிடுவதோடு முதலாளித்துவத்தினை பூகோளத்தில் இருந்து துடைத்து கட்டுவதற்கான நிலைமைகளையும் சிருஷ்டித்துள்ளது.

இலங்கையில் பிரேமதாசா அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் இந்தக் கொலைகார நலன்களுக்குச் சேவகம் செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர், கிராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்கும் பொருட்டு கொடிய இராணுவ ஆட்சியினை உண்டுபண்ண முயற்சித்துக்கொண்டுள்ளது.

யூ.என்.பி.-உலகவங்கித் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளவர்க்கத்தின் புதிய போராட்டங்கள் வெடித்துள்ளன. கிராமப்புற ஏழைகள் பிரேமதாசா அரசாங்கத்தின் கொடிய பயங்கர ஆட்சியையிட்டு பெரும் வெறுப்பு அடைந்துள்ளனர். வட-கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ்தேசிய இனத்தினர் பிரேமதாசா அரசாங்கத்தின் யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ளனர். இந்த நிலைமையிலேயே யூ.என்.பிக்கும், முதலாளித்துவ சி.ல.சு. கட்சிக்கும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. தலைவர்களும், மற்றும் மத்தியவாத அமைப்புக்களின் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பு.க.க. தொழிலாள வர்கத் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டச் செய்யும் போராட்டம் மிகவும் தீர்க்கமானது. துரோகத் தலைமைகளை அகற்றி ட்ரொட்ஸ்கிசத் தலைமையை தொழிலாளவர்கத்துள் ஸ்தாபிதம் செய்ய வேண்டும். எமது கிளைக்கு இப் போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது. இந் நிலையில் தொழிலாளர் பாதை பத்திரிகைக்கு சந்தாதாரர் ஆகவேண்டியது பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கும் ஒவ்வொரு தொழிலாளிக்கும், இளைஞர்களுக்கும் மிகவும் அத்தியாவசியமானது.

எனவே தொழிலாளர் பாதைக்கு சந்தாதாரராக முன்வாருங்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :-

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN


**தொழிலாளர் பாதை**

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் 'தொழிலாளர் பாதை' மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

பெயர் ______

விலாசம் ______

______

______ திகதி ______

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடு**




**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடு**

பெப்ரவரி 25

தேர்தலின் பின்னைய

நிகரகுவா படிப்பினைகள்

வேர்க்கஸ் லீக் அரசியல் குழு அறிக்கை


*Printed in West Germany*
*Published by Neue Arbeiterpresse,*
*Alfredstr. 71, D - 4300 Essen 1*

படிப்பகம்